# சோதிடமலர்

## SOTHIDA MALAR




துந்துபி சித்திரை (14-4-82—14-5-82) ரூபா 6-50

13/4/82

உ

# சோதிடமலர்


## ஐந்தாண்டுச் சிறப்புமலர்

ஆசிரியர்: பிரம்மஶ்ரீ கி. சதாசிவசர்மா (சம்ஸ்கிருத பண்டிதர்)

மலர் 5 | துந்துபி ௵ சித்திரை ௴ (14-4-1982) | இதழ் 1


யம் ப்ரஹ்மா வருணேந்த்ர ருத்ரமாருத:
ஸ்துன்வந்தி திவ்யை ஸ்தவை:
வேதை: ஸாங்கபதக் ரமோபநிஷதை:
காயந்தி யம் ஸாமகா: |
த்யாஞ வஸ்தித தக்கதேன மனஸா
பஸ்யந்தி யம் யோகிஞ
யஸ்யாந்தம் ந விது: சுரா சுரகஞ
தேவாய தஸ்மை நம: | |

பிரம்மா, வருணன், இந்திரன், ருத்திரன், வாயு முதலிய தேவர்கள் யாரைப் பரிசுத்தமான துதிகளால் துதிக்கின்றுர்களோ, சாமகான பாடகர்கள் எவரை அங்க, பதக்கிரம, உபநிஷத் வேதங்களால் பாடுகின்றுர்களோ, யோகிகள் தமது தியான முதிர்ச்சியால் யாரிடம் மனதை ஈடுபடுத்துகிறுர்களோ; தேவ, அசுர கிணங்கள் எவரின் முடிவை அறிகிருர்களில்லையோ அந்த மேலான இறைவனுக்கு வணக்கம்.

## இந்த இதழில் ......................


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாள் எப்படி | ... 2 |
| 2 | சித்திரைமாத வானியற்காட்சி | ... 7 |
| 3 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? | ... 8 |
| 4 | கிரகங்களும் அரசியலும் | ... 17 |
| 5 | உங்கள் மச்சங்கள் | ... 22 |
| 6 | உங்கள் புத்தாண்டுப் பலன் | ... 23 |
| 7 | தமிழ் ஈழம் மலருமா? | ... 42 |
| 8 | ஜன்ம இக்கினம் | ... 43 |
| 9 | புதுவருட பலன்கள் | ... 45 |
| 10 | அதிக - க்ஷய மாதங்கள் | ... 48 |
| 11 | சந்தேக நிவிர்த்தி | ... 51 |
| 12 | விஷகன்யா தோஷம் | ... 53 |
| 13 | காலக்கணக்கு ஏற்பட்ட வரலாறு | ... 55 |
| 14 | நவக்கிரகங்களும், சாந்தியும் | ... 57 |
| 15 | பிறநாட்டுப் பிரயாணம் | ... 61 |
| 16 | அங்கலக்ஷணத்தின் அனுமானங்கள் | ... 65 |
| 17 | வளரும் விண்ணியல் | ... 67 |
| 18 | வாழ்க்கையும் சோதிடமும் | ... 69 |
| 19 | அறிவுச் சுரங்கம் | ... 71 |

# ஐந்தாவது ஆண்டில்....

''வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழ
பான்மை தரு செய்ய தமிழ்ப்பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப்பரவி அஞ்சலி செய்விப்பாம்''

ஐந்தாவது ஆண்டில் காலடி வைக்கும் சோதிடமலர்க் குழந்தையை உங்கள் கைகளில் தவழ விடுகின்றோம். மாதமோர் இதழாகி துந்துபி வர்ஷமிதில் ஐந்தாவது ஆண்டை அடைந்துள்ள பெருமை வாசகர்களாகிய உங்கள் ஆதரவாலே என்றால் மிகையாகாது.

''மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் மக்களெல்லாம்'' — என்னும் பேரவாவின் துணைகொண்டு பல்சுவை அம்சங்களோடு, பெரியோர்களின் ஆசியுடன் ஐந்தாவது ஆண்டுச் சிறப்புமலரை மகிழ்ச்சிப் பெருக்குடன் ஈழத்திருநாட்டில் மட்டுமல்ல உலகெங்கும் மணம்பரப்ப உங்கள் கைகளில் தருகிறோம்.

''ராஜா அயம் தார்மிகோ பவந்து'' என்னும் கூற்றுப்படி அரசாட்சி நடைபெறவேண்டி இப்புத்தாண்டில் பல கஷ்டங்களின் மத்தியிலும், மக்கள் தமது ஆன்மீகக் கொண்டாட்டங்களையும் தவறாது நடாத்திவரும் இச்சந்தர்ப்பத்தில் ''துந்துபி'' ஆண்டிலும் துன்பங்கள் நீங்கி தும்பிக்கையான் பாதம் பணிந்து தப்பாமல் சீர்கள் பலவும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

இவ்வாண்டு புதிய அம்சமாக மிளிரும் கட்டுரைப்போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் பரிசு பெற்ற கட்டுரையாளருக்கு வாழ்த்துக்களும் கூறிக்கொண்டு மலரின் சிறப்பிற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த சோதிட விற்பன்னர்களுக்கும், மலரின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆசிகள் அளித்தோர்க்கும், என்றும் தளராது ஆதரவு நல்கிவரும் சந்தா அன்பர்களுக்கும் கலைச் செல்வியின் கடாக்ஷம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு, இப்புத்தாண்டில் யாவரும் நலம் பல பெற்றுச் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்க என மனமார வாழ்த்துகின்றோம்.

ஆ—ர்

# வாழ்த்து

உ
முருகா

### நேரிசை வெண்பா

மாத இதழாய் மலர்ஜோ திடநன்னூல்
நாதன் திருமுருகன் நல்லருளால் - ஆதரவாய்
அன்பர் துணைபுரிய ஆண்டுபல நீடியே
இன்பமுடன் வாழ்க இனிது.

அன்பன்
கிருபானந்தவாரி

யாழ். பல்கலைக் கழக இந்து நாகரீகத் துறைப்
பேராசிரியர் கலாநிதி
## சிவஸ்ரீ. கா. கைலாசநாதக் குருக்களின்
# ஆசியுரை

சோதிடமலரின் ஐந்தாவது ஆண்டிதழ் புத்தாண்டுடன் நறுமணங் கமழ வெளி வருவதாக அறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

இயற்கையில் உள்ள பஞ்ச பூதங்களாலாய எங்கள் சரீரம் இயற்கைத் தாக்கங் களால் பாதிக்கப்படுவதை அடிக்கடி உணர்கின்றோம். அவ்வாறே பிரபஞ்சத்திலுள்ள கிரகங்களின் சஞ்சாரங்களுக்கும், சலனங்களுக்குமேற்ப எமது வாழ்விலும் பல பாதிப் புக்கள் ஏற்படுகின்றன. இவற்றை எடுத்துரைப்பன சோதிட நூல்கள். இவ்விதம் உரைப்பவற்றை விளக்குபவர்கள் சோதிட வல்லுனர்கள். இவர்கள் கருத்துக்களை வெளிக்கொணர்ந்து பலருமறியத் தரும் வகையில் பிரகடனப்படுத்துவதற்கு சோதிடமலர் சோதிட மாத சஞ்சிகையாக, சிறந்த கருவியாக விளங்குகின்றது.

ஆண்டு தோறும் வெளிவரும் விசேட மலராக வடிவந் தாங்கி இக் கருத்துக்களை நுணுகி ஆராய்ந்து எழுதப்பட்ட விசேட விளக்கங்களுடன் வெளிவருவதால் இவ்வாண் டிதழ் மிகவும் பயன்தரவல்லதாகிறது. இவ்வித ஆண்டுமலர் வெளிவருவதை வரவேற் கின்றேன். வெளியீட்டாளர்களின் நன்முயற்சி மென்மேலும் வளர ஆசி கூறுகிறேன்.

யாழ். பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

கா. கைலாசநாதக்குருக்கள்

'தமிழ் நாடு, ஜோதிஷகேந்திர பரிஷத்' தின்
தலைவர், ஜோதிடபூஷணம்,

## பட்டாக்குறிச்சி ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய ஐயர்

அவர்களது

# வாழ்த்துக்கள்

ஐந்தாவது ஆண்டு
சோதிட மலருக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

மேலும் இச் சித்திரை மலர் சிறப்பாக வெளிவரவும்,
சோதிடமலரால் பலரும் பயன் பல பெறவும்
அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.
சுபம்.

ஜோதிடபூஷணம்
எஸ். சுப்பிரமணிய ஐயர்

கருங்குளம்,
தமிழ்நாடு.

யாழ்/சிவானந்த குருகுல அதிபர்
வித்யாசாகர, நியாய சிரோமணி

## பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

அவர்கள் அளித்த

# வாழ்த்துப்பா

"சந்தே காநும் நிவிர்த்திஞ்ச
ஜன்ம தைநந்திணம் பலம்
மாச ஹோர ப்ரபாவஞ்ச
வைவாஹிக சமஸ்திதிம்
க்ரந்தாநும் விமர்சனம் சைவ
போதயந்தீச பத்திரிகா

"ஜோதிஷாக்ய மலர்" நாம்னீ
லோகேஷுச விராஜதே
பஞ்ச வர்ஷ வயஸ்கேயம்
பால லீலாம் ப்ரகுர்வதீ
லங்காயாம் கேவலம் மாஸ்து
சர்வத்ர சரதாம் புவி"

—சந்தேக நிவிர்த்தி, மாச, நக்ஷத்திர, ஹோரா பலன், விவாக சம்பந்தமான பல விஷயங்களை வெளிக்கொணரும் இச் சோதிடமலர் உலகெங்கும் பிரகாசித்து வரும் இவ்வேளையில் இலங்கையில் மட்டுமல்ல, அகில உலகிலும் உலாவி நறுமணம் வீசட்டும்.

கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

93, 'ஹேரம்ப பவனம்'
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆவாழி அந்தணர் வாழி அருமறை யாகமங்கள் வாழி
பாவணர் தருகலைகள் வாழி வளர் பண்புடையோர் பரந்து வாழி
தேவாதி தேவரெல்லாம் தொழ நின்ற சீர் சைவம் சிறந்து வாழி
ஆவார வினை போக்கு மருளாளன் பதம் வாழி வாழி

துந்துபி ஸு சித்திரை மாதம்

## அகில உலக இந்து மகாநாடு

கௌரவ பிரதேச அபிவிருத்தி அமைச்சால் எமது தலைநகராம் கொழும்பில் நடைபெறவுள்ளதை அறிந்து, மட்டற்ற மகிழ்ச்சி பெறும் நாம், இம்மகாநாடு இந்து மதத்தவர்க்கு பல்துறையும், பல்கலையும் பயன்பெறும் வண்ணம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து நல்லாசிகள் கூறுகின்ரேம்.

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்களின்பம்
நல்குக உயிர்கட் கெலாம் நான்மறைச் சைவமோங்கி
புல்குக உலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழி!!





ஐம்பத்தைந்து ஆண்டுகள் அரும்பணி
புரிந்த மில்க்வைற் ஸ்தாபனம்
அன்பர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள்
விற்பனையாளர் வினியோகிப்பவர் யாபேருக்கும்
அன்புடை வாழ்த்துக்கள். துந்துபி
என்னும் தூயநல் லாண்டில்
மங்கலம் பொங்க உங்களை
வாழ்த்தும் மில்க்வைற் ஸ்தாபனத்திற்கு
ஆதரவு நல்குவீராக.

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

## யாழ்ப்பாணம்

# நாள் எப்படி ?

சித் 1 புத. (14-4-82) ஷஷ்டி பின்னிரவு 2-34 வ. மூலம்-மரணம். பி. இரவு 3-18 வரை, வருஷப் பிறப்பு, அதிகாலை 5-40—6-04 கைவிசேஷம் செய்யலாம். யோகம் நன்ருக இல்லாததால் விருந்துக் கொண்டாட்டங்களுக்கும், புதிய கருமங்களுக்கும் நன்றல்ல. இறைவழிபாட்டை மேற்கொள்க.

சித் 2 வியா. (15-4-82) ஸப்தமி பி. இ. 5-03 வ. பூராடம்-சித்தம் முழுவதும்- அன்ருட பணிகளைச் செய்யவும். நட்சத்திரம் நன்ருக இல்லாததால் புதிய கருமங்களை விலக்குக.

சித் 3 வெ. (16-4-82) அஷ்டமி முழுவதும், பூராடம்-மரணம் காலை 6-19 வரை, காலாஷ்டமி, சுபகருமங்களை விலக்குக.

சித் 4 சனி (17-4-82) அஷ்டமி - சித்தம் காலை 7-14 வரை, உத்தராடம் காலை 8-58 வரை, நடேசரபிஷேகம் அன்ருடபணிகளை மட்டும் செய்க.

சித் 5 ஞா (18-4-82) நவமி காலை 8-46 வரை, திருவோணம்-அமிர்தம் பகல் 11-01 வரை, காலை 8-46-ன் மேல் வித்தியாரம்பம், முதலிய கருமங்களை மேற்கொள்ள நன்று.

சித் 6 திங். (19-4-82) தசமி பகல் 9-33 வரை, அவிட்டம் பகல் 12-20 வரை, சித்தம், கரிநாள், விருந்துண், விவாகப்பேச்சு, பெரியோரைத் தரிசிக்க நன்று.

சித் 7 செவ். (20-4-82) ஏகாதசி பகல் 9-29 வ. சதயம் பகல் 12-51 வரை, மரணயோகம், ஸர்வ ஏகாதசிவிரதம். மகாவிஷ்ணு வழிபாட்டால் பாபங்கள் நீங்கும். யோகம் நன்ருயில்லை. புதிய கருமங்களை விலக்குக.

சித் 8 புத. (21-4-82) துவாதசி காலை 8-35 வ. பூரட்டாதி பகல் 12-33 வரை, அமிர்தசித்தம், பிரதோஷவிரதம், மாலையில் சிவதரிசனம் செய்வது நன்று. பகல் 12-33-ன் மேல் சுபகருமங்களைச் செய்யலாம்.

சித் 9 வியா. (22-4-82) திரயோதசி காலை 6-59 வ, அதன் மேல் சதுர்த்தி பின்னிரவு 4-43 வரை; உத்தரட்டாதி பகல் 11-32 வரை, சித்தம், பிரதான கருமங்களை காலை 6-59க்கு முன் செய்க.

சித் 10 வெள். (23-4-82) அமாவாசை பின்னிரவு 2-00 வரை, ரேவதி காலை 9-55 வரை, சித்தாமிர்தம் அமாவாசைவிரதம் பிதிர் தர்ப்பணத்தால் சந்ததி விருத்தி உண்டாம். சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று.

சித் 11 சனி (24-4-82) பிரதமை இரவு 10-53 வ. அசுவினி காலை 7-52 வரை அதன்மேல் பரணி பின்னிரவு 5-53 வரை, சித்தாமிர்தயோகம் சுபகருமங்களை காலை 7-52 முன் செய்க.

சித் 12 ஞா (25-4-82) துவிதியை இரவு 7-46 வ. கார்த்திகை பின்னிரவு 3-09 வரை, சித்தம், கார்த்திகைவிரதம், முருகப்பெருமானை வழிபடுவதால் சகல ஐசுவரியங்களும் கிட்டும். புதுக்கருவிலக்குக.

சித் 13 திங் (26-4-82) திரிதியை மாலை 4-32 வ. ரோகிணி இரவு 12-49 வரை, அமிர்த சித்தம். சுபகருமங்களுக்கு நன்று. விவாகப்பேச்சு, விவாகப்பதிவு, வியாபாரம், புதுக்கணக்கு, வீடுகட்டுதல், முதலிய பல கருமங்களையும் செய்ய உத்தமம்.

சித் 14 செவ் (27-4-82) சதுர்த்தி பகல் 1-34 வ. மிருகசீரிடம் - சித்தம் இரவு 10-41 வரை, சதுர்த்தி விரதம். விநாயக வழிபாட்டால் அஞ்ஞானம் நீங்கும். பூமி சம்பந்தப்பட்ட கருமங்கள் செய்ய நன்று.

சித் 15 புத (28-4-82) பஞ்சமி பகல் 10-50 வரை, திருவாதிரை இரவு 8-52 வரை, சித்தம், ஷஷ்டி விரதம், கரிநாள். முருகனை வழிபட்டு வெற்றியடையலாம். முக்கியமான புதிய கருமங்களை இரவு 8-52-ன் மேல் செய்க.

சித் 16 வியா (29-4-82) ஷஷ்டி காலை 8-26 வரை, புனர்பூசம் இரவு 7-25 வரை அமிர்தசித்தம். வியாபாரம், புதுக்கணக்கு, வீடுகட்டுதல், விவாகப்பதிவு, அன்னப்பிராசனம் முதலியவற்றிற்கு நன்று.

சித் 17 வெ (30-4-82) ஸப்தமி காலை 6-28 வரை, அதன் மேல் அஷ்டமி பின்னிரவு 4-55 வரை, பூசம் மாலை 6-25 வரை, மரணயோகம். சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று.

சித் 18 சனி (1-5-82) நவமி பின்னிரவு 3-50 வரை, ஆயிலியம்-மரணம் மாலை 5-54 வரை, அன்ருடபணிகளை மட்டும் செய்க.

சித் 19 ஞா (2-5-82) தசமி பின்னிரவு 3-12 வரை, மகம்-மரணம் மாலை 5-44 வரை, அவசியமான கருமங்களை மாலை 5-44-ன் மேல் செய்க.

சித் 20 திங் (3-5-82) ஏகாதசி - மரணம் பின்னிரவு 2-58 வரை, பூசம்-சித்தம் மாலை 6-05 வரை, முக்கிய கருமங்களை மாலை 6-05க்கு முன் செய்க. ஸர்வஏகாதசிவிரதம்.

சித் 21 செவ் (4-5-82) துவாதசி பின்னிரவு 3-10 வரை, உத்தரம் மாலை 6-46 வரை, அமிர்தசித்த யோகம், அக்கினி நாளாரம்பம். தோட்டச் செய்கை முதலியவற்றிற்கு நன்று.

சித் 22 புத (5-5-82) திரயோதசி பின்னிரவு 3-48 வரை, அத்தம் இரவு 7-55 வரை, சித்தம், பிர தோஷ விரதம். மாலை சிவதரிசனத்தால் பாபங் கங் நீங்கும். பொதுவாக சுபகருமங்கள் செய்ய உத்தமம்.

சித் 23 வியா (6-5-82) சதுர்த்தசி பின்னிரவு 4-47 வரை சித்திரை இரவு 9-25 வரை, சித்தாமிர்தம். சித்திரகுப்த விரதம், சித்திர குப்தர் பிறந்த தினம் சித்திரை நட்சத்திரமாகையால் இன்றைய தினமே அவருக்கு வழிபாடு செய்ய வேண்டும். மத்திம சுபதினம்.

சித் 24 வெள் (7-5-82) பூரணை-சித்தம் முழுவதும், சுவாதி இரவு 11-23 வரை, சித்திரா பூரணை விர தம். பிதிர் வழிபாட்டால் சந்ததி விருத்தி உண்டாகும்.

சித் 25 சனி (8-5-82) பூரணை காலை 6-15 வரை, விசாகம் இரவு 1-42 வரை, சித்தம். மத்திம சுபதினம்.

சித் 26 ஞா (9-5-82) பிரதமை காலை 8-06 வரை, அனுஷம் பின்னிரவு 4-22 வரை, மரணயோகம், சுபகருமங்களை விலக்குக.

சித் 27 திங் (10-5-82) துவிதீயை பகல் 10-18 வ. கேட்டை சித்தம் - முழுவதும். அன்றாட பணி களை மட்டும் செய்க.

சித் 28 செவ் (11-5-82) திரிதீயை பகல் 12-46 வ, கேட்டை-மரணம் காலை 7-20 வரை. சங்கட சதுர்த்தி. தோட்டத் தொழில் முதலியனவற்றை காலை 7-20 இன் மேல் ஆரம்பிக்கலாம்.

சித் 29 புத (12-5-82) சதுர்த்தி பிற்பகல் 3-22 வ. மூலம் – மரணம் பகல் 10-28 வரை. பிற்பகல் 3-22 இன் மேல் சுபகருமங்கள் ஆரம்பிக்க நன்று.

சித் 30 வியா (13-5-82) பஞ்சமி மாலை 5-55 வரை, பூராடம் பகல் 1-35 வரை சித்தம். பொதுவாகச் சுபகருமங்களை பகல் 1-35 இன் மேல் ஆரம்பிக்க.

சித் 31 வெள் (14-5-82) ஷஷ்டி இரவு 8-13 வரை உத்தராடம் சித்தம் மாலை 4-29 வரை. எல்லாக் கருமங்களையும் மேற்கொள்ள நன்று.

## சித்திரைப் புத்தாண்டு

மேஷசங்கிராந்தி, மேஷ விஷு புண்ணிய காலம் என்றழைக்கப்படும் இத்தினம் சூரியபக வான் சித்திரை மாதத்தில் இராசிகளுள் முதலா வதாகிய மேஷராசியில் உதயமாவதால் (சித் திரை-மேஷம்) சித்திரை வருடப்பிறப்பு, புண்ணியகாலம் என விதந்து கூறப்படுகிறது.

இப்புண்ணியகாலமாகிய சித்திரை 1-ந் திகதி (14-4-82) புதன்கிழமை அதிகாலையில் பலவகை மலர்கள் இலைகள், அறுகு, மஞ்சள், பால் மூலிகை வகைகள் முதலியவற்றைக் கொண்டு தயாரிக்கப் பட்ட மருத்துநீர் எனும் புனிதநீரைத் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்து புத்தாடையணிந்து ஆலயவழிபாடு செய்து, குரு முதலிய பெரியோர் களை வணங்கி ஆசிபெற்று இயன்ற தானதருமங் கள் செய்து உற்றார் உறவினருடன் உறவாடி புதுவருடப் பலன்களைக் கேட்டும் உணர்ந்தும் மங் களகரமாக வாழ்க என ஆன்றோர் வாழ்த்துகின் றனர்.

அத்துடன் மங்கலப் பொருட்களுடன் தமது இல்லங்களில் பொங்கல், பூஜைகள் புரிந்து சூரிய வழிபாடு செய்து நிறைந்த நல்வாழ்வு வேண்டி யும், இறைவனை மனம், மொழி மெய்களால் வணங்கித் துதித்தும் ''இவ்வாண்டு முழுவதும் துன்பங்கள் நீங்கி நற்காரியங்கள் நிறைவேறவேண் டியும், நல்வாக்கும் இலக்குமி கடாக்ஷமும், நினைத்த யாவும் கைகூடுதலும் ஆகவேண்டும்'' எனவும் பெரியோர் போற்றிப்பெற்ற பேறுகளை நாமும் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)


## துந்துபி ஸு சித்திரை மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (14-4-82 முதல் 14-5-82 வரை)

| இங் ஏப் | தமி சித் | வாரம் | மேடம் ம.மி. முதல் (காலை) | மேடம் ம.மி. வரை (காலை) | இடபம் ம. மி. வரை (காலை) | மிதுன ம. மி. வரை (பகல்) | கடகம் ம. மி. வரை (பகல்) | சிங்கம் ம. மி. வரை (பி.ப) | கன்னி மி. ம. வரை (மாலை) | துலாம் ம. மி. வரை (மாலை) | விருச்சி ம. மி. வரை (இரவு) | தனுசு ம. மி. வரை (இரவு) | மகரம் ம. மி. வரை (பி.இ) | கும்பம் ம. மி. வரை (பி.இ) | மீனம் ம. மி. வரை) (பி.இ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | புதன் | 6 06 | 7 53 | 9 55 | 12 06 | 2 13 | 4 14 | 6 13 | 8 17 | 10 28 | 12 36 | 2 32 | 4 17 | 5 59 |
| 15 | 2 | வியா | 6 00 | 7 49 | 9 51 | 12 02 | 2 09 | 4 10 | 6 09 | 8 13 | 10 24 | 12 32 | 2 28 | 4 13 | 5 55 |
| 16 | 3 | வெள் | 5 56 | 7 44 | 9 46 | 11 57 | 2 04 | 4 05 | 6 04 | 8 08 | 10 19 | 12 27 | 2 23 | 4 08 | 5 50 |
| 17 | 4 | சனி | 5 51 | 7 41 | 9 43 | 11 54 | 2 00 | 4 01 | 6 00 | 8 04 | 10 15 | 12 23 | 2 19 | 4 04 | 5 46 |
| 18 | 5 | ஞாயி | 5 46 | 7 38 | 9 40 | 11 51 | 1 57 | 3 58 | 5 57 | 8 01 | 10 12 | 12 20 | 2 16 | 4 01 | 5 43 |
| 19 | 6 | திங் | 5 43 | 7 33 | 9 35 | 11 46 | 1 52 | 3 53 | 5 52 | 7 56 | 10 07 | 12 15 | 2 11 | 3 56 | 5 38 |
| 20 | 7 | செவ் | 5 39 | 7 28 | 9 30 | 11 41 | 1 47 | 3 48 | 5 47 | 7 51 | 10 02 | 12 10 | 2 06 | 3 51 | 5 33 |
| 21 | 8 | புதன் | 5 34 | 7 25 | 9 27 | 11 38 | 1 44 | 3 45 | 5 44 | 7 48 | 9 59 | 12 07 | 2 03 | 3 48 | 5 30 |
| 22 | 9 | வியா | 5 31 | 7 20 | 9 22 | 11 33 | 1 39 | 3 40 | 5 39 | 7 43 | 9 54 | 12 02 | 1 58 | 3 43 | 5 25 |
| 23 | 10 | வெள் | 5 26 | 7 17 | 9 19 | 11 30 | 1 36 | 3 37 | 5 36 | 7 40 | 9 51 | 11 59 | 1 55 | 3 40 | 5 22 |
| 24 | 11 | சனி | 5 22 | 7 13 | 9 15 | 11 26 | 1 32 | 3 33 | 5 32 | 7 36 | 9 47 | 11 55 | 1 51 | 3 36 | 5 19 |
| 25 | 12 | ஞாயி | 5 19 | 7 09 | 9 11 | 11 22 | 1 28 | 3 29 | 5 28 | 7 32 | 9 43 | 11 51 | 1 47 | 3 32 | 5 14 |
| 26 | 13 | திங் | 5 15 | 7 05 | 9 07 | 11 18 | 1 24 | 3 25 | 5 24 | 7 28 | 9 39 | 11 47 | 1 43 | 3 28 | 5 10 |
| 27 | 14 | செவ் | 5 10 | 7 02 | 9 04 | 11 15 | 1 21 | 3 22 | 5 21 | 7 25 | 9 36 | 11 44 | 1 40 | 3 25 | 5 07 |
| 28 | 15 | புதன் | 5 07 | 6 57 | 8 59 | 11 10 | 1 16 | 3 17 | 5 16 | 7 20 | 9 31 | 11 39 | 1 35 | 3 20 | 5 02 |
| 29 | 16 | வியா | 5 02 | 6 53 | 8 55 | 11 06 | 1 12 | 3 13 | 5 12 | 7 16 | 9 27 | 11 35 | 1 31 | 3 16 | 4 58 |
| 30 | 17 | வெள் | 4 58 | 6 49 | 8 51 | 11 02 | 1 08 | 3 09 | 5 08 | 7 12 | 9 23 | 11 31 | 1 27 | 3 12 | 4 54 |
| 1 | 18 | சனி | 4 55 | 6 46 | 8 48 | 10 59 | 1 05 | 3 06 | 5 05 | 7 09 | 9 20 | 11 28 | 1 24 | 3 09 | 4 51 |
| 2 | 19 | ஞாயி | 4 52 | 6 42 | 8 44 | 10 55 | 1 01 | 3 02 | 5 01 | 7 05 | 9 16 | 11 24 | 1 20 | 3 05 | 4 47 |
| மே 3 | 20 | திங் | 4 47 | 6 39 | 8 41 | 10 51 | 12 58 | 2 59 | 4 58 | 7 02 | 9 13 | 11 21 | 1 17 | 3 02 | 4 44 |
| 4 | 21 | செவ் | 4 44 | 6 34 | 8 36 | 10 46 | 12 53 | 2 54 | 4 53 | 6 57 | 9 08 | 11 16 | 1 12 | 2 57 | 4 39 |
| 5 | 22 | புதன் | 4 40 | 6 31 | 8 33 | 10 43 | 12 50 | 2 51 | 4 50 | 6 54 | 9 05 | 11 13 | 1 09 | 2 54 | 4 36 |
| 6 | 23 | வியா | 4 36 | 6 28 | 8 30 | 10 40 | 12 47 | 2 48 | 4 47 | 6 51 | 9 02 | 11 10 | 1 06 | 2 51 | 4 33 |
| 7 | 24 | வெள் | 4 33 | 6 24 | 8 26 | 10 36 | 12 43 | 2 44 | 4 43 | 6 47 | 8 58 | 11 06 | 1 02 | 2 47 | 4 29 |
| 8 | 25 | சனி | 4 30 | 6 19 | 8 21 | 10 31 | 12 38 | 2 39 | 4 38 | 6 42 | 8 53 | 11 01 | 12 57 | 2 42 | 4 24 |
| 9 | 26 | ஞாயி | 4 24 | 6 16 | 8 18 | 10 28 | 12 35 | 2 36 | 4 35 | 6 39 | 8 50 | 10 58 | 12 54 | 2 39 | 4 21 |
| 10 | 27 | திங் | 4 21 | 6 12 | 8 14 | 10 24 | 12 31 | 2 32 | 4 31 | 6 35 | 8 46 | 10 54 | 12 50 | 2 35 | 4 17 |
| 11 | 28 | செவ் | 4 18 | 6 08 | 8 10 | 10 20 | 12 27 | 2 28 | 4 27 | 6 31 | 8 42 | 10 50 | 12 46 | 2 31 | 4 13 |
| 12 | 29 | புதன் | 4 13 | 6 05 | 8 07 | 10 17 | 12 24 | 2 25 | 4 24 | 6 28 | 8 39 | 10 47 | 12 43 | 2 28 | 4 10 |
| 13 | 30 | வியா | 4 11 | 6 01 | 8 03 | 10 13 | 12 20 | 2 21 | 4 20 | 6 24 | 8 35 | 10 43 | 12 39 | 2 24 | 4 06 |
| 14 | 31 | வெள் | 4 07 | 5 57 | 7 59 | 10 09 | 12 16 | 2 17 | 4 **16** | **6 20** | 8 31 | 10 39 | 12 35 | 2 20 | 4 02 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: சித்திரை 31உ (14-5-82) மாலை 5 மணிக்கு என்னலக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை அவதானிக்கவும். (4-16—6-20) துலாலக்னம்

# சித்திரை மாதக் கிரகநிலை




## கிரகமாற்றங்கள்

14உ (27-4-82) இரவு 9-06க்கு இட-புத
15உ (28-4-82) இரவு 11-18க்கு மீன-சுக்
30உ குஜன் வக்ரத்தியாகம்
11உ புதன் உதயம்
குரு, சனி, யுரேனஸ், நெப்டியூன் என்பன இம்மாதம் வக்கிரத்தில் சஞ்சரிக்கின்றன.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சித் | 3உ | (16-4-82) | பகல் | 1-01 | முதல் | மகரம் |
| | 5உ | (18-4-82) | இரவு | 11-46 | ,, | கும்பம் |
| | 8உ | (21-4-82) | காலை | 6-41 | ,, | மீனம் |
| | 10உ | (23-4-82) | காலை | 9-54 | ,, | மேடம் |
| | 12உ | (25-4-82) | பகல் | 10-57 | ,, | இடபம் |
| | 14உ | (27-4-82) | பகல் | 11-42 | ,, | மிதுனம் |
| | 16உ | (29-4-82) | பகல் | 1-44 | ,, | கடகம் |
| | 18உ | (1-5-82) | மாலை | 5-51 | ,, | சிங்கம் |
| | 20உ | (3-5-82) | பி.இ. | 12-11 | ,, | கன்னி |
| | 23உ | (6-5-82) | காலை | 8-36 | ,, | துலாம் |
| | 25உ | (8-5-82) | மாலை | 7-04 | ,, | விருச்சிகம் |
| | 28உ | (11-5-82) | காலை | 7-20 | ,, | தனுசு |
| | 30உ | (13-5-82) | இரவு | 8-20 | ,, | மகரம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி சித்திரை 31 உ மாலை 5-00 மணிக்கு துலா லக்னம் என அறிந்து கொண்ட பின் துலாம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் தேசீய பொருளாதாரம், செல்வாக்குகள் விருத்திபெறும். மக்கள் மத்தியில் சந்தோஷமும், புதுத்தென்பும், காணப்படும். மங்கலகரமான நிகழ்ச்சிகள் இடம்பெறும். போக்குவரத்துத் துறைகள் சிறக்கும். வர்த்தகம் விருத்தியடையும். பெண்பாலார் முன்னேற்றமடைவர். பாதுகாப்புத்துறை, வைத்தியர்துறை முதலியவற்றில் பல கஷ்டங்கள் காணும். குழந்தைகளுக்கு தொற்றுநோய் பரவும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (சித்திரை மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6மணி 04 நிமிஷம்)

| வாரம் | 6...04<br>7...04 | 7...04<br>8...04 | 8...04<br>9...04 | 9...04<br>10...04 | 10...04<br>11...04 | 11...04<br>12...04 | 12...04<br>1...04 | 1...04<br>2 . 04 | 2...04<br>3...04 | 3...04<br>4...04 | 4.. 04<br>5...04 | 5...04<br>6...04 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற்கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல. 21

# சித்திரை மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

14-4-82 – 14-5-82

சூரியன்;- 14-4-82 பின் இரவு 2-42 (A.M.) மணியில் சூரியன் நிரயன மேடராசியிற் பிரவேசிக்கிறது. அன்று சூரியோதயம் காலை 6 மணி 4 நிமி
அஸ்தமனம் மாலை 6 மணி 19 நிமி
14-5-82 சூரியோதயம் காலை 6 மணி 3 நிமி
அஸ்தமனம் மாலை 6 மணி 26 நிமி

சந்திரன்:- 17-4-82 அபர அஷ்டமி கா. 7 ம. 14 நி.
23-4-82 அமாவாசை பி. இ. 2 மணி
25-4-82 சந்திர தரிசனம்
30-4-82 பூர்வ அஷ்டமி பி. இ. 4-55
8-5-82 பூரணை காலை 6 மணி 15 நிமி

### கிரகங்கள்

புதன்:- மாதத் தொடக்கத்தில் அஸ்தமனமாயிருக்கும் இக்கிரகம் 24-4-82-ல் மேற்கில் உதயமாகும். அதன் பின் மேற்கு வானத்தில் அவதானிக்கவும். 9-5-82-ல் சூரியனிலிருந்து கூடியதூரம் 21½ பாகை கிழக்கே விலகியிருக்கும். 27-4-82-ல் இடப ராசியிற் பிரவேசிக்கின்றது.

சுக்கிரன்:- மாத ஆரம்பத்தில் சூரிய உதயத்தின் போது 40 பாகை உயரத்தில் கிழக்கு வானத்தில் உயர்ந்து காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 42 பாகை உயர்ந்து காணப்படும். ஆகவே மாசம் முழுவதும் விடிவெள்ளியாக இதனைப் பார்க்கக் கூடியதாய் இருக்கும். 28-4-82-ல் மீன ராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்:- மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின்பின் கீழ் வானத்தில் 16 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 52 பாகை உயரத்தில் காணப்படும். வக்கிரகதியிற் சஞ்சரித்துக்கொண்டிருந்த இக்கிரகம் 13-5-82-ல் இருந்து நேர்கதியிற் செல்லும். இம்மாதம் முழுவதும் கன்னி ராசியிலேயே சஞ்சரிக்கிறது.

வியாழன்:- மாத ஆரம்பத்தில் சூரிய உதயத்தின் போது மேற்கு வானத்தில் 14 பாகை உயரத்தில் காணப்படும் இக் கிரகம் 26-4-82ல் சூரிய உதயத்தின்போது மேற்கில் அஸ்தமனமடைவதால் அடுத்து வரும் நாட்களில் சூரியாஸ்தமனத்தின் பின் கீழ்வானத்தில் உதித்து வருதலைக் காணலாம். மாதமுடிவில் சூர்யாஸ்தமனமானதும் வியாழன் கீழ் வானத்தில் 20 பாகை உயரத்தில் காணப்படும். வக்கிர கதியில் 14-4-82-ல் சுவாதி 2-ம் பாதத்திலும் 10-5-82-ல் சுவாதி 1-ம் பாதத்திலும் பிரவேசிக்கிறது.

சனி:- மாதத் தொடக்கத்தில் அஸ்தமனத்தின் பின் கீழ் வானத்தில் உதயமாகி 4 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 37 பாகை உயரத்தில் காணப்படும்.

### சமாகமங்கள்

20-4-82 பிற்பகல் சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 4 பாகை, உதயம் முன் அவதானிக்க.

4-5-82 நண்பகல் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 3½ பாகை. அஸ்தமனத்தின் பின் பார்க்கவும்.

5-5-82 முன்னிரவு சந்திரனுக்குத் தெற்கு சனி 2½ பாகை.


7-5-82 அதிகாலை சந்திரனுக்குத் தெற்கு குரு 3½ பாகை.

10-5-82 மாலை புதனுக்கு வடக்கு ரோகிணி நக்ஷத்திரம் 8 பாகை.

11-5-82 நண்பகலில் சந்திரனுல் வருணன் மறைக்கப்படும். பார்க்க முடியாது.

### கவனிப்பு

கிரகஸ்புடங்கள் 12 மாதங்களுக்கும் திருக்கணித பஞ்சாங்கத்தில் வெளியிடப்பட்டிருப்பதால் மாதந்தோறும் சோதிட மலரில் இடம்பெற மாட்டாது. தேவையானோர் திருக்கணித பஞ்சாங்கத்தில் பார்த்தறியலாம். ஆ—ர்




டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் A. F. A.

**14-4-82 முதல் 14-5-82 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக் குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத் தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித் துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவ்விராசியிற் பிறந்தவர்கட்கு இம்மாதம் சூரிய பகவான் ராஜத மூர்த்தியாக ஜன்ம ராசி யில் பவனி வந்து கொண்டிருப்பது சகல விதத் திலும் நன்மையளிக்கும். எதிரிகளாலும், வாக னங்களாலும் தொடர்ந்து ஆபத்துக்கள் ஏற்பட் டாலும், சமாளித்துக் கொள்ளலாம். சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்கள் நற்சஞ்சாரம் செய்வ தால் பொருளாதார ரீதியில் எவ்வித பிரச்சினை களும் நிகழாது. தேகாரோக்கியம் வியாழ பக வான் ஆணையால் நிவிர்த்தியுறும். சமூக சேவை யில் அதிக ஈடுபாடும் மனத்திருப்தியும் உண்டா கும். இனசன விரோதங்கள் ஓரளவு மறைந்து விடும். எடுத்த கருமங்கள் ஓரளவுக்கு வெற்றிகர மாக அமையும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபதி சுக்கிரனும் புத்திகாரகன் வியாழன், சூரியன் ஆகிய கிரகங் கள் ஒன்றுக்கொன்று நற்பார்வையிலிருப்பதால் இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாகப் பேணப்படும். மங்கள வைபவங்கள் நிகழும். கடன் தொல்லை கள் கஷ்டம் தராது.

வியாபாரிகட்கு வியாபாரி புதன் மாத நடுப்பகுதியில் மேடராசியில் திக்குப்பலம் பெறுவ தால் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வங்கி யாளன் வியாழன் நன்மை செய்வார். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் சிறப்புற அமையும்.

உத்தியோகத்தர்கட்கு கடந்த உழைப்பிற்கும் முயற்சிக்கும் பலனளிக்கும் காலமாகும். அரசியல் கிரகம் சூரியன் மேடராசியில் உச்சம் பெறுவதால் எல்லாம் நன்மைபெற இடமுண்டு. மேலதிக வருமானங்களும் ஏற்படலாம். சூரியனைச் செவ்வாய் பார்ப்பதால் இடையிடையே சில பிரச்சனைகள் உண்டாகலாம்


விவசாயிகளுக்கு சனி, செவ்வாய் 6-ல் சேர்க்கை பெற்று வக்கிரகதியில் கவலையேற்படாது. நோய்களையும் பொருட்படுத்தாமல் லாபத்தை எதிர்நோக்கலாம். தானியங்கள் விற்பனை செய்ய சிறந்த மாதமாகும்.

தொழிலாளருக்கு கடின உழைப்பு ஏற்படும். கவலைப்பட-வேண்டியதில்லை. ஊதியம் நன்ருக அமையும். பங்குத் தொழிலாளர்களும் நன்மையடைவார்கள். கூட்டுறவாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க சந்தர்ப்பமுண்டாகும்.

மாணவர்களுக்கு நன்மையான மாதமாகும். வித்தியாகாரன் புதன் ஜன்மராசியில் நன்மையளிப்பான். கலைஞன் சுக்கிரன் 11-ம், 12-ம் இடங்களில் கலைத்துறைக்கு உதவியளிக்கும்.

பெண்கட்கு காதல் கிரகம் சுக்கிரன், வியாழன் ஆகியவை மிகவும் நன்மையாகக் காத்திருக்கும். கணவனுக்குப் பெரும் முன்னேற்றங்களைத் தரும். காதலிப்போருக்கு ஏற்படும் தடைகள் விலகிவிடும். விவாகப்பேச்சுகள் இதுவரை கைகூடாமலிருந்தாலும் இம்மாதம் நிறைவேற சந்தர்ப்பமுண்டு.

அதிஷ்ட நாட்கள்;- ஏப் 19, 20, மே4,5,6,பி.ப
துரதிஷ்ட நாட்கள்:- ஏப் 21, 22, 23, மு, ப
மே 8 பி,ப, 9, 10




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம்1,2,-ம்கால்

இவ்விராசியினர்க்கு சூரியபகவான் லோகமூர்த்தியாக 12-ம் ராசியில் சஞ்சாரம் செய்வது கடந்தகால நற்பலன்களை அனுபவிக்க விடாது. மேலும் சனி, செவ்வாய் 5-ல் சந்திப்பது பெருமளவில் பொருளாதார கஷ்டங்களை உண்டுபண்ணும். முதலீடுகள் திடீர் நட்டத்தை ஏற்படும். நற்கருமங்கள் யாவும் பின்போடப்படலாம். 6-ம் இடத்தில் வியாழன் ஆரோக்கியம் சிறக்க உதவுவார். பிரயாணங்களில் நட்டமுண்டாகும். விபத்துக்கள் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, எண்ணிய கருமங்கள் தடைப்பட்டு வேதனைதரும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் புதன் பாதிப்படைந்திருப்பதால் இல்வாழ்க்கை சிறக்காது. பணமுடையால் அவமானம் உண்டாகலாம். நற்காரியங்கள் தடைப்படும், மனச்சஞ்சலம் ஏற்படலாம்.

வியாபரிகளுக்கு வங்கிநிலை பதட்டமடையும். முதலீடுகள் நட்டங்களையுண்டுபண்ணும். கள்ளமார்கட் வியாபாரம் பெரும் விழ்ச்சி தரும். வியாபார ஸ்தலங்களை மாற்றியமைக்க வேண்டி நேரிடும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல்கிரகம் சூரியன் மோசநிலை யடைந்திருப்பதால் பதவி, மதிப்பு என்பன குன்றும். மாற்றங்கள் முதலியன மனவேதனை உண்டாக்கும். அதிகாரிகள் மிகவும் கடுமையாக நடந்து கொள்வர்.

விவசாயிகளுக்கு சனி, செவ்வாய் சேர்க்கை பயிர் நட்டத்தை யுண்டாக்கும். வரட்சி, நோய் முதலியவற்ருல் தானியங்கள் பாதிப்படையும். அரசாங்கத்தால் தொல்லைகள் ஏற்படலாம்.

தொழிலாளர்கட்கு கடின உழைப்பால் மனச்சோர்வும் உடல்நிலையில் பாதிப்பும் உண்டாகும். தொழில்வாய்ப்புகள் கிடைப்பதில் சிரமமேற்படும். கூட்டுறவாளர் மிகவும் பாதிப்புக்குள்ளாவர்.

மாணவர்கட்கு புதன் கல்விவளர்ச்சிக்கு உதவியளிப்பார். ஞாபகமறதி அடிக்கடி ஏற்படலாம். கலை, விளையாட்டுத்துறை ஈடுபாடுகள் ஓரளவுக்கு நன்மைதரும். பரீட்சைகளில் வெற்றி கிட்டுவது கடினம். நேர்முகப் பரீட்சைகளில் வெற்றி கிடைப்பினும் தாமதமுண்டாகும்.

பெண்களுக்கு கன்னிப் பெண்கட்கு சிறப்புக் குன்றும். காதல் விவகாரங்கள் தோல்வியையும், எதிர்ப்பையும் தரும். கையிலுள்ளபணம் கேளிக்கைகளில் விரயமாகும். குடும்பப் பெண்கள் கணவன் மாரின் எதிர்ப்பைச் சம்பாதிப்பர்.

அதிஷ்ட நாட்கள்: ஏப் 21, 22. 23 மு. ப.
மே 6 பி. ப. 7, 8 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: ஏப் 14, 15,16 மு.ப, 23பி.ப,
24, 25 மு. ப.
11, 12, 13 மு. ப.



## மிதுனம்

மிருகசிரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம்! 2,3-ம்கால்

இவ்விராசியிற் பிறந்தவர்கட்கு சூரியன் தாம்ர மூர்த்தியாக 11-ம் இடத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்ருர். மூர்த்திபெலம் இல்லாவிடினும், ஸ்தானபலம் பெறுவதால் சூரியன் நற்பலனும், தீயபலனும் கலந்து வழங்குவார் குடும்ப அமைதி நிலவுவது கடினம். அலேச்சலுடன் கூடிய பிரயாணங்கள் மேற்கொள்ளவேண்டி வரும். பண வருவாய் சுமாராக இருக்க, தனகாரகன் வியாழன் திரிகோண ராசியிலிருப்பதால் நன்மை அதிகமாகும். ஆரோக்கியம் இடையிடையே பாதிக்கப்படலாம்.

குடும்பஸ்தர்கட்கு இனசனங்கள் உறவு கொண்டாடினுலும், நட்டத்தையேற்படுத்துவர். புத்திரர்களின் முன்னேற்றம் எதிர்பார்த்த அளவு இருக்காது. தாம்பத்திய வாழ்க்கை சிறக்கும்.

வியாபாரிகளுக்கு செட்டி புதன், சூரியனுடன் ரவிபுத ராஜயோகம் பெற்றிருப்பதால் நன்மையுண்டாகும். கறுப்புச் சந்தை வியாபாரம் சிறப்பாக நடந்தாலும் அதற்கேற்ப தொல்லேகளுக்கும் குறைவிருக்காது.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 11-ல் உச்சம் பெறுவதால் பிரச்சினேகளேச் சமாளிக்க உதவுவர். சக உத்தியோகத்தர்களுடன் அமைதிக்குறைவான நடவடிக்கைகளில் ஈடுபடினும் வெற்றிகரமாகச் சமாளித்துக் கொள்ளலாம்.

விவசாயிகளுக்குஎவ்வழியிலும்சிறப்பிருக்காது. விவசாயி சனி தியபார்வையிலிருப்பதால் பயிர் நட்டங்களேற்படும். தோட்டத்தில் பயிர்வகைகள் களவு முதலியவற்ருல் அக்கறை குன்றலாம். அரசாங்க உத்தியோகத்தர் உதவியளிப்பர்.

தொழிலாளர்கட்கு தொழில் வாய்ப்புகள் கிடைத்தாலும் சீராக அமையாது. தொழிற்சாலேயில் அமைதி நிலவாது. பந்தோபஸ்து மிகவும் அவசியம். கூட்டுறவாளர்கள் நன்மையடைய மாட்டார்கள்.

மாணவர்கட்கு கல்விக்குரிய கிரகங்கள் விசேடமாக இருப்பதால் கல்விகேள்விகளில் சித்தியடையலாம். கல்வி கற்க சுற்றுடலில் அமைதியில்லாமல் போகலாம். வெளிநாட்டுக் கல்வி கற்போர் நன்மைபெறுவர்.

பெண்களுக்கு கணவனேக் குறிக்கும் சூரியன் உச்சமடைவதால் குடும்ப முன்னேற்றம், அந்தஸ்து உயர்வு, முதலியன உண்டாகும். காதலிப்போர் கவலேப்பட வியாழன் விடமாட்டார்.

அதிஷ்ட நாட்கள்: ஏப் 23 பி. ப. 24, 25 மு. ப. மே 8 பி. ப. 9, 10.

துரதிஷ்ட நாட்கள்: ஏப் 16 பி.ப. 17,18,25 பி.ப. 13 பி. ப. 14.



## கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இவ்விராசியில் ஜனித்தோர்க்கு சூரியபகவான் சுவர்ணமூர்த்தியாக 10-ம் இராசியில் இராஜபவனி வருகிருர். மூர்த்திபெலம், ஸ்தானபெலம் திக்பெலம் ஆகியன பெலமடைவதால் அதியுன்னத பலன்களேச் சூரியபகவான் நல்குவார். கடந்த கால சிரமங்கள் இம்மாதம் அடியோடு மறைந்துவிடும். தேகசுகம் சீரடையும். இனசன விரோதங்கள் தலேதூக்காது, கம்பீரமாக எடுத்த கருமங்களேச் சாதித்துக் கொள்ளலாம். குடும்ப அமைதி நிலேநாட்டப்பட்டுவிடும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி சூரியன் பலம் பெற்றிருப்பது நன்மை பயக்கும். தாம்பத்திய வாழ்வு திருப்தியளிக்கும். புரட்சிகர முன்னேற்றங்கட்கு வழி கோலும். இனசனம், அயலவர் பற்றிக் கவலே வேண்டாம்.

வியாபாரிகளுக்கு லாபம் கிட்டும். வியாபாரம் விஸ்தரிக்கப்படும். வங்கியில் பணம் சரளமாகப் புளங்கும். கடனுளிகள் சமாதானமாக தீர்வு காண்பார்கள். முடங்கிக்கிடந்த முதலீடுகள் விற்பனேயாகும். கள்ள மார்க்கட் வியாபாரம் நன்மைதரும்.

உத்தியோகத்தர்கட்கு பிரச்சினேகள் ஒன்றன்பின் ஒன்ருக ஏற்படலாகும். ஊழியர்கள் உங்கள் செல்வாக்கைக் கண்டு பிரமித்துப் போவார்கள். உத்தியோக உயர்வு நிச்சயம் கிட்டும். பாக்கி வருமதிகள் கைக்கு வந்துசேரும்.

விவசாயிகட்கு விவசாயி சனி 3-ல் இருப்பது நற்பலனைக் காட்டுகின்றது. பயிர் வளர்ச்சி, தானிய விருத்தி, பொருளாதார விருத்தி என்பன ஏற்படும். அயல் காணி, பிரச்சினைகள் தீரும். வழக்குகள் வெற்றி தரும்.

தொழிலாளர்கட்கு தொழில் வாய்ப்புக்கள் தாராளமாகக் கிடைக்கும். உற்சாகத்தால் கடின உழைப்பு உண்டாகும். தொழிலாளரிடையே புரட்சிகரமான திருப்பங்கள் ஏற்படும். பங்குத் தொழிலாளர் எவ்விதமான பிரச்சினையையும் சமாளிப்பர்.

மாணவர்கட்கு கல்வியில் குறைவேற்படாது. பாடசாலையில் அந்தஸ்துள்ள பதவிகள் கிடைக்கலாம். வெளிநாட்டுக் கல்வி கற்போருக்கு வெற்றி அபாரம். நேர்முகப் பரீட்சைகள் மாத பிற்பகுதியில் நன்மையளிக்கும்.

பெண்கட்கு விவாகமானவர்கள் கணவனின் முன்னேற்றத்தைக் கண்டு பிரமித்துப் போவர். எவ்விதமான காதலாயினும் வெற்றி கிடைக்கும். திருமணப் பேச்சுகளுக்குக் குறைவிருக்காது; ஆனால் கைகூடுவதில்தான் சிக்கல்களுண்டாகும்.

அதிஷ்ட நாட்கள்; ஏப் 14, 15, 16 மு.ப, 25, 26 27 மு.ப, மே 11, 12, 13மு.ப.

துரதிஷ்ட நாட்கள்; ஏப் 19, 20, 27 பி.ப, 28, 29 மு. ப.



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியினர்கட்கு சூரியபகவான் ரஜத மூர்த்தியாக 9-ம் ராசியில் பவனிவருவது நன்று. இலக்கினாதிபதி சூரியன் மூர்த்திபலமடைந்து திரிகோணராசியில் உச்சமாகச் சஞ்சரிப்பதால் எல்லாம் நன்மையாகவே முடியும். வாக்கு, கலகங்கள் ஏற்பட்டாலும் சமாளித்துக் கொள்ளலாம். பெற்றோர் விசேடமாக பிதாவர்க்க சிறப்புக்களை எதிர்நோக்கலாம். பிரயாணங்கள் பணச்செலவை உண்டுபண்ணினாலும் திருப்திகரமாக அமையும். தேகசுகம் பாதிக்கப்பட வழியில்லை. எடுத்த கருமங்கள் சிரமத்தின் பின் வெற்றியைக் கொடுக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானத்தில் சனி, செவ்வாய் சேர்க்கையையிட்டு கவலையடையத் தேவையில்லை. புத்திர லாபங்கள் குறைவாகவே தென்படுகின்றன. தாம்பத்திய உறவுகளுக்கு உகந்த காலமல்ல. வருமானத்தைக் குறைசொல்ல இடமில்லை.

வியாபாரிகளுக்கு செட்டி புதன் வியாபாரத்தைச் சிறப்பாக நடாத்த உதவியளிப்பார். கள்ளச்சந்தை வியாபாரம் மிகவும் லாபகரமாகவிருக்கும். வங்கிநிலை சுமாராக இருக்கும். முதலீடுகளுக்கு ஏற்றவண்ணம் வியாபாரம் நடந்து கொண்டேயிருக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தில் செல்வாக்கு நிலைக்கும். போட்டி, பொறாமை எதுவும் செய்யாது. இருப்பினும் வாக்குவாதங்களைத் தவிர்த்து நடப்பது சிறந்தது. நன்மாற்றங்கள் உண்டாகும்.

விவசாயிகளுக்கு சனி 2ல் இருப்பினும், பிரயாசைக் கேற்ற பலனுண்டு. காணித்தகராறுகள் வெற்றிதரும். கடன்தொல்லைகள் சமாளித்துக் கொள்ளலாம். வழக்கு விசாரணைகள் நன்முடிவை தரும்.

தொழிலாளர்கட்கு வாக்குவாதங்களால் தொழில் வாய்ப்புகள் கைநழுவிப் போகாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும், கூட்டுறவாளர், பங்குத் தொழிலாளர், தனித்தொழில் புரிவோர் நன்மைபெறுவர். கடின உழைப்பைச்சனி கொடுப்பதையிட்டு கவலைவேண்டாம்.

மாணவர்கட்கு வாக்குஸ்தானத்தில் சனி, செவ்வாய் சஞ்சரிப்பதால் கல்வியில் முன்னேற்றமுண்டாகும். நேர்முகப் பரீட்சைகளில் வெற்றி கிடைக்கும். கலைத்துறையிலும் சமவெற்றியுண்டு.

பெண்களுக்கு தற்பெருமையுள்ளவர்களாதலால் சிறிது நாவை அடக்கி நடத்தல் நன்மை தரும். விவாக விடயங்கள் குழப்பங்களுடன் நிறைவேறும். காதல் விவகாரங்கள் பிரச்சினைகளுடன் முன்னேற்றம் காணும்.

அதிஷ்ட நாட்கள்: ஏப் 14,15,16மு.ப,27பி.ப 28,29மு.ப. மே 13பி.ப,14.

துரதிஷ்ட நாட்கள்: ஏப் 21,22,23மு.ப,29பி.ப. 30, மே 1மு.ப.



## கன்னி

உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

கன்னி ராசியில் பிறந்தோர்க்கு சூரியன் அட்டமராசியில் லோகமூர்த்தியாக வலம் வந்துகொண்டிருப்பதால் கஷ்டநஷ்டங்கள் அதிகமேற்பட இடமுண்டு. மேலும், ஜன்மராசியில் செவ்வாய், சனி சேர்க்கை மன அமைதியைக் கெடுத்துக் கொண்டே இருக்கும். தேகசுகம், பாதிப்படையும். வியாழன் 2-ம் இடத்தில் பணவரவுக்கு நன்றுயினும் செலவினங்களைத் தாக்குப் பிடிக்க முடியாது. சிறுசிறு பிரயாணங்கள் அடிக்கடி நட்டம் தரும். இனசன விரோதம். நற்காரியங்கள் தடைப்படல் முதலியன உண்டாகும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் இடத்தில் வியாழன் புத்திரகாரகனுக இருப்பதால் இல்வாழ்க்கை சுமுகமாக இருக்கும். புத்திர லாபம் குன்றும். நற்கருமங்களில் கலந்து கொள்வதில் கஷ்டமுண்டாகும். மாதா வழியால் செலவுகள் அதிகமாகும்.

வியாபாரிகட்கு விற்பனவு சிறப்பாக நடைபெற வழியில்லை. முதலீடுகள் தேங்கிக் கிடப்பதால் புது முதலீடுகளை ஆரம்பிக்க முடியாது. வியாழனின் கிருபையால் வங்கிக்கணக்கு திருப்திகரமாக நடைபெறும். கள்ள மார்க்கட் வியாபாரிகள் பெரும் நட்டமடைவர்.

உத்தியோகத்தர்கட்கு அரசாங்கத்தைக் குறிக்கும் சூரியபகவான் அட்டமத்தில் செவ்வாயின் பார்வையிலிருப்பதால் செல்வாக்குப் பாதிப்படையலாம், அல்லது பதவி பறிபோகலாம். சக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் கிட்டாது.

விவசாயிகளுக்கு கடினமான உழைப்பும் உடல்நிலையில் தளர்ச்சியும் உண்டாகும். தானியக் கொள்வனவு விற்பனவுகள் மேற்கொள்ளச் சிறந்த மாதமல்ல.

தொழிலாளர்கட்கு உழைப்பு உழைப்பென்று முயற்சி செய்தாலும் பிரயோசனமில்லை. நாக்கு வன்மை சிறப்பாக இருப்பினும், உடல் வன்மை நன்மையளிக்காது. தொழில் வாய்ப்புகள் கை நழுவிப் போய்விடும்.

மாணவர்களுக்கு கவலைக்கு மேல் கவலையுண்டாகும், சோதனைகளில் சித்தியெய்தல் கடினம். கலை நிகழ்ச்சிகளில் ஈடுபாடு நன்மை தராது. நேர்முகப் பரீட்சைகள் சாதகமாக அமைய இடமில்லை.

பெண்களுக்கு கணவன்மாரின் தொல்லைகள் அதிகமாகும். வீட்டு வேலைகள் நிம்மதி தராது. விவாகமாகாதோர் கேள்விக்குறியுடன் காலத்தை கடத்துவர். தாம்பத்திய வாழ்வைத் தவிர்த்து நடத்தல் நன்று.

அதிஷ்ட நாட்கள்; ஏப் 19, 20, 29 பி. ப, 30,
மே 1 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்; ஏப் 23 பி. ப, 24; 25 மு. ப,
மே 1 பி. ப, 2, 3.



## துலாம்

சித்திரை 3,4-ம் கால், சுவாதி, விசாகம் 1,2,3-ம் கால்

இவ்விராசியிற் பிறந்தவர்கட்கு இம்மாதம் சூரியபகவான் தாம்ரமூர்த்தியாக 7ல் சஞ்சரிப்பது நன்றல்ல. கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போன்ற நிலைமை உங்களுக்கு இருக்கும். கிடைக்கவிருந்த நன்மைகள் தடைப்படும். நீண்டதூர பயணங்கள் குழப்பமடையும். செவ்வாய், சனி 12ல் சேர்ந்திருப்பது வாக்கு, கௌரவம் பாதிப்படைய வழிகோலும். பணவருவாய் குறைவாக இருப்பினும் நிலைமையைச் சமாளித்துக்கொள்ளலாம்.

குடும்பஸ்தர்கட்கு செவ்வாய் 2-ம் அதிபதியாகி 12-ல் சனியுடன் கூடியிருப்பது சுகக்குறைவு உண்டாகும். பணச் செலவுகள் ஒன்றன்பின் ஒன்ருக ஏற்பட்டு வேதனையளிக்கும். புத்திர முன்னேற்றங்களைக் குறிப்பிடச் சொல்லமுடியாது.

வியாபாரிகட்கு சிறப்பிருக்காது. செட்டிபுதன் 7-ம், 8-ம் இடங்களில் சஞ்சரிப்பது நன்மைதராது. வங்கிநிலைபரம் சுமாராக இருக்கும். வெளிநாட்டு வர்த்தகம் 9-ல் ராகு இருப்பதால் பாதிப்படையமாட்டாது.

உத்தியோகத்தர்களுக்கு சூரியபகவான் 7-ல் உச்சம் பெற்றிருப்பது சுமாராக இருக்கும்.

இருப்பினும் உங்கள் கைங்கரியங்கள் நிறைவேறுவது கடினம். வேலைப்பளு அதிகமாகும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கையில் நட்டம் அளவிட முடியாது. புதுப்பயிர்கள் நாட்டினால் அழிந்துவிடும். அறுவடையில் செலவுக்கேற்ற வருமானம் இருக்காது.

தொழிலாளர்கட்கு எடுத்த கருமங்கள் தோல்வியடையும். தொழில்வாய்ப்புக்கள் இரகசிய எதிர்ப்புகளால் கைநழுவிப் போகும். பங்காளிகள் சமாளித்துக் கொள்வார்கள். வெளிநாட்டு ஸ்தாபனங்களில் தொழில்புரியும் நபர்கள் பாதிப்படையமாட்டார்கள். உழைப்புக்கேற்ற வருமானம் கிட்டாது.

மாணவர்கட்கு கல்வியில் தடங்கலேற்படும். தூரதேசக் கல்விகற்போர் பாதிப்படையமாட்டார்கள். பரீட்சையில் தோற்றமுடியாமல் போகலாம். கலை சம்பந்தப்பட்ட விடயங்களில் ஈடுபட்டோர் கஷ்டமடைவர்.

பெண்கட்கு காதல்கிரகம் சுக்கிரன் 5-ம், 6-ம் இடங்களில் சஞ்சரிப்பது நன்றே. களியாட்டங்களுக்கும், ஆடம்பரங்களுக்கும் உதவி செய்வார். ஆனால் குடும்பரீதியில் முன்னேற்றம் கிடைப்பது கஷ்டம்.

அதிஷ்ட நாட்கள்: ஏப் 21, 22, 23 மு. ப.
மே 1 பி. ப, 2, 3.

துரதிஷ்ட நாட்கள்: ஏப் 25 பி. ப. 26, 27 மு. ப.
மே 4, 5, 6 மு. ப.




விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிக ராசியினர்க்கு சூரிய பகவான் தனக்கு விசேடமான 6-ம் ராசியில் உச்சமாக இராஜத மூர்த்தியாக ராஜபவனி வருவதால் தீயபலன்கள் அடியோடு மறைந்துவிடும். பணவிடயத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்பட முனைந்தாலும் கட்டுப்படுத்திக் கொள்ள சூரியபகவான் பெருமளவு உதவி செய்வார். வாகனுதி சுகம் கிட்டும். ஆரோக்கியம் சிறப்படையும். பிரயாணங்களால் நன்மையுண்டாகும். இனசன விரோதங்கள் உங்களை வாட்டும். எண்ணிய கருமங்களை நிறைவேற்ற முனைவீர்கள்.

வியாபாரிகளுக்கு கொள்வனவு, விற்பனவு சிறப்புற நடக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் லாபகரமாயிருக்கும். அரசாங்க உதவிகள் வேண்டியமாதிரிக் கிடைக்கும். வங்கியில் பணப்புழக்கம் அதிகமாகும்.

உத்தியோகத்தர்கட்கு அதிசிறப்பான மாதம். காரகத்துவக் கிரகம் சூரியபகவானே சேவையைக் குறிக்கும் 6-ம் இடத்தில் சஞ்சரிப்பதால் எல்லா நன்மைகளும் கிட்டும். கந்தோரில் பல வசதிகளும், பாராட்டுகளும் உண்டாகும்.

விவசாயிகளுக்கு பயிர் பலிதமாகும். அரசாங்க உதவியும் கிடைக்கலாகும். காணி, நிலம் சேர வசதிகள் ஏற்படும். தகராறுகளில் வெற்றி உங்கள் பக்கமே. தானிய வகைகளில் சிறு இலாபங்கள் கிட்டும்.


தொழிலாளர்கட்கு தொழிலாளி சனி, செவ்வாயுடன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் கவலையேற்படாது. பிளவுபட்ட தொழிலாளர் ஒன்று சேர்வர். முதலாளிகள் அனுசரணை காட்டுவர். ஊதியம் திருப்திகரமாகக் கிடைக்கும்.

மாணவர்களுக்கு கல்வித் துறையில் அதிக அக்கறையுண்டாகும். ஞாபகசக்தி அபாரமாக விருக்கும். பரீட்சைகளில் சித்தி கிட்டும். விளையாட்டுக்களிலும் நன்மையுண்டாகும். தூரதேசக் கல்விகற்போருக்கு வசதிகள் சாதகமாக அமையும்.

பெண்களுக்கு காதல் கிரகம் சுக்கிரன் 4-ம், 5-ம் இடங்களில் இருப்பது காதலில் வெற்றி, நினைத்த மணவாளனைக் கைப்பிடிக்க உதவியளிக்கும். விவாகமானவர்கள் கணவன்மாரின் வளர்ச்சி கண்டு பிரமித்துப் போவார்கள்.

அதிஷ்ட நாட்கள்: ஏப் 23 பி.ப, 24, 25 மு. ப,
மே 4, 5, 6 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்; ஏப் 27 பி. ப, 28, 29 மு. ப,
மே 6 பி. ப, 7, 8 மு. ப.




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனு ராசியில் ஜனித்தோர்க்கு சூரியபகவான் 5-ம் இடத்தில் சுவர்ண மூர்த்தியாக ராஜபவனி வருவதால் தொடர்ந்து நற்பலன்களை அனுபவிக்க

லாம். மாத நடுப்பகுதியில் சுக்கிரன் மீனராசியில் உச்சம் பெறுவதால் சகலவிதமான வாகன சுகங் களும் கிடைக்கப்பெறும். பெற்றோர் வழியால் நற்காரியங்கள் கைகூடும். 11-ம் இடத்தில் தன காரகன் வியாழன் ஊதிய உயர்ச்சி, இனசன பந்துக்களால் லாபங்களுண்டாகும். செல்வாக்கு அதிகரிக்கும்.

குடும்பஸ்தர்கட்கு களத்திரவழி நன்மைகள், சிறப்புகள் ஏற்படும். நற்காரியங்கள் கைகூடும். குடும்ப ஒற்றுமை வலுக்கும். இனசனங்கள் ஒன்றுசேரலாம்.

வியாபாரிகட்கு வங்கியாளன் வியாழன் வங்கி நிலை சிறப்படைய உதவி புரிவார். முன் முதலீடு கள் நல்ல லாபத்தைத் தரும். மேலும் முதலீடு செய்ய வசதியுண்டாகும். வெளிநாட்டு வர்த்தகம் செய்வோர் சிறப்படைவர்.

உத்தியோகத்தர்கட்கு பதவியுயர்வுகள் கிடைக்கும் அறிகுறி தென்படுகிறது. உழைப்புக் கேற்ற மதிப்பும், கௌரவமும் உண்டு. சிறந்த முறையில் காரியாலய அலுவல்களைக் கவனிக்க வழியுண்டாகும்.

விவசாயிகட்கு சனி, செவ்வாய் தொழில் ஸ்தானத்திலிருப்பதையிட்டுக் கவலைப்பட வேண் டாம். சிறப்பாகக் கமச்செய்கையில் ஈடுபடலாம். காணித்தகராறுகள் பிரச்சினைகளை உண்டாக்காது. புதுப்பயிர்கள் நாட்ட சந்தர்ப்பமுண்டாகும்.

தொழிலாளர்கட்கு சிறப்பான மாதம். தொழிலகத்தில் உண்டாகும் பிளவுகளைச் சமா ளித்துக் கொள்ளலாம். தொழில் வாய்ப்புகளும் வந்துசேரும். கூட்டுறவுத் துறையில் புதுத்தென் புண்டாகும். ஊதியம் குறைவுபடாது.

மாணவர்களுக்கு வித்தியாகாரகன் குரு நல்ல ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் கல்வி முன்னேற்ற முண்டாகும். மாத நடுப்பகுதியில் சுக்கிரன் உச்சம் பெறுவதால் கல்வியில் வெற்றி நிச்சயம். விளையாட்டுக்களிலும் புகழ் கிட்டும்.

பெண்களுக்கு விாகமானவர்கள் கணவனின் முன்னேற்றத்துக்கு வழி கோலுவார்கள். அலங் காரப் பொருட்கள் தேடுவதற்கு உகந்த மாதம். கன்னிப் பெண்களுக்கு விவாக முயற்சி கள் நன்மை தரும்.

அதிஷ்ட நாட்கள்; ஏப் பி. ப. 26, 27 மு. ப
மே 6 பி.ப. 7,8 மு.ப

துரதிஷ்ட நாட்கள்; ஏப் 29 பி.ப.30, மே 1மு. ப.
8 பி.ப, 9,10.



# மகரம்

உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2-ம்கால்

மகரராசியினர்க்கு சூரியபகவான் லோக மூர்த்தியாக 4-ம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். இம்மாதமும், கடந்த மாதத்தைப் போன்று தீயபலன்களே கூறவேண்டியுள்ளது. மாத முற்பகுதி பொருள் வரவுக்கு நன்றாயிருப் பினும் நட்டங்களுக்கும், எதிர்பாராத திருப்பங் களும் குறைவிருக்காது. நீண்ட பயணங்களால் நட்டமேற்படலாம். மாதா, பிதா வழிகளில் பொறுப்பு அதிகமாகும்.

குடும்பஸ்தர்கட்கு அமைதி ஏற்படுவது கஷ்டம். புத்திரகாரகன் கேந்திரத்திலிருப்பதால் புத்திரர்கட்கு நன்று. பணக்கஷ்டங்கள் அதிக மாகும். களத்திர நட்டங்கள், மனநோய்கள் ஏற்படும்.

வியாபாரிகட்கு வெளிநாட்டு வர்த்தகம் தடங்கல் ஏற்பட்டு நட்டமுண்டாக்கலாம். கள்ள மார்க்கட் வியாபாரம் பாதிப்படையலாம். பணக்கஷ்டங்கள் மலிந்து காணப்படும்.

உத்தியோகஸ்தர்கட்கு சூரியன் உச்சம் பெறுவதால் நிலைமை சமாளிக்கக்கூடியதாயிருக் கும். இருப்பினும் அதிகாரிகளின் எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் குறைவிருக்காது. பொறுத்திருந்து கருமமாற்றவும்.

விவசாயிகளுக்கு செவ்வாய், சனி சேர்க்கை தொடர்ந்து நட்டத்தைத் தரும். தகராறுகள் நீடிக்கும். பயிர்கள் தேடுவாரற்று மேலும் பாதிப்படையும். அரசாங்கத் தொல்லைகள் அதிகரிக்கும்.

தொழிலாளர்கட்கு தொழில் வாய்ப்புகள் கிடைப்பது கஷ்டம். வசதியற்ற சூழ்நிலையில் தொழில்புரியவேண்டி ஏற்படலாம். கடின உழைப்பு உண்டாகும்.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் குறைவ தால் குழப்பமுண்டாகும். பரீட்சைகளில் சித்தி யடைவது கஷ்டம். நேர்முகப்பரீட்சைகளும் சாதகமாக இல்லை. வெளிநாட்டுக்கல்வி பயில் வோர் பாதிப்புறமாட்டார்கள்.

பெண்கட்கு களியாட்டங்கள் ஆடம்பர வாழ்க்கை முதலியவற்றை சுக்கிரன் தூண்டுவார். விவாகமானவர்கள் வியாழன் 10-ல் சஞ்சரிப்ப தால் பாதிப்படைய மாட்டார்கள். காதலிலீடு பட்டோர் நன்மை பெறுவர்.

அதிஷ்ட நாட்கள்: ஏப் 27 பி. ப. 28, 29 மு. ப.
மே 8 பி. ப. 9, 10.

துரதிஷ்ட நாட்கள்: ஏப் 14, 15, 16 மு. ப.
மே 1 பி.ப. 2,3,11,12,13 மு.ப.




அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி, 1, 2, 3-ம் கால்

கும்பராசியினர்க்கு சூரியபகவான் சுவர்ண மூர்த்தியாக 3-ம் ராசியில் இராஜபவனிவருகின் றார். ஸ்தானபலம், மூர்த்திபலம் பெற்றுச் சஞ் சரிப்பதால் பல வித கஷ்டங்கள் நிவிர்த்தியாகும். திரிகோண ராசியில் வியாழனின் தெய்வீக அரு ளால் காரியங்கள் அனுகூலமாகும். தேகசுகம் கடந்த மாதத்தைவிட சிறப்பாக இருக்கும். இன சன உறவுகள் வளர்ச்சியடையும். நற்செய்தி கள், நற் பெயர் முதலியன உண்டாகும். தன வரவு செலவுக்கேற்ப அமையும். சனி, செவ்வாய் 8-ம் இராசியில் இருப்பதால் தடைகள், குழப் பங்கள் ஏற்படலாம்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பத்தின் புத்திரகாரக னுகி 9-ம் இராசியில் இருப்பதால் களத்திர புத் திர நன்மைகள் உண்டாகும். அங்கத்தவரின் நற்செய்திகள், நல்வாழ்த்துக்கள் கிடைக்கப் பெறும். பணப்புழக்கத்துக்குக் குறைவில்லை.

வியாபாரிகளுக்கு செட்டி புதன் 3-ம் இடத் தில் தனகாரகன் வியாழனின் பார்வை பெறுவ தால் எல்லாம் சிறப்பாக இருக்கும். பணத்தட் டுப்பாடு ஏற்படாது. முன் முதலீடுகள் லாபம் தரும். கள்ளச்சந்தைவியாபாரம் நன்மையளிக்கும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல் கிரகம் சூரிய னைச் செவ்வாய் பார்ப்பதால் சில தடைகள் ஏற்பட்டாலும் தொடர்ந்து கருமங்களை நிறை வேற்றலாம், அதிகாரிகளின் மனநிலை உங்களுக் குச் சாதகமாக அமையும்.

விவசாயிகளுக்கு பாதிப்படைவதால் அதிக நன்மை எதிர்பார்க்கமுடியாது. பயிர் அழிவுகள் ஏற்பட்டாலும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அரசாங்க உதவிகள் நட்டங்களை ஈடுசெய்ய வழி வகுக்கும்.

தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்புகள் இடைக்கிடையே கிடைத்தாலும், செலவினங் களைச் சமாளித்துக் கொள்ளலாம். கூட்டுற வாளர், பங்குத்தொழிலாளர் சிறிது அமைதி யைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் வளர ஞாபகசக்தி உதவியளிக்கும். பரீட்சைகளில் வெற்றி கிடைக்கும். நேர்முகப் பரீட்சை முடிவு கள் திருப்தியளிக்கும்.

பெண்கட்கு தாலியைக் குறிக்கும் 8-ம் இடத்தில் செவ்வாய் கணவனுக்கு தீங்கிழைக்க நேரிட்டாலும் சூரியபகவான் காப்பாற்றுவர். காதல் விவகாரங்கள் வெற்றியளிக்காவிடினும் பிரச்சினைகள் உருவாகாது.

அதிஷ்ட நாட்கள்; ஏப் 14, 15, 16, மு. ப.
29 பி. ப. 30.
மே 1 மு.ப. 11,12,13மு.ப.

துரதிஷ்ட நாட்கள்; ஏப் 16 பி. ப. 17, 18
மே 4, 5, 6, மு. ப. 13 பி. ப. 14.




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் ஜனனமானவர்கட்கு சூரியபக வான் தாம்ரமூர்த்தியாக 2-ம் இராசியில் வலம் வருவதால் நற்பலன் நிகழ இடமில்லை. அத்து டன் 7-ல் சனி, செவ்வாய் சேர்க்கை பெற்று ஜன்மராசியைப் பார்ப்பது எல்லா நடவடிக்கை களிலும் தடங்கல்கள் உண்டாகும். ஆரோக்கி யம் சீரடையாது. பிரயாணங்களால் நட்டங்கள்

ஏற்படலாம். விபத்துக்கள் ஏற்படவும் கூடும். வாகனுதிகளால் கஷ்டமுண்டாகும். மாதபிற் பகுதி சகல வழிகளிலும் நற்பலனைத்தரும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானத்தில் சூரியன், புதன், செவ்வாயால் பார்க்கப்படுவதால் வாக்கு, கலகங்கள், பிரிவினைகள் உண்டாகும். அட்டமத்தில் வியாழன் மேலும் குடும்பக் கௌரவத்தைக் கொடுக்கும்.

வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் மந்தநிலை நீடிக்கும். மிகவும் பிரயத்தனப்பட்டே அந்தஸ்தைக் காப்பாற்ற வேண்டும். வங்கிநிலைபரம் சுமாராக இருக்கும். ஆடை, ஆபரண வியாபாரம் தொடர்ந்து பாதிப்படையாது.

உத்தியோகத்தர்கட்கு நன்றல்ல. வியாழ பகவான் பலவிதத்திலும் துன்புறுத்துவார். கஷ்டப்பிரதேச மாற்றங்கள், வசதிகுறைவான சூழ்நிலைகள் உருவாகலாம். தற்காலிக வேலை நீக்கம், சுகவீன லீவுகள் என்பன உங்களை எதிர் கொண்டு அழைக்கின்றன.

விவசாயிகளுக்கு விவசாயி சனி 7-ம் இடத்தில் தடை, தாமதங்களைக் கொடுப்பார். தகராறுகளுக்கும் குறைவிருக்காது. வீண்வம்புகளால் அரசியல் தொல்லைகள் ஏற்படலாகும். பயிர்கள் வரட்சி, நோய் முதலியவற்றல் பாதிப்படையும்.

தொழிலாளர்கட்கு செய்தொழில் விருத்தியடையாது. கூட்டுறவுத் துறையிலும் முன்னேற்றம் கிட்டாது. சொந்தத் தொழில் புரிவோர்க்கு வாய்ப்புகள் குறைவாகக் கிடைக்கும். ஊதியம் பற்றுக்குறையாகவே இருக்கும்.

மாணவர்கட்கு வித்தியாகாரகன் புதன் உச்சம் பெற்று சூரியபகவானுடன் இருப்பது நன்று. விளையாட்டுக்களில் அக்கறை அதிகரித்து கல்வியைப் பாழாக்க நேரிடும். நேர்முகப் பரீட்சையில் தடைகள் ஏற்படினும் வெற்றியுண்டாகும்.

பெண்களுக்கு காதல் விவகாரங்களில் ஈடுபட சனி, செவ்வாய் விடமாட்டார்கள். கணவனுக்கு தொல்லைகள் உண்டாகும். விவாகப் பேச்சுகள் கைகூடாது. அவமானமும் ஏற்படலாம்.

அதிஷ்ட நாட்கள்; ஏப் 16 பி.ப. 17, 18
மே 1 பி.ப, 2,3,13 பி.ப. 14.

துரதிஷ்ட நாட்கள்; ஏப் 19, 20, மே 6 பி. ப.
7, 8 மு. ப.

## சாவதற்கு முன்னே!

''கோப்பாய் - எஸ். சிவம்''

நீ வரைந்த ஓவியத்தை நீடு புகழ் சேர்ந்ததெனில்
நிமலன் அதை வரைந்தான் என்றெண்ணு!
பா வரைந்த போதில் அதைப் பார்முழுதும் பாடுமெனில்
பரமன் அதற்(கு) ஆசிசெய்தான் நம்பு!

நீ வனைந்த பானையதில் நித்தமும்சோ றுகுதெனில்
ஈசன் அதில் பிச்சையிட்டால் நம்பு
நீ இணைந்த பாவை ஒரு சிறுமழலை பெற்றுவிட்டால்
நிழலருமை உண்டுனக்கு நம்பு.

ஓவியத்தில் கோணல் வரும் பாரினிலே வழுவும் வரும்
உனக்கவைகள் செருக்கடக்கும் செயல்கள்
சாவதன் முன் சகத்தினிலே சாமியை நீ எண்ணிவிட்டால்
சங்கடங்கள் தோன்றுவதும் ஏது?

# கிரகங்களும் அரசியலும்

" பவானி — பருத்தித்துறை "

இசைத் தட்டிலிருந்து ஓர் ஊசி முனையானது இசையை வெளியே கொண்டு வருவது போல் உலகிற்கே புரியாது மறைந்து கிடக்கும் திறமைகளைச் சாதகத்திலிருந்து எடுத்துக் காட்டிவிட முடிகிறது.

இசை காதுக்குக் கேட்கிறது; கண்ணுக்குத் தெரியவில்லை. திறமையும் நேரடியாகத் தெரிவதில்லை; சாதனைகள் மூலம் புலனாகிறது.

விதைக்குள்ளே மரம்; மரத்துக்குள்ளே மலர்கள், கனிகள்! யாவையும் மர்மமாக வைத்து விட்டான்,

சாதகத்திற்குள்ளே, வாழ்க்கை; வாழ்க்கைக்குள்ளே பல மேடு பள்ளங்கள், பலவித பயணங்கள் சந்திப்புகள், மாற்றங்கள், இன்பதுன்பங்கள் வெற்றி தோல்விகள், லாபம்-இழப்புகள் யாவையும் மறைத்து வைத்துவிட்டான்.

சமயம் மறைத்து வைத்தவனைக் கண்டு பிடிக்க முயல்கிறது.

சோதிடமோ மறைத்து வைத்த சம்பவங்களை கண்டுபிடிக்க முயல்கிறது.

எனவே பூஜ்ஜியத்திலிருந்து கொண்டு இந்த இராச்சியத்தை ஆளும் அந்த நாயகனை அறிய முயல்கின்றோம். அவன் அரசியலை சமயம்தான் காட்டுகின்றது

இப்புவியிலிருந்தே இவ்விராஜ்ஜியத்தை ஆளும் பிண்டங்களின் அரசியலை சோதிடம்தான் காட்டுகின்றது. இகலோக சுகங்களைக் கொடுப்பவன் சுக்கிரன். இன்ப சுகங்கள் யாவையும் இராஜ்ஜியம் பண்ணுபவன் சுக்கிரனே.

பரலோக சாதனைக்கும், ஆத்ம உயர்வுக்கும் காரகன் குருவாகும்.

மக்களின் நல்ல தூதனே மகேஸ்வரனின் தூதனாவான். எனவே மக்களின் தூதனில் அல்லது பிரதிநிதியில் புதன் நன்கு அமைதல் வேண்டும். சாதகத்தில் இதன் நிலையைப் பொறுத்துத்தான் ஒருவர் மக்கள் பிரதிநிதியாய் அமைவார்.

மக்கள் பிரதிநிதிக்கோ அல்லது மந்திரிக்கோ ஆணையும் அதிகாரமும் உண்டு. இதற்கு சாதகத்தில் செவ்வாய் நன்கு அமைதல் வேண்டும்.

ஒரு அரசியல்வாதிக்கு முக்கியமாக பேச்சுத் திறனும், நம்ப வைக்கும் தந்திரமும், பிரபல்யமும், அதிஷ்டமும் இருந்தால்தான் அரசியலில் வெற்றிவாகை சூடலாம்.

குருவும் புதனும் நன்கு அமைந்தால்தான் ஒருவர் சிறந்த பேச்சாளராக வர முடியும். அத்துடன் செவ்வாயும் நன்கு அமைந்து விட்டால் மேடைக் கூச்சமின்றி விபரங்களை மிகவும் நுணுக்கமாக எடுத்துக் காட்டி, விளக்கி சரியோ, பிழையோ மக்களை நம்ப வைத்து அவர்களைத் தனது பக்கத்திற்கு ஈர்த்துவிட முடியும்.

ஜாதக பாரிஜாதத்தின்படி ஒருவர் மந்திரியாய் வரவேண்டுமானால் அவருடைய சாதகத்தில் (a) சூரியன், செவ்வாய், புதன், சனி முதலியோர் ஒன்று சேர்ந்திருத்தல் வேண்டும்.

கிருஷ்ணமூர்த்தி பத்ததியின்படி சூரியன், செவ்வாய், புதன், சனி முதலிய கிரகங்களில் ஒருவர் மற்றைய கிரகத்தின் இராசியிலும், அடுத்தவரின் நட்சத்திரத்திலும் மிகுதியாக உள்ளவரின் கலையிலும் அமைதல் வேண்டும். உதாரணமாக சூரியன் சனி இராசி செவ்வாய் சாரம் புதன் கலையில் அமையும்போது மந்திரியாகும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதுவும் சூரியன் காலத்திலடைகிறது. இலக்கினம் அல்லது 10-ம் வீடும் சூரியனுடன் சம்பந்தப்படும்போதுதான் மேற்கூறிய வாய்ப்பு ஏற்படும்.

(b) சந்திரன், புதன், குரு, சுக்கிரன், சனி, முதலிய கிரகங்கள் ஒரு பாவத்தில் (இராசியல்ல) ஒன்று சேர்ந்திருந்தால் சாதகர் மந்திரியாவர்.
கிருஷ்ணமூர்த்தி பத்ததியின்படி (1) சுக்கிரன், குருராசி புதன்சாரம் சந்திர கலையில் நிற்கும் போது சனி சுக்கிரனை 3-ம் பார்வை பார்த்தல்

வேண்டும். (2) சனி, புதன் இராசி குருசாரம் சந்திர கலையில் நிற்கும்போது சுக்கிரன் பார்வை விழ வேண்டும். (3) சனி, சுக்கிர இராசி சந்திர சாரம் குரு கலையில் நிற்கும்போது புதன் பார்த்தல் வேண்டும். இப்படியாகப் பலவித நிலைகளில் சந்திரன், புதன், குரு, சுக்கிரன், சனி முதலியோர் சம்பந்தப்படும்போது சாதகர் மந்திரியாவர்.

மேற்கூறிய ஐந்து கிரகங்களும் ஒன்று கூடியிருத்தல் வேண்டும் என்ற நியதி தேவையில்லை.

ஜாதக பாரிஜாதகத்தின்படி மூன்று கிரகங்கள் தங்கள் சுய இராசியில் நின்றால் அவர் மந்திரியாவர். அப்படியான அமைப்புடைய பல சாதகங்களைப் பார்த்திருக்கிறேன். அவைக்குரியவர்களெல்லாம் மந்திரிகள் அல்ல!

பால தீபிகையின்படி புதன்தான் ஒரு நல்ல அரசியல்வாதியை உருவாக்க முடியும். அரசியல் ஒரு சூதாட்டம். அதை அறிவதற்கு 5-ம் வீட்டை ஆராய்தல் வேண்டும். 5-ம் வீடு தேர்தலையும் குறிக்கும். எனவே மந்திரிப் பதவிக்கு 5-ம் வீட்டுடன் குரு, சூரியன், சந்திரன் முதலிய கிரகங்களையும் ஆராய்தல் வேண்டும்.

கிருஷ்ணமூர்த்தி பத்ததியின்படி மந்திரிப் பதவிக்கு 1ம், 6ம், 9ம், 10ம் வீடுகளின் முனைகளை ஆராய்தல் வேண்டும். இம் முனைகளுக்கு சுப பார்வை கிட்டல் வேண்டும். இதன் பின்பு இவ் வீடுகளின் குறிகாட்டிகளை எடுத்து ஆராய்தல் வேண்டும்.

கௌரவ ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஜனனசாதகத்தில் முன்பு கூறிய அமைப்புகள் காணப்படுகின்றன.

அவரின் உதய லக்கினம் 23 பாகை 04 கலை கன்னி. இது புதன் இராசி சந்திரசாரம் சூரிய கலை சனி உபகலையில் அமைகின்றது. எனவே இதில் உதய லக்கினமுனை புதன் / சந்திரன் / சூரியன் / சனி முதலியோர் சம்பந்தப்படுகின்றார்கள். சந்திரனும் செவ்வாயும் கட்டுத் தழுவிய நிலையில் காணப்படுவதால் சந்திரனுக்குப் பதிலாக செவ்வாயைக் கொள்ளல் வேண்டும். அப்போது உதயலக்கின முனையில் முதலாம் நியதி காணப்படுகின்றது.

இராகு 16 பாகை 59 கலையில் கடகத்தில் நிற்கிறான். இந்நிலையுடன் செவ்வாய் (சந்திரன்), புதன், சூரியன், சனி (கேது) முதலியோரின் தொடர்பு இருப்பதாலும் உதய முனை இராகுவுடன் தொடர்பு வைத்திருப்பதாலும் இராகுவின் காலத்திலும் மந்திரிப்பதவி வகித்தார்கள்.

குரு 15 பாகை 44 கலை மிதுனத்தில் நிற்கிறான். இந்நிலை புதன் இராசி இராகு சாரம் சுக்கிர கலையில் அமையும். இராகு சந்திரனின் பிரதிநிதி: சனி குருவை (120 பா) சுப பார்வை பார்க்கிறான். இதனால் இந்நிலையில் புதன், சந்திரன், சுக்கிரன், குரு, சனி முதலியோர் இரண்டாம் நியதியின்படி சம்பந்தப்படுகின்றார்கள். குரு 10ம் வீட்டு முனையின் கலையதிபதி. எனவே குருதசை (சுக்கிர புத்தி) யில் பிரதம மந்திரியானார்கள்.

| | | | |
|---|---|---|---|
| vii 23-04 | viii 23-41 | ix 22-54 | குரு 15-44<br>நெ 19-55<br>x: 21-26 |
| vi 21-53<br>சனி (வ)<br>18-18 | 17-9-1906<br>79°கி 58′&6°வ56′ | | ரா 16-59<br>xi: 20-51 |
| v 20-51<br>கே 16-59 | பிறந்த நேரம்–காலை<br>7மணி 25நிமி 21செ<br>அயனும்சம் 22° 27′ | | செ 10-28<br>சந் 12-34<br>xii 21-53<br>புத 24-28 |
| vi 21-26<br>யுரே 12-07 | iii 22-54 | ii 23-41<br>சுக் 17-11 | சூரி 0-49<br>லக் 23-04 |

பிறந்த போது நின்ற தசை:- கேது மகாதசை 0 வருஷம் 5 மாதம் 25 நாள்

| கிரகங்கள் | நட்சத்திராதிபதி | கலையதிபதி |
|---|---|---|
| சூரியன் | சூரியன் | இராகு |
| சந்திரன் | கேது | புதன் |
| செவ்வாய் | கேது | சனி |
| புதன் | சுக்கிரன் | புதன் |
| குரு* | இராகு | சுக்கிரன் |
| சுக்கிரன்* | இராகு | சுக்கிரன் |
| சனி (வ) | இராகு | சந்திரன் |
| இராகு | புதன் | புதன் |
| கேது | சந்திரன் | சனி |
| யுரேனஸ் | கேது | புதன் |
| நெப்ரியூன் | இராகு | செவ்வாய் |

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் சாதகத்தில் உதயலக்கினம் 5 பாகை 32 கலையில் கன்னியில் அமைகிறது. இது புதன் இராசி சூரிய சாரம் புதன் கலை சுக்கிர உப கலையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| குரு 22-45 vii 5-35 | சூரி 4-28 viii 6-40 புத 7-21 | xi 6-51 சுக் 19 52 | x 5-43 சனி 18-11 |
| vi 4 24 | 17-4-1916 80° கி 41′ & 7° வ 17′ பிறந்த நேரம் பி. ப. 4 மணி 17 நிமி | | xi 6-38 நெ(வ) 7-17 கே 11-27 செவ் 21-35 |
| யு 26-33 ரா 11-27 v 6-38 | | | xii 4-24 |
| vi 5-43 | iii 6-51 | ii 6-40 | i 5-32 சந் 24-30 |

பிறந்தபோது நின்ற தசை:- செவ்வாய் தசை 6 வரு. 1 மாதம் 20 நாள்.

| கிரகங்கள் | நட்சத்திராதிபதி | கலையதிபதி |
|---|---|---|
| சூரியன் | கேது | சந்திரன் |
| சந்திரன் | செவ்வாய் | இராகு |
| செவ்வாய் | புதன் | சூரியன் |
| புதன் | கேது | இராகு |
| குரு | புதன் | சந்திரன் |
| சுக்கிரன் | சந்திரன் | கேது |
| சனி | இராகு | சந்திரன் |
| இராகு | சந்திரன் | செவ்வாய் |
| கேது | சனி | சந்திரன் |
| யுறேனஸ் | செவ்வாய் | குரு |
| நெப்ரியூன் | சனி | புதன் |

யோகக்காரன் — சூரியன்,

அவயோகி — சனி

செவ்வாய் — புதன் சாரம் சூரிய கலையில் நிற்கிறுன்.

சனியின் வீட்டில் இராகு நிற்பதால் சனியின் பிரதிநிதியாகிறுன்.

புதனும் சந்திரனும் இராகு கலையில் நிற்பதால் இராகுவின் ஆதிக்கத்திற்கு உள்ளாகின்றுர்கள். இதனுல் இராகுவிற்குப் பதிலாக சனி, சந்திரன், புதன் முதலியோரின் பலன்களையும் கொள்ளலாம்.

அதனுல் உதயலக்கினம் புதன் இராசி / சூரிய சாரம் / புதன்கலை / சுக்கிர உபகலையில் நிற்பதை புதன் / சூரியன் / புதன் / இராகு / சுக்கிரன் (செவ்வாய்) (சனி) (சூரியன்) நிற்பதாகக் கருதல் வேண்டும். அப்போதுதான் மந்திரி யாவதற்கு வேண்டிய நியதியை புதன், செவ்வாய், சனி, சூரியன் முதலிய கிரகங்கள் அளிப்பதால் இவர்களின் காலத்தில் அப்பலனை எதிர்பார்த்தல் வேண்டும்.

இவர்களுடைய சாதகத்தில் 12-ம் வீட்டதிபதி 8ம் இராசியில் உச்சமடைந்திருக்கிறுன். அதன் பலன் என்ன? சூரியன் 12-ம் வீட்டு முனையுடன் சம்பந்தப்பட்டு 7-ம் பாவத்தில் நிற்கிறுன். அதனுல் அவன் காலத்தில் சாதகர் தனது கர்மத்தின் பலனை அனுபவிப்பார்:

தாம் செய்யும் நன்மை என்றே ஒருநாள் ஒரு வடிவத்தில் வட்டியோடு நமக்கு திரும்பி விடுகின்றது. அதேபோல் ஒருவர் செய்த தீமை கொடுத்த வட்டியோடு அவருக்கே போய்ச் சேருகிறது. எக்காலத்தில் அது நடக்கும் என்பதுதான் இரகசியம். ஆனுல் நடக்கும் என்பது உண்மையாகும். இவர்கள் விடயத்தில் சூரியனின் காலத்தில் நடந்து விடுகிறது.

சூரியன் யோகி; உச்சமடைந்திருக்கிறுன். அவன் கேதுவுக்குரிய அசுவினி நட்சத்திரத்தில் நிற்கிறுன். அதனுல் அவன் கெட்டுப்போய் விட்டான். புதனுடன் ஒன்றுகூடி கேதுவின் நட்சத்திரத்தில் நிற்பதால் புதன் தசை சூரிய புத்தியில் தீமைகள் விஸ்வரூபம் எடுக்கின்றன.

5-ம் வீடு குழந்தைகள், உபதேசங்கள், மனம் தர்மம், பூர்வ புண்ணியம், புத்திகூர்மை முதலியவைகளைக் குறிக்கும். 5-ம் வீட்டு முனையின் கலையதிபதி புதன் 8-ம் முனையுடன் ஒட்டி நிற்பதால் மனமும், தர்மமும் புதனின் காலத்தில் கெட்டு விடும். மனமும், தர்மமும் கெட்டுப்போனுல் மனேதர்மம் கெட்டுப்போய் விடுகிறது. அரசியலில் மனேதர்மம் கெட்ட வேளையில்தான் சமதர்மம் என்ற வார்த்தை அடிக்கடி அடிபடும்.

புதனும், சூரியனும் கேதுசாரத்தில் நிற்கிறுர்கள். கேது கேது 11-ல் நிற்பதால் புதன் தசை

சூரிய புத்தியில் கர்மத்தின் பலனை அனுபவித்துத் தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்படுகின்றது. கேது செவ்வாயுடன் நிற்பதால் அனுபவம் மிகவும் வேதனைக்குரியதாயிருக்கும். கேது நெப்ரியூனுடன் கட்டித் தழுவிய நிலையில் நிற்பதால் அக்காலத்தில் வெறும் பிரமை, மயக்கம், எதுவும் இயலாமை, சகலமும் நிலையாகிவிட்டது போன்ற ஒரு தோற்றம் இவைகள் யாவும் உறுதியாகிவிடும்.

7-ம் வீட்டு முனையின் கலையதிபதி புதன் 8-ல் நிற்பதால் பங்காளியால் அல்லது பகிரங்க எதிரியால் அலைச்சல், வழக்கு என்பனவுண்டு. புதன் 10-ம் வீட்டதிபதியாகி 8-ம் முனையில் நிற்பதால் தொழில், அந்தஸ்து, கௌரவம், யாவும் மறைகிறது. 5-ம் வீட்டு முனையின் கலையதிபதி புதன் 8-ம் வீட்டு முனையுடன் ஒட்டி நிற்பதால் அதன் காலத்தில் இவரின் உறவு குறைகிறது. 5-ம் வீடு தேர்தல், அரசியல் முதலியவைகளைக் குறித்தால் அவையும் மறைந்து போகிறது. 5ம் வீடு குடியியல் உரிமையானால் அதுவும் புதன் காலத்தில் அழிந்து போகின்றது. 5-ம் வீடு போட்டி, வழக்கு முதலியவைகளைக் குறித்தால் அவையும் மறைந்து போகின்றது.

12-ம் வீட்டதிபதி 7-ல் நிற்பதால் இரகசிய விரோதிகளால் வழக்கு ஏற்படும், அல்லது சூரியன் அரசாங்கத்தைக் குறிப்பதால் அரசாங்கத்தால் வழக்கு ஏற்படும்: புதன் சூரியனுடன் ஒன்றுசேர்ந்து நிற்பதால், புதன் தசை சூரிய புத்தியில் அதை எதிர்பார்த்தல் வேண்டும். புதன் 8-ம் முனையில் நிற்பதுடன் நெப்ரியூனுடனும் கூடி கேதுவின் சாரத்தில் நிற்பதால் புதனின் காலத்தில் இவர் தாக்கல் செய்யும் வழக்குகள் சாதகமாக அமையாது.

புதன் கமிஷன்களையும் விசாரணைகளையும் குறிக்கும். உச்சம் பெற்ற சூரியன் உயர் அரசாங்க அதிகாரியைக் குறிக்கும். அதனால் அவர்களின் காலத்தில் அரசாங்கத்தால் அல்லது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கமிஷனைச் சந்திக்க நேர்ந்தது. அக்காலை குற்றச்சாட்டுகளை எதிர்த்து வாதாடுவதற்குப் பதிலாக ஒரே ஒருமுறை சென்று வெறும் அறிக்கைகளை வெளியிட்டு வீடு சென்றதால் அவரின் எதிர்ப்பும் தோல்வியடைந்து விட்டது. அதன்பின்பு கட்சிக் காரியாலயத்தையிட்டு வழக்கு தாக்கல் செய்தபோதும் அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

புதன் அஸ்வினி நட்சத்திரத்தில் நிற்கிறான். அஸ்வினிக்கு அதிபதி கேது. கேது 11-ல் நிற்பதால், புதன் காலத்தில் கௌரவமும் இலாபமும் கிடைத்தல் வேண்டும். கேது நெப்ரியூனுடன் கட்டித் தழுவிய நிலையில் நிற்பதால் மேற் கூறியவை நடப்பது சந்தேகம். நிஜ வாழ்க்கையில் அவமானமும் நட்டமுமே உண்டு. புதன் இராகு கலையில் நிற்கிறது. இராகு 5-ல் நிற்கிறான். 5-ம் வீடு 7-ம் வீட்டிற்கு 11-ம் வீடாக அமைந்துவிட்டது. அதனால் புதன்தசை பொதுவாக, இவர்களின் எதிரிகளுக்கு அல்லது பங்காளிக்குத் தான் இலாபமாயமையும்.

12-ம் வீடு சிறைச்சாலையைக் குறிக்கும். இராகு சிறைவாசத்திற்கு காரகன். இராகு 12-ம் வீட்டுடன் சம்பந்தப்படவில்லை. அதனால் சாதகர் சிறைவாசத்திலிருந்து தப்பினார். இல்லையேல் இராகு கலையில் நிற்கும் புதனின் காலத்தில் சிறைக்குச் செல்ல நேரிட்டிருக்கும்.

5-ம் வீடு தேர்தல், குடியியல் உரிமை முதலியவைகளைக் குறிக்கும். 5-ல் இராகு அமைந்தபடியால் சிறைவாசத்திற்குப் பதிலாக மேற்கூறியவைகள் பாதிக்கப்படும். இதே இராகு 2-ம் வீட்டு முனையுடன் சம்பந்தப்பட்டு அவ் வீட்டையும் பார்ப்பதால் தேர்தல், குடியியல் பற்றிய பேச்சும் பாதிக்கப்படும்.

4-ம் வீட்டு முனையின் கலையதிபதி 8-ம் முனையில் நிற்கின்றபடியால் வீட்டில் நடக்கவேண்டிய சுபகாரியங்களும் கெட்டுப்போகின்றன. புதன் பன்மையைக் குறிப்பான். செவ்வாயுடன் கூடிய கேதுவின் சாரத்தில் புதன் நிற்பதால் புதன் பல வீடுகளை அல்லது காணிகளையும் குறிப்பான். கேது செவ்வாயுடனும் நெப்ரியூனுடனும் 11-ல் நிற்பதால் இலாபத்திற்காக சில வேலைகள் புதன் தசை புதன் புத்தியில் நடைபெறுவதைக் குறிக்கிறது. புதன் தசை இவர்களுக்கு 1975-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் திகதி ஆரம்பமாகியது என்பது குறிப்பிடத் தக்கது.

கேது புத்தி ஆரம்பமானபோது பெரும் மாற்றம் காத்திருந்தது. கேது சனி சாரத்தில் நின்றபடியால் தொழில், கௌரவம், பெயர், புகழ் (10-ம் வீட்டில் சனி நிற்பதால்) முதலியவைகளுடன் கட்சியிலும் (5-ம் வீடு கட்சியைக் குறிக்கும்) சேவையிலும் (6-ம் வீடு)மாற்றங்கள் காணப்படும்.

மாபெரும் ஸ்தாபனத்தின் அல்லது கட்சியின் தலைவராக இருந்தவர்கள் கேதுவின் செயலால் பிறரை நம்பி வாழும் வாழ்க்கைக்குத் தள்ளப்படும்.

சூரியபுத்தியில் நடக்கும் பலன்களை முன்பு கூறியிருந்தோம். இனிமேல் சுக்கிர புத்தியை ஆராய்ந்து பார்த்தாலும், அவர்கள் நின்ற கிரக சார கலைகளின் காரணத்தால் சூரிய புத்தியிலும் சுக்கிர புத்தியிலும் ஒரே விதமான பலனை அனுபவித்தார்கள்: 6-ம் வீட்டு முனையின் கலையதிபதி சுக்கிரன் 9-ல் நிற்பதால் விரோதிகள் அதன் காலத்தில் தலைதூக்குவார்கள். கேது புத்தியில் கருத்து வேற்றுமை, விரோதங்கள் வளருகின்றன.

சுக்கிரன் கேது கலையில் நிற்பதாலும், கேது நெப்ரியூனுடன் ஒன்று சேர்ந்து நிற்பதாலும் கேது, சுக்கிரன் முதலியோரின் காலங்களில் முற்பிறப்பின் கர்ம பலன்களினால் பல இன்னல்களை அனுபவித்தல் வேண்டும். சந்திர புத்தியில் இரக்கம், மற்றவர்களுடன் இணைய விரும்புதல், தொடர்புகள், கௌரவம், வெளிநாடு செல்ல விரும்புதல், புத்திக்கூர்மை முதலியன காணப்பட்டபோதிலும் இராகு செவ்வாய் சாரத்தில் செல்லும்போது கௌரவம் பாதித்தல், நோய் வாய்ப்படல், உபாதைகள், மரண பயம் யாவும் உண்டாம். செவ்வாய் புத்தி இவர்களுக்கு சூன்யமாகி விட்டது:

உரைவீச்சு

### களங்கம்

சலனமே அற்ற
வான நெற்றியில்
அனுபவச் சுருக்கமாம்
மேகங்கள் மத்தியில்
சந்தனச் சந்திரன்
நடுவில்
குங்குமப் பொட்டு
இவற்றின் கீழே
ஒரு
முறுக்கு மீசையும்
தேவை தானா?

— சி. சதாசிவம்

# பிறந்த திகதிப்படி

## உங்கள் திறமை சாமர்த்தியம்

வே. சின்னத்துரை, நல்லூர்

நீங்கள் எந்த வருடத்திலாயினுஞ்சரி, எந்த மாதத்திலாயினுஞ் சரி ஏதோ ஒரு திகதியில் திருப்பீர்கள். பிறக்கும் ஒவ்வொரு திகதிக்கும் ஒரு பலனுண்டு. பரவலாக அவற்றை இங்கே கூறுவாம்.

## திகதி 22-ல் பிறந்தவர்கட்கு

எதிலும் பூரணத்துவம் அடைய மிகவும் பாடுபடுவீர். பட்டிகள், அனுபந்தங்கள் எல்லாம் சரிவர ஒழுங்கு படுத்தி விதிவிலக்கில்லாமல் அதன்படி நடப்பீர். சரியான நுணுக்கமான வேலைகளிலும், நீதி நெறிக்குரிய வேலைகளிலும் இருந்து நீர் விலகிக்கொள்ள மாட்டீர். எல்லா விஷயங்களிலும் போல நீதி விடயத்திலும் ஒழுங்கையும், நேர்மையையும் நிலைநாட்டுவீர். உமது வரவு செலவுத் திட்டமும் இறுக்கமாகவும் உறுதியாகவும் இருக்கும். உச்ச வரம்பு வருமானத்தை நீர் இலக்காக்கிக் கொள்வதில்லை. ஆனாலும் பாதுகாப்பில் உமது குடும்பத்தை ஓயாமல் கவனிப்பதிலும் மிகவும் சிரத்தை காட்டுவீர். இக் குணாதிசயத்திற்காக நீர் பாராட்டுப் பெறுவீர்.

உம்முடைய குடும்பக் குணங்கள் குலத்தை நாடி நிற்கும். பிரிவின் ஒற்றுமையையும், கொண்டாட்டங்களிலும், அன்பளிப்புகள், திருவிழாக்கள் முதலியவற்றில் நீர் விருப்புடையீர்.

நீர் பண்பு காட்டுவீர். ஆனால் குடும்பத்திலுள்ளவர்களை விட வெளியாருடன் கடும் நட்புக் கொள்ளமாட்டீர். உம்முடைய அன்பு திண்மையானது. ஆனால் வெளிக்காட்டப்படுவதில்லை; உம்முடைய மனைவி திட்டமிடுதல் எல்லாவற்றையும் உம்மிடமே விட்டுவிடுவாள். முழுச் சுமைகளையும் உங்களிடமே நம்பி ஒருவர் சந்தோஷமாக தந்துவிட விரும்புவார்; உங்களை அதற்கு ஒரு தூணாகக் கொள்வார்கள். அவசர காலங்களிலும் நீர் சமாளித்துக்கொள்வீர்.

உங்கள் மச்சங்கள்

# அதிர்ஷ்டமானவையா?...

★ அன்பு நெஞ்சன் ★
(கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.)

**கன்னங்களில் மச்சம்**

கன்னத்தின் எந்தப் பகுதியில் மச்சம் அமையப் பெற்றாலும் - அது அதிஷ்டத்தின் சின்னமாகவே கருதப்படுகின்றது. இருப்பினும் இடது கன்ன மச்சங்களிலும் பார்க்க வலது கன்ன மச்சங்களுக்கு சிறப்புகள் அதிகம்.

மச்சங்களை வலது கன்னங்களில் கொண்டவர்கள் பெரும்பாலும் பரம்பரைப் பணக்காரர் வீட்டுப் பிள்ளையாகவோ, அல்லது வசதி கூடிய இடங்களில் பிறந்தவர்களாகவோ இருப்பர்.

குடும்ப வாழ்க்கையைப் பொறுத்த வரையிலும் இவர்கள் மிக அதிஷ்டசாலிகளே! இவர்களுக்கு வாய்க்கப்பெறும் மனைவியர் நற்குணம் மிக்கவர்களாக மட்டுமன்றி 'பேரழகு' மிக்கவர்களாகவும் திகழ்வதனால் — இவர்களின் இல்லற வாழ்க்கை இன்பம் நிரம்பியதாகவும், அமைதி மயமானதாகவும் விளங்கப்பெறும்.

இவ்வகையினர் கல்வியில் மிகுந்த ஆர்வமும்-ஊக்கமும் மிக்கவர்களாக இருப்பதனால் உயர் கல்வி மூலம் பல சிறப்புப் பட்டங்களைப் பெற வாய்ப்புண்டு. ஆனாலும், இவர்களின் பலன்படி இவர்கள் செய்யும் தொழிலுக்கும் - ஆரம்பத்தில் தேர்ச்சியடைந்த கல்விக்கும் பெரும்பாலும் தொடர்பில்லாமலே அமைந்து விடுகின்றது. (இருந்த போதிலும் இவர்கள் ஈடுபடும் எந்த ஒரு தொழிலும் இவர்களுக்குப் பெருத்த இலாபத்தையும் நிறைந்த வருவாயையும் அளிப்பது கண்கூடு.)

சுமார் முப்பத்தைந்து வயதளவில் இருதய வலி, நரம்புத் தளர்ச்சி, போன்ற நோய்களினால் இவர்கள் சற்றுப் பாதிப்படைய இடமுண்டு. ஆனாலும் உயிராபத்துக்கள் இல்லை!

வலது கன்ன மச்சம் கொண்டவர்களுக்கு ஏற்படும் யோகபலன்களே இடது கன்ன மச்ச நபர்களுக்கும் ஏற்படுகின்றது. எனினும்; வலது கன்ன மச்ச நபர்களுடன் ஒப்பிடும்போது இடது கன்ன மச்ச நபர்கள் தமது வாழ்க்கைப் பாதைகளில் பல சோதனைகளையும் — பிரச்சனைகளையும் சந்திக்கவேண்டி ஏற்படலாம். மேலும் 'மது மேகம்' என்று சொல்லக்கூடிய நீரிழிவு நோய் இடதுகன்ன மச்ச நபர்களுக்குத் தொடர்ந்து காணப்படுகிறது. வாழ்வின் கடைசி காலத்தே பலவேறு விதமான நோய்களினாலும் இவர்கள் அவதிப்பட நேரிடலாம்.

எது எவ்வாறு இருந்த போதிலும் வலது அல்லது இடது கன்னங்களில் மச்சம் அமையப்பெறுவது ராஜயோகத்தைக் குறிக்கும் சின்னமாகவே கருதுகின்றனர். எனவே இடதுகன்ன மச்சம் காட்டும் சில குறைகளைத் தவிர்த்துப் பார்க்கும் போது — வலது அல்லது இடது கன்னங்களில் மச்சம் அமையப் பெற்றவர்கள் அதிஷ்டசாலிகளாகவே வாழ்க்கை நடத்துவர்.

**வயிற்றின் மேல் மச்சம்**

வயிற்றின் மீது மச்சம் அமையப்பெற்றவர்கள் பெரும்பாலும் குறுக்கு வழியில் செல்வம் தேடுபவர்களாகவும், குதிரைப் பந்தயம் அதிஷ்டலாபச் சீட்டு போன்றவற்றில் தீவிர நாட்டமிக்கவர்களாகவும் விளங்குகிறார்கள். சுருக்கமாகச் சொல்லப் போனால், இவர்கள் சூதாட்ட—போட்டிப் பந்தய மனோபாவம் மிக்கவர்களாகவே வாழ்க்கை நடத்துவர்.

திட்டமிடாத போக்கில் வாழ்க்கையைக் கொண்டு நடாத்தும் இவர்கள் கடுமையாக உழைக்கத் தெரியாதவர்களும் கூட. எனவே இவர்களுக்கு சீரான ஒரு வருமானமோ, சீரான ஒரு செழிப்பு நிலையோ அமைவது அரிது. தெளிவாகச் சொல்லப்போனால் இவர்களின் வருமான நிலையில் ஒரு சகடவோட்டத் தன்மையைக் காணலாம்.

பெண்களைப் பொறுத்தவரை வயிற்றின்மீது மச்சம் அமையப் பெற்றவர்கள் ஒழுக்கம், நாணயம் என்பவற்றை மதிக்காதவர்களாகவும், சுயநல உணர்வு கூடியவர்களாகவும் காணப்படுவர். மந்தமான இயல்பு கொண்ட இவர்கள் உழைப்பதிலே எவ்வித அக்கறையும் செலுத்த மாட்டார்கள்.

வயிற்றுப் பாகத்தில் தொப்புளுக்கு அண்மையில் சற்று கீழ்ப்புறமாக மச்சம் அமைந்த பெண்கள் சுவையான உணவுகளில் தீவிர வேட்கை மிக்கவர்களாகக் காணப்படுவர். வலதுபுற வயிற்றில் மச்சம் அமையப்பெற்ற பெண்களுக்கு 'திருட்டுக் குணம்' இயல்பானது. இவர்களுக்கு திருடுவது கூட உற்சாகம் விளைவிக்கும் தொழிலாகவும் அமைந்து விடுகிறது.

(தொடரும்)

நட்சத்திர ரீதியில்

# உங்கள் புத்தாண்டுப் பலன்

இ. கந்தையா, கரம்பன்.

## அசுவினி

பொதுவாக இவ்வருட ஆரம்பம் முதல் நவம்பர் 26-ம் திகதி வரை இராசி அடிப்படையில் முக்கியமான கிரகங்களின் கோசரசஞ்சாரம் இவர்களுக்குச் சாதகமாக அமைந்திருப்பது விசேட அம்சமாகும். சென்ற ஆண்டில் நிகழ்ந்த கஷ்ட நஷ்டங்களில் இருந்து விடுவிக்கப்படுவதுடன் வாழ்க்கையில் பலவித சிறப்புகளும் மன அமைதியும் பெற இவர்களுக்கு வாய்ப்பான காலமாகும். அரசாங்க ஊழியர்கள் பதவி உயர்ச்சி அல்லது வசதியான இடமாற்றம், அதிகாரிகளின் நன் மதிப்பு ஆகியனவற்றைப் பெறுவார்கள். வர்த்தகர்களுக்கு அதிகலாபம் கிடைக்கும். வியாபாரத்தில் முதலீடு செய்ய வாய்ப்பான காலம். பொறியியலாளர்-மருத்துவத்துறையினர் ஆசிரியர்களுக்கு வாழ்க்கையில் நன்மையுண்டு, வருவாய் கூடுதலும் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமும் தேர்ச்சியும் பெறுவர். குடும்பத்தவர்களுக்கு வீட்டில் மங்கள நிகழ்ச்சிகளும் நல்லுறவும் உண்டாகும். கமக்காரருக்கு விளைவு லாபம் தரும். கடன் தொல்லைகள் நீங்கும். முற்பகைகள் தகராறுகள் ஏதும் இருப்பின் சாதகமானவகையில் சமரசம் கிட்டும். பொதுவாக பொருள்வரவு - வீட்டுச்சிறப்பு - இனபந்துக்கள் சிறப்பு, கொண்டாட்டங்கள் விசேட நன்மைக்குரிய காலமாயினும் அக்டோபர் 11-ம் திகதி முதல் டிசம்பர் 11 வரை குருவும், ஜூலை 30 முதல் டிசம்பர் 2 வரை சனியும் நட்சத்திரரீதியில் பாதகமான சஞ்சாரம் செய்வதாலும், மற்றும் கிரகங்களின் துர்க்கோசர சஞ்சார காலங்களிலும் மேற் சொல்லப்பட்ட உத்தம பலன்கள் அதிகம் தடைப்பட்டு மத்திம பலன்களையும் இவர்கள் அனுபவிக்க நேரிடும்.

நவம்பர் 26 முதல் வருடம் இறுதிவரை குரு அட்டமத்திலும் அக்டோபர் 6 முதல் சனி 7-லும் கோசாரசஞ்சாரம் செய்வது நன்மைதராது. இக்காலம் இவர்கள் எதிலும் முன் எச்சரிக்கையுடன் இருத்தல் நன்மையாகும். அதிகாரிகள் கோபம், அவமிருத்துபயம் - பொருள் நட்டம், கடன் தொல்லை, மன அமைதியின்மை, தொழில் பிணக்கு, குடும்பத்தகராறு, வியாச்சிய பயம், சிறைப்பயம் முதலான பல தய பலன்களும் நிகழ இடமுண்டு. எதிலும் முன் எச்சரிக்கையுடன் இருப்பின் அதிகம் பாதிப்பு ஏற்படாதவாறு சமாளித்து விடலாம். விசேடமாக மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள், புது வியாபாரிகள் கவனமாக இருத்தல் நல்லது. ஆனி, புரட்டாதி, தை, மாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## பரணி

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு வருட ஆரம்பம் முதல் நவம்பர் 26-ம் திகதி வரை முக்கியமான கிரகங்களின் கோசார சஞ்சாரம் அனுகூலமாக உள்ளது நன்மையாகும். வாழ்க்கையில் பலவித அனுகூலங்களையும் பெறுவதற்கு இது வாய்ப்பான காலமாகும். எனினும் கோசர ரீதியில் வாய்ப்பு இருந்தாலும், நட்சத்திர ரீதியில் பிரதானமான கிரகங்களின் சஞ்சாரம் பாதகமாக அமைந்துள்ளதால் நன்மைகளுக்கிடையில் சில பாதகமான விளைவுகளையும் இவர்கள் எதிர்நோக்கவேண்டிவரும். குல தெய்வத்தைப் பக்தி சிரத்தையுடன் வழிபடுதல் குரு முதலிய பெரியோர்களின் ஆலோசனைக் கருத்துக்களை அனுசரித்துப்போவதால் நிலைமைகளைச் சமாளித்து

முன்னுக்கு வரலாம். பொதுவாகப் பொருளாதாரப் பிரச்சினைகள் வர இடமில்லை. அரசாங்க ஊழியர் அவதானத்துடன் செயல் படுதல் நல்லது. வியாபாரிகளுக்கு அதிகலாபம் கிடைக்காவிட்டாலும் நட்டம் ஏற்படமாட்டாது. விவசாயிகள் சாதகமான வருமானம் பெறுவார்கள். பொறியியலாளர். மருத்துவத்துறைத் தொழிலாளர் மனநிறைவு பெறுவர். முதலாளிகள் தொழிலாளர்கள் உறவில் நெருக்கடிகள் தோன்றுவிட்டாலும் சிறு சிறு சலசலப்புக்கள் ஏற்பட இடமுண்டு. கலைத்துறையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் சாதாரணமாய் நடைமுறைக் காரியங்களைச் செய்வதிலும் அதிக சிரமங்கள் ஏற்படலாம். அவதானத்துடன் செயற்படாத அரசியல்வாதிகள் அவமானப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டாகலாம்.

அக்டோபர் 11 தொடக்கம் நவம்பர் 26 வரை குருவின் நட்சத்திர சஞ்சாரம் பல மடைவது நன்மையாகும். இக்காலம் இவர்களுக்கு விசேடசுப காலமாக அமையும். நவம்பர் 26-ந் திகதி முதல் வருட இறுதிவரை குரு அட்டமத்திலும், அக்டோபர் 6 முதல் வருட இறுதிவரை சனி 7-லும் கோசர சஞ்சாரம் செய்வது பாதகமாக அமையும். இக்காலம் இவர்களுக்குச் சோதனைக்குமேல் சோதனையான சம்பவங்கள் நிகழக்கூடும். கோசாரசஞ்சாரம் 'பாதகமாக அமையினும், நட்சத்திர சஞ்சாரம் சாதகமாக இருப்பதால் அதிக துன்பம் ஏற்பட இடமில்லை. எனினும் எந்தவிஷயத்திலும் இவர்கள் அக்கறையுடன் அதிக கவனமாகவும் இருக்கவேண்டும். இக்காலத்தில் புதுத்தொழில்கள் தொடங்குதல் முதலான நல்ல விஷயங்களைக் கூடியவரை தவிர்த்தல் நல்லது. பக்தியுடன் குலதெய்வ வழிபாடு இவர்களுக்கு வழிகாட்டியாக அமையும், ஆனி-புரட்டாதி தை-மாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## கார்த்திகை

கார்த்திகை முதலாம் பாதத்தில் செனனமான மேட இராசிக்காரருக்கு பெரும்பாலான கிரகங்களின் கோசர சஞ்சாரம் சாதகமாக அமைந்திருக்கிறது. இந்த நிலையில் உங்கள் வாழ்க்கையில் பல நல்ல நிகழ்ச்சிகள் நிகழ இடமுண்டு. கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த பகை-விரோதங்கள் விலகுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பொருளாதாரத்தில் ஓரளவு தன்னிறைவு ஏற்படும். எடுத்த முயற்சிகளில் காரியசித்தி ஏற்படும். ஆனால் எந்த விஷயத்திலும் ஆத்திரமோ அவசரமோ ஏற்படாதவாறு கவனித்து நிதானத்துடன் செயல்பட வேண்டும். நிதானத்தைக் கைவிட்டால் காரியநட்டமும் எதிர்பாராத கஷ்டங்களையும் ஏற்படுத்துவதுடன் அவமானத்துக்குள்ளாகவும் நேரலாம்.

அரசாங்க ஊழியர்கள் பதவியில் உயர்ச்சி-அதிகாரிகள் ஆதரவு பெறுவார்கள். வர்த்தகர்கள் அதிக லாபம் பெறுவார்கள். பொறியியல்-மருத்துவத்துறைத் தொழிலாளர்கள் மனநிறைவு பெறுவர். ஆசிரியர்-மாணவர் உறவு முன்னேறும். மாணவர்கள் கல்வித்தேர்ச்சி பெறுவர். விவசாயிகளின் உற்பத்தி பெருகினும் வருவாய் அதிகரிக்க இடமில்லை.

நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை குரு அட்டமத்திலும், அக்டோபர் 6 முதல் வருட இறுதிவரை சனி 7லிலும் கோசர சஞ்சாரம் செய்வது பாதகமாகும். இக்காலம் இவர்களுக்கு ஒரு சோதனை காலமாக அமையலாம். அதிகாரிகள் கோபம், பொருள் நட்டம், விபத்துப்பயம் சிறைப்பயம், மன அமைதியின்மை போன்ற கஷ்ட பலன்களைச் சமாளிக்க வேண்டி வரும். தெய்வ வழிபாடு கஷ்ட நிவிர்த்திக்கு வழிகாட்டியாக அமையும். ஆனி - புரட்டாதி - தை - மாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

கார்த்திகை 2-ம், 3-ம், 4-ம் பாதங்களில் ஜனனமான இடப ராசிக்காரருக்கு வருடாதியாக நவம்பர் 26 வரை 6ல் குருவும், அக்டோபர் 6 வரை 5ல் சனியும், ஜூலை 22 வரை 5ல் செவ்வாயுமாகக் கோசர சஞ்சாரம் நிகழ்வது பாதகமாக அமைகின்றது. இக்காலம் இவர்களுக்குக் கடின கஷ்டகாலமாக அமையும். ஆனால் பிரதான கிரகங்களின் நட்சத்திர சஞ்சாரம் சாதகமாக இருத்தலால் கஷ்டங்களுக்கிடையில் நற்பலன்களையும் கலந்து அனுபவிக்கலாம்.

அரசாங்க ஊழியர்களுக்கு அதிகாரிகள் தொல்லை ஏற்படும். வர்த்தகர்கள் முதலைக் காப்பாற்றிக்கொள்வதே சிரமமாக இருக்கும். மருத்துவம் பொறியியல்துறைத் தொழிலாளர் மிகுந்த சிரமங்களுடன் ஓரளவு நிறைவு பெறுவர். அரசியல்வாதிகள், தரகர்கள் அவமானப்படுதலுடன் செல்வாக்கையும் இழக்க நேரிடலாம். விவசாயி

கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிவரும். மாணவர் ஆசிரியர் உறவுகளில் பாதிப்பு உண்டாகும். குடும்பப் பிணக்குகளும் ஏற்படலாம்.

நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை குருவும் அக்டோபர் 6 முதல் வருட இறுதிவரை சனியும் சுப கோசர சஞ்சாரம் செய்தலின் படிப்படியாக இவர்கள் பட்ட துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவார்கள். பொருளாதாரப் பிரச்சினை தீரும். மனநிறைவு ஏற்படும். பெரியவர்களால் உதவி கிட்டும். வேலையற்றோர் புது வேலைவாய்ப்புப் பெறுவர். விவாகாதி சுபநிகழ்ச்சிகள் நிகழும். ஆடி, ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## ரோகிணி

பொதுவாக வருட ஆரம்பம் முதல் நவம்பர் 26 வரை பெரும் பாலான கிரகங்களின் கோசர சஞ்சாரம் பாதகமாக அமைகிறது: அத்துடன் நட்சத்திர சஞ்சாரத்திலும் பலங்குறைந்து காணப்படுகிறார்கள். இக்காலம் இவர்கள் பலவழிகளிலும் பாதிப்புக்குள்ளாவார்கள். கடன்தொல்லைகள் வாட்டும். சிலர் கருவி—விஷ—அக்கினி விபத்துக்களுக்குள்ளாகலாம். சிலருக்கு அவமிருத்து பயமுமே உண்டாகும். சிலர் அரசாங்க விரோதம்—பயம் உடல் உள நோய்வாய்ப்பட்டுத் துன்புறவேண்டி வரலாம். சுருங்கக்கூறின் இந்தநட்சத்திரத்தில் செனனமானவர்கள் வருடமுற்பகுதியில் மிகுந்தசிரமத்துடன் பல எதிர்ப்புக்களையும் துன்பங்களையும் சமாளிக்க வேண்டிவரும். குலதெய்வ வழிபாடும் பெரியோர்கள் ஆலோசனைப்படி நடத்தலும் இவர்களுக்கு நல்வழி காட்டியாக அமையும்.

அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் கோபத்துக்குள்ளாகலாம். அரசியல்வாதிகள் எதிலும் மௌனமாக இருப்பது அவர்களுக்கு நல்லது. வர்த்தகர்கள்- தரகர்கள் சிரமத்துடன் தொழில் செய்யவேண்டிவரும். இயந்திரசாரதிகள், பொறியியலாளர்கள் திடீர் விபத்துக்குள்ளாகி மரணபயமும் ஏற்படலாம். மாணவர் கல்வி முன்னேற்றங்களில் தடைதாமதங்கள் ஏற்படும். ஆசிரியர் மாணவர் உறவு பாதிக்கப்படும்- விவசாயிகள் உற்பத்திக்குறைவும் நட்டமும் பெறுவர். குடும்பங்களின் நல்லுறவு பாதிக்கப்படும்.

அக்டோபர் 6 முதல் வருடஇறுதி வரை சனியும் நவம்பர் 26 முதல் வருடஇறுதி வரையும் குருவும் சுபகோசரசஞ்சாரம் செய்வது அனுகூலமாக அமைகிறது, வருடமுற்பகுதியில் பட்டதுன்பங்கள் படிப்படியாக விலகி மனநிறைவு, தொழில்சிறப்பு பொருள்வரவு, உத்தியோக உயர்ச்சி, வீட்டில் விவாகாதி சுபநிகழ்ச்சிகள் கல்வித்தேர்ச்சி போன்ற சுபபலன்கள் நிகழும். பொதுவாக இக்காலம் இவர்களுக்கு அநேக நன்மையான மாற்றங்களை செய்து சுபீட்சத்தைக் கொடுக்கும். ஆடி, ஐப்பசி மாசி, பங்குனி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## மிருகசிரிடம்

மிருகசிரிடம் முதல் இரண்டு பாதங்களிலும் செனமான இடப ராசிக்காரர்களுக்கு குரு - சனி செவ்வாய் உட்படப் பெரும்பாலான கிரகங்களின் கோசார சஞ்சாரம் இவ்வருடம் நவம்பர் 26 வரை சாதகமாக அமையவில்லை. கொடுக்கல் - வாங்கல் பிணக்குகள் பொருளாதாரப் பிரச்சினைகள் அரசாங்கதுன்பம், சிறைப்பயம், எதிர்பாராத திடீர் நெருக்கடிகள், அவமிருத்துப்பயம், அகாலபோசனம், மனஅமைதியின்மை, போன்றசம்பவங்கள் பெரும்பாலும் நிகழலாம் கோசார சஞ்சாரம் சாதகமாக அமையாவிட்டாலும் பிரதானகிரகங்களின் நட்சத்திர சாரம் சாதகமாக இருத்தலின் அதிகம் துன்பம் ஏற்படமாட்டாது.

அரசாங்க ஊழியர் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகவேண்டியும் வரநேரிடும். வர்த்தகர்களுக்கு இலாபம் இல்லாவிட்டாலும் அதிகநட்டம் ஏற்படமாட்டாது. மருத்துவம்-பொறியியல் - தொழிற் துறையினர் பலவகைச் சிரமங்களுக்கிடையே வாழ வேண்டி இருக்கும். விவசாயிகள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படஇடமில்லை. மாணவர் கல்வியில் பெரும்பாலும் பாதிப்பு ஏற்படும். ஆசிரியர் மாணவர் உறவில் பாதிப்பு ஏற்படலாம். அரசியல் வாதிகள் எதிலும் அவதானத்துடன் இருப்பது நல்லது.

நவம்பர் 26 ன் பின் வருட இறுதி வரை குரு 7 லும் அக்டோபர் 6 முதல்வருட இறுதிவரை சனி 6 லும் கோசாரசஞ்சாரம் செய்வது இவர்கள் வாழ்க்கையில் ஒருபுதியதிருப்பத்தை உண்டாக்கும். முன்பு- அனுபவித்த கஷ்டநஷ்டங்கள் சூரியனைக் கண்ட பனிபோல் விலகத்தொடங்கும். நிலைமைச் சிறப்பு, எதிர்பாராத நன்மைகள், பொருளாதார முன்னேற்றங்கள் வேலையற்றோர்களுக்குப் புதிய வேலைகிடைத்தல் - விவாகாதி சுபசந்தோஷ நிகழ்ச்

சிகள் போன்ற பல நல்லசம்பவங்கள் நிகழும். ஆடி, ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

மிருகசீரிடம் கடைசி இரண்டு பாதங்களிலும் ஜெனனமான மிதுனராசிக்காரருக்கு வருடஆரம்பம் தொடக்கம் நவம்பர் 26 வரை குருவின் கோசாரசஞ்சாரம் சாதகமாக அமைந்திருக்கிறது. மற்றும் பெரும்பாலான கிரகங்களின் கோசார சஞ்சாரமும் இடைக்கிடையே ஓரளவு சாதகமாக அமைந்திருக்கிறது. பொதுவாக இவர்கள் பெரிய எதிர்பார்ப்புகளை அடையாவிட்டாலும், சாதாரண சுபபலன்களை அனுபவிப்பார்கள். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சியுண்டாகும். ஆசிரியர் மாணவர் உறவு வலுக்கும். குடும்பத்தில் நல்லுறவுண்டாகும். மருத்துவம் - பொறியியல் தொழில் துறையினர் வாழ்வில் புதுத்தென்பு தோன்றும் - அரசியல் வாதிகள் - தரகர்கள் செல்வாக்குப் பெறுவர். வர்த்தகர்கள் மட்டான லாபம்பெறுவர். அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் ஆதரவு பெறுவர். வேலையற்றோர் வேலைபெறுவர்-விவாகாதி சுப காரியங்கள் நிறைவு பெறும். ஆவணி, கார்த்திகை, பங்குனி, சித்திரை மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## திருவாதிரை

இந்த நட்சத்திரத்தில் ஜெனனமானவர்களுக்கு வருட ஆரம்பம் முதல் நவம்பம் 26 வரை குருவின் கோசார சஞ்சாரம் சாதகமாக அமைந்தாலும் நட்சத்திர சாரம் சாதகமாக அமையவில்லை. அத்துடன் சனியின் கோசார சஞ்சாரமும் சாதகமாக இல்லை. ஆனால் வருட ஆரம்பம் முதல் டிசம்பம் 2 வரை சனியின் நட்சத்திர சஞ்சாரம் சாதகமாக அமைகிறது. இவர்கள் வாழ்க்கையில் இவ்வருட முற்பகுதியில் சமசுகத்தையும், பிற்பகுதியில் கஷ்டங்களையும் அனுபவிப்பர். கட்டுப்பாடான முன்னேற்றமும் பெறுவர். ஓரளவு கடன் பிரச்சினைகள் தீரும். எதற்கும் இவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்து விடா முயற்சியுடன் கடின உழைப்பால் முன்னேற முடியும்.

அரசாங்க ஊழியர்கள் பொருளாதாரம் குறைந்தாலும் பதவி உயர்ச்சி, அதிகாரிகள் ஆதரவு கிட்டும். மன நிறைவும் பெறுவர். மருத்துவம், பொறியியல் தொழில் துறையினர் வாழ்வில் பெரிய மாற்றமில்லாவிட்டாலும் நிலைமை சீராக இருக்கும். மாணவர், ஆசிரியர் தொடர்பு வலுவடையும். விவசாயிகள் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். அரசியல்வாதிகள், தரகர்கள் செல்வாக்கில் அதிகம் பாதிப்பு ஏற்படமாட்டாது. இயந்திர சாரதிகள், தொழிலாளர்கள் சிறுவிபத்துக்களுக்குள்ளாக வேண்டிவரும். வர்த்தகர்களுக்கு மட்டான லாபம் கிடைக்கும்.

நவம்பர் 26 முதல் குரு, சனி உட்படப் பிரதான பல கிரகங்களின் கோசார சஞ்சாரம் சாதகமாய் அமையவில்லை. பல எதிர்பாராத சிக்கல்கள் இவர்களுக்கு ஏற்படும். சொந்த விருப்பு வெறுப்புக்களை விடுத்து, பொறுமையைக் கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டிய காலம் இது. சிலருக்கு உடல்நலம் பாதிக்கப்படலாம். விபத்துக்கள், அவமிருத்துக்கள் சிற்சிலருக்கு ஏற்படலாம். கடன் தொல்லை சோரசத்துருபயம் பொருள்நட்டம், சேதம் போன்றவையும் சிலருக்கு ஏற்படலாம்.

அரசியல் வாதிகளின் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்துவரும். வியாபாரம் புது முதலீடு செய்வது பேரிழப்பைத்தரும். மாணவர்களின் கல்வி முன்னேற்றம் பாதிக்கப்படும். மருத்துவம், பொறியியல் துறைத் தொழிலாளர் சிரமத்துக்கிடையில் வாழவேண்டிவரும். இந்தக்காலத்தில் தெய்வவழிபாடுதான் இந்த நட்சத்திர காரருக்கு ஓரளவு வழிகாட்டியாக அமையும். ஆவணி, கார்த்திகை, பங்குனி, சித்திரை மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## புனர்பூசம்

புனர்பூசம் முதல் மூன்று பாதங்களிலும் பிறந்த மிதுன ராசிக்காரருக்கு குருவைத்தவிரப் பெரும்பாலான கிரகங்களின் கோசர சஞ்சாரம் சாதகமாக அமையவில்லை. வருட ஆரம்பம் முதல் நவம்பர் 26 வரை குரு கோசார சஞ்சார ரீதியிலும் அக்டோபர் 11 வரை நட்சத்திரசார ரீதியிலும் பலம் பெறுகிறார். சனி வருட ஆரம்பம் முதல் அக்டோபர் 6 வரை கோசர சஞ்சார ரீதியிலும் வருடாதியாக ஜுலை 30 வரை நட்சத்திர சார சஞ்சார ரீதியிலும் பலவீனப்படுகின்றார். செவ்வாய் வருட ஆரம்பம் முதல் ஜுலை 22 வரை கோசர சஞ்சார ரீதியில் பெலவீனப் படுகின்றார். இக்காலங்களில் "கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போதல்" போல இவர்களுக்குப் பலன்கள் நிகழும். மறைமுகமான பகைவர்களின் தொல்லை

களுக்குச் சிலர் தாக்குண்டு அல்லல் உறுவர். எந்த ஒரு செயலிலும் தடைதாமதங்களின் பின்பே முன்னேற முடியும். நண்பர்களும் துரோகிகளாகிச் சிலரைத் துன்பப்படுத்துவர். எவ்வகைத்துன்பம் வரினும் எல்லாவற்றையும் சமாளித்து முடிவில் வெற்றியும் பெறக்கூடியதாக ஒரு பெரியவரின் உதவி இவர்களுக்கு இருக்கும். அதனுல் எல்லாவற்றையும் சமாளித்து விடுவார்கள்.

அரசியல் வாதிகள், பெரிய எதிர்ப்புக்களிடையில் செல்வாக்கை வளர்த்துக்கொள்வர். தரகர்கள் போட்டிகளுக்கிடையில் இலாபம் பெறுவர். அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவார்கள். வியாபாரிகள் மட்டான இலாபம் பெறுவர்; குடும்பங்களில் சிறுபிணக்குகள் ஏற்பட்டாலும் சுமுகமாகச் சமாளிக்கப்பட்டு விடும். மருத்துவம், பொறியியல் தொழில்துறையினரின் உழைப்புக்கு மதிப்பு இருப்பினும் வருவாய் குறையும். விவசாயிகள் உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பால், பாதிப்பு அடைவர். மாணவர் முயற்சிக்கேற்ற அளவில் கல்வித்தேர்ச்சி பெறுவர். ஆசிரியர் மாணவர் உறவில் விசேட மாற்றம் ஏதும் இடம்பெற மாட்டாது. கலைத்துறைத் தொழிலாளர் பாதிப்புக்குறையும்.

நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை குருவின், கோசர சஞ்சாரம் பெலம் குறைந்தாலும் அக்டோபர் 6 முதல் வருட இறுதிவரை சனியின் கோசர சஞ்சாரம் பெலம் பெறுவது குறிப்பிடக்கூடியது. ஒருபக்கம் பிணக்குகள், தொல்லைகள் இருந்தாலும் அதனைச் சமாளிக்கும் திறமையும் இவர்களுக்கு இருக்கும். சிலருக்கு வாக்குவிரோதம் உண்டாகும். இக்காலம் இவர்கள் நாவை அடக்கி வைத்திருந்தால் நலம் பெறுவர். பொருள் நட்டம் சோர சத்துருபயம், மிருத்து அவமிருத்து, பயம், காரியதாமதம். குடும்பத் தொல்லைகள், தாரபுத்திரர் தொல்லை முதலியன அவரவருக்கு அவ்வப்போது வந்தாலும் சமாளித்து விடுவார்கள். இவர்கள் புதுத் தொழிலில் முதலீடு செய்வதைத்தவிர்த்தல் நல்லது. ஆவணி, கார்த்திகை பங்குனி, சித்திரை மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

புனர்பூசம் 4-ம் பாதத்தில் ஜெனனமான கற்கடகராசிக்காரருக்குக் கோசர சஞ்சாரம் முக்கியமான கிரகங்கள் எல்லாம் பலம் குறைந்துள்ளதால், சாதகமாக அமையவில்லை. இவர்கள் பல விதமான சோதனைக்குமேல் சோதனைகளை அனுபவித்துச் சமாளிக்க வேண்டிவரும். வருட ஆரம்பம் முதல் அக்டோபர் 6 வரை சனியும், வருட ஆரம்பம் முதல் ஜூலை 22 வரை செவ்வாயும் கோசர சஞ்சாரத்தில் பலன் பெறுகிறுர்கள். இக்காலத்தில் இவர்கள் சிரமங்களுக்கு மத்தியில் நற்பலன்களையும் அனுபவிப்பர். தவிர்க்கமுடியாத சிலசங்கடங்களைச் சிலர் சமாளிக்கவேண்டி வரும். சிலருக்கு இராசபயம் உண்டாகும். நண்பர்களும் விரோதிகளாக மாறக் கூடும். குடும்பத்தில் தொல்லைகள் அதிகரிக்கும். அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகலாம். அரசியல் வாதிகளுக்குச் சோதனையான காலம் இது. காதல் விவகாரங்கள் ஏமாற்றத்தில் முடியலாம். மாணவர்களின் முயற்சிக்கு ஏற்பக் கல்வித் தேர்ச்சி பெறுவர். நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை குருவின் கோசர சஞ்சாரம் பலம் பெறுவதால் இக்காலம் இவர்களுக்கு நன்மைதர இடமுண்டு. எதிர்பாராத பொருள் வரவு அரச ஊழியர், தனியார் துறைத் தொழிலாளர் பதவி உயர்ச்சி, முன் தடைப்பட்டிருந்தவை நிறைவு பெறுதல், வீட்டில் விவாகாதி சுப சம்பவங்கள் நிகழுதல், விவசாயத்தில் வருவாய் கூடுதல், வியாபாரத்தில் மட்டான லாபம் பெறுதல், காதல் பிணக்குகள் நீங்குதல் போன்ற சுப பலன்களும் கலந்து நிகழும். புரட்டாதி, மார்கழி, சித்திரை, வைகாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## பூசம்

இந்த நட்சத்திரத்தில் ஜெனனமானவர்கள் வருடஆரம்பம் முதல் அக்டோபர் 6வரை சனியும் வருடஆரம்பம் முதல் ஜூலை 22 வரையும்செவ்வாயும் கோசாரசஞ் சாரத்தில் பலம் பெறுகிறுர்கள். குரு வருடஆரம்பம் தொடக்கம் நவம்பர் 26 வரையும் கோசாரத்தில் பலவீனப்படுகிறுர்; எனினும் குரு நட்சத்திர ரீதியாகச் சாதகமாகச் சஞ்சாரம் செய்கிறுர். பொதுவாக இவர்களுக்கு அன்றுட வாழ்க்கையில் அதிகம் மாற்றம் இருக்கமாட்டாது. புதிய முயற்சிகளில் பிரவேசிக்க இது உகந்த காலமன்று. பணவரவு பெரும்பாலும் திருப்தியளிக்காது, கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் அவதானம் தேவை. பெரியவர்களின் அனுதாபத்தை பெற்றுல் ஓரளவுதுன்பம் குறையும். மாணவர்கள் முயற்சிக்கு ஏற்றஅளவில் கல்வி பெறுவர். வர்த்தகர்கள் முதலைக் காப்பாற்றுவதிலே சிரமமாக இருக்கும். அரசாங்க ஊழியர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து நடப்பதில் நன்மைபெறுவர்.

இயந்திரப் பொறியியலாளர் சாரதிமார் மருத்துவத் தொழில்துறையினர் வாழ்க்கையில் குறிப்பிடக்கூடிய மாற்றம் ஏற்படமாட்டாது. காவல்த்துறை இராணுவத்தினர் புகழ்பெறுவர். குடும்ப உறவில் முன்னேற்றம் குறையும். நவம்பர் 26முதல் குருவின் கோசரசஞ்சாரம் வருட இறுதி வரை பலம் பெறுகிறது. ஆனல் மற்ற பிரதான கிரகங்களின் கோசரசஞ்சாரம் பலம்குன்றுகிறது. தசாபுத்தி அந்தரங்களில் வலிமை பெற்றவர்கள் தவிரமற்றவர்களுக்கு இதுசுககாலமாகவே அமையும். குருவின் கோசரசஞ்சார பலம் பெரியோர் உதவி பதவி உயர்ச்சி, மதிக்கப்படுதல் போன்ற சுபபலன்களைக் கொடுக்கும். மாணவர்கள் கல்வித்தேர்ச்சிபெறுவர். குடும்பஉறவு சீராகும். புத்திரர்உதவி உண்டாகும். பொதுவாக இவர்கள் இவ்வருடம் முழுவதும் சுபாசுபங்கலந்த சமசுகத்தையே அனுபவிக்க நேரலாம் - தெய்வபக்தி இவர்களுக்கு நல்ல வழிகாட்டும். புரட்டாதி, மார்கழி, சித்திரை, வைகாசி, மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## ஆயிலியம்

இந்த நட்சத்திரத்தில் செனன மானவர்கள் வருட ஆரம்பத்தில் சனி செவ்வாய் தவிரமுக்கிய கிரகங்களின் கோசரசஞ்சாரம் பலவீனமாக காணப்படுகிறது. நட்சத்திரசார அடிப்படையில் நோக்கும்போதும் பலவீனம் கூடுதலாக இருப்பது நன்மையல்ல. சனி அக்டோபர் 6 வரையும், செவ்வாய் ஜுலை 22 வரையும் பலம் பெற்றுலும் குரு நவம்பர் 26வரையும் பலவீனப்படுகிருர். தசாபுத்தி அந்தரங்கள் சாதகமாக உள்ளவர்கள் தவிர மற்றவர்கள் பலஎதிர்பாரத தாக்கங்களைச் சமாளிக்கவேண்டிவரும். சிலருக்கு நிபந்தனைகளுக்குட்பட்ட சுபபலன்களும் நிகழும். சனி - செவ்வாய் இவர்களுக்கு 3-ம் இடத்தில் இருப்பது நற்பலனுக்குரியதேயாயினும் அத்தநட்சத்திர சஞ்சாரகாலம் இந்த நட்சத்திரகாரருக்குப் பாதகமாகும். தொழில்ப் பிரச்சனைகள் குடும்பப் பிணக்குகள் வீண் அபவாதங்கள், கொடுக்கல் வாங்கல்ப்பிரச்சினைகள் இவர்களுக்கு ஏற்படலாம். தெய்வபக்தியும் பெரியவர்களின் ஆலோசனைகளை அனுசரித்துப் போகிறவர்கள் எவ்வித நிலைமைகளையும் சமாளித்து விடுவார்கள். எதற்கும் முன்னெச்சரிக்கை இல்லாதவர்கள் அரசாங்க விரோதம், அவமிருத்துபயம் சிறைப்பயம், சோரசத்துரு பயம் போன்ற சம்பவங்களை எதிர்நோக்க வேண்டியும் ஏற்படலாம்.

நவம்பர் 26- முதல் வருடஇறுதி வரை குரு சுபகோசரசஞ்சாரம் செய்வது இவர்களுக்கு நன்மையாக அமையும். ஆயினும் சனி அக்டோபர் 6- முதல் வருட இறுதி வரை துர்க்கோசாரம் செய்வது நன்மையாக அமையாது.

அரசாங்க ஊழியர்கள் பொறுமையாக எதனையும் சகித்துக் கொள்ளும் மனப்பான்மையுடன் செயல் படுவதால் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவார். இயந்திரதொழில்நுட்பத் தொழிலாளர் வாழ்வில் முன்னேற்றம் பெறுவர். காவல் இராணுவத்துறையினருக்குப் பதவி உயர்ச்சியும் புகழும் உண்டாகும். குடும்புஉறவுகளில் அதிக மாறுதல் இல்லாவிட்டாலும் சிறு சிறு பிணக்குகள் உண்டாகும். தரகர்கள் அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டதொழில் செய்வோர் அனுகுமுறைக்கு கேற்ப சுபாசுபங்களைப் பெறுவர். விவசாயிகளுக்கு உற்பத்திச்செலவு அதிகரிப்பால் வருமானம் குறையும்- மாணவர் கல்வித் தேர்ச்சியில் முன்னேற்றம் தடைபட்டாலும், முயற்சிக்கேற்ற பலனைப் பெறுவார்கள். காதல் விவகாரங்களை நவம்பர் 26வரை பின்போடுவது நன்மை தரும். பொதுவாக நவம்பர் 26 முதல் வருடஇறுதி வரையும் குரு 5 - ல் சஞ்சரிப்பதால் இவர்களுக்கு ஓரளவு ஆறுதலும் அமைதியும் கிடைக்கும்: புரட்டாதி, மார்கழி சித்திரை,வைகாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## மகம்

இந்த நட்சத்திரத்தில் ஜனனமானவர்களுக்கு வருட ஆரம்பம் தொடக்கம் அக்டோபர் மாதம் 6 வரை ஏழரைச்சனியின் கடைசிக்காலம் தொடருகின்றது. குரு வருட ஆரம்பம் தொடக்கம் 26 வரை குரூர கோசரசஞ்சாரம் செய்கின்ருர். ஏழரைச் சனியின் காலமாயினும் வருடாரம்பம் முதல் ஜுலை 30 வரை நட்சத்திர அடிப்படையில் பலம் பெறுகின்ருர். குருவின் குரூர சஞ்சார காலமாயினும் வருட ஆரம்பம் முதல் அக்டோபர் 11 வரை நட்சத்திர அடிப்படையில் பலம் பெற்றுக் காணப்படுகிஞர். வருடம் முழுவதும் இராகு கேதுக்கள் சுபஸ்தானத்தில் கோசர சஞ்சாரம் செய்கின்ருர்கள். மற்றைய கிரகங்கள் எல்லாம் அவ்வப்போது சாதக பாதக ஸ்தானங்களில் சஞ்சரிக்கின்றனர். பொதுவாக இந்த நட்சத்திரத்தில் ஜனனமானவர்களுக்கு வருட ஆரம்பம் முதல் அக்டோபர் 6 வரை குறிப்பிடக்கூடிய விசேட பலன்கள் நிகழாவிட்டாலும் சுமாரான சமபலன்கள் நிகழும்.

சாதாரணமாக பொருள் வருவாய் கூடினாலும் சிலபல அபகீர்த்திச் சம்பவங்களும் சிலருக்கு ஏற்படலாம். சிலர் இலகுவில் ஏமாற்றத்துக்குள்ளாகலாம். இராசாங்க கோபம், சிறைப்பயம் போன்ற சம்பவங்கள் சிலருக்கு நிகழலாம். எல்லாப் பிரச்சினைகளையும் பொறுமையுடனும் உத்தமப் பெரியார்களின் ஆலோசனைகளை அனுபவித்தும் அணுகினால் அவரவர் அணுகுமுறைக்கேற்ப நன்மை தீமை அமையும்.

அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் கோபத்துக்கு இலக்காகாவண்ணம் முன்னெச்சரிக்கையாக இருத்தல் நன்மை தரும். வர்த்தகர்களுக்கு வீண் விரயம் உண்டாகலாம். அரசியல் வாதிகள் தரகர்கள் செல்வாக்குக் குறைவதுடன் அவமானப் படக்கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம். மாணவர் கல்வி முயற்சிக்குத் தக்க அளவில்தான் முன்னேற்றம் கிடைக்கும். ஆசிரியர்–மாணவர் உறவில் திருப்தி ஏற்படாது. முதலாளி-தொழிலாளி உறவில் சிறுசிறு பிணக்குகள் உண்டாகும். சாதாரண தொழிலாளருக்கு வருவாய் கூடும். இயந்திரப் பொறியியலாளர்-மருத்துவத்துறைத் தொழிலாளர் சிறுசிறு கஷ்டங்களுக்கிடையில் நன்மை பெறுவர். போக்குவரத்துத்துறை - சாரதி போன்றோர்க்கு விபத்துக்கள் உண்டாவதுடன் அவமிருத்து பயமும் ஏற்படலாம். நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை பொதுவாக இந்த நட்சத்திரத்தில் செனனமான வர்களுக்கு உத்தமமான பலன்கள் நிகழும். பொருளாதார உயர்வு உண்டாகும். பதவி உயர்ச்சி கிட்டும். விவாகாதி சுப நிகழ்ச்சிகள் உண்டாகும். பயிர் உற்பத்தி பெருகும். கல்வித் தேர்ச்சி கிட்டும். எதிர்பாராத சுப நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழும். வைகாசி, ஆனி, ஐப்பசி, தை மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## பூரம்

ஏழரைச் சனியும் குருவின் குரூர சஞ்சாரமும் சேர்ந்து வருட ஆரம்பம் தொடக்கம் அக்டோபர் 6 வரையும் தொடருவது இந்த நட்சத்திர காரருக்கு ஒரு சோதனை காலமாகவே அமையும். நட்சத்திர அடிப்படையிலும் வருட ஆரம்பம் தொடக்கம் அக்டோபர் 11-ம் திகதி வரையும் குருவின் சஞ்சாரம் பலம் குறைந்து காணப்படுகின்றது. இராகு கேதுக்கள் சுபகோசர சஞ்சாரம் செய்யும் காலமாயினும் ஜூலை 1-ம் திகதி தொடக்கம் 1983 மார்ச் 9 வரையும் இராகுவும் வருட ஆரம்பம் தொடக்கம் நவம்பர் 4 வரையும் கேதுவும் நட்சத்திர அடிப்படையில் பலமிழந்து காணப்படுகின்றார்கள். மற்றைய கிரகங்களும் அவ்வப்போது சாதக பாதகமான கோசர சஞ்சாரம் செய்வர். பொதுவாக இந்த நட்சத்திர காரர் எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் சிலரைத் திணற வைக்கும். பண நெருக்கடியும், கடன் தொல்லையும் சிலருக்குத் தாங்கொணாத் துன்பத்தைக் கொடுக்கும். நண்பர்களும் விரோதிகளாக மாறி விடுவார்கள். குடும்ப சுகவீனம், தொழில் இழப்பு வாக்கு விரோதம் பொருள் நட்டம், காராகிருக வாசம், அவமிருத்து பயம் போன்றவையும் சிலருக்கு ஏற்படலாம்.

அரசாங்க ஊழியர் அதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகவேண்டி வரும். சிலர், வேலை இழப்பு, பதவி இறக்கம், அவமானப் படுதல் போன்ற சம்பவங்களுக்கும் இலக்காகலாம். வர்த்தகர்கள் தமது முதலைக் காப்பாற்றுவதே பெரிய காரியமாக அமையும். கறுப்புச் சந்தைக்காரர் தண்டிக்கப்படுவர். அரசியல் வாதிகள், தரகர் போன்றவர்கள் எதிலும் எப்பொழுதும் மௌனமாக இருப்பதால் தங்களை ஓரளவு காத்துக்கொள்ள முடியும். மாணவர்கள் முயற்சிக்கேற்றவாறு கல்வித் தேர்ச்சி பெறுவர். குடும்ப உறவுகள் பெரிதும் பாதிக்கப்படலாம். காதல் விவகாரங்களை இயன்றவரை பின்போடுதல் நன்மை தரும். விவசாயிகள் உற்பத்திக் குறைவுக்கு இலக்காகித் துன்பமடையலாம். மருத்துவம்-பொறியியல் துறையினருக்கும் நிலைமைகளைச் சமாளிப்பதே பெரிய காரியமாக அமையும். பொதுவாக இவர்கள் எல்லாரும் தத்தம் சமயப் பணிகளில் பக்திசிரத்தையுடன் ஈடுபட்டுத் தெய்வப் பணிகளில் செயற்பட்டு வருவதால் ஓரளவு கஷ்ட நிவாரணம் பெறுவர். அக்டோபர் 6-ல் ஏழரைச்சனி கழிவதும், நவம்பர் 26-ல் குருவின் குரூர சஞ்சாரம் கழிவதும், நன்மையாகும்; இக்காலம் தொடக்கம் ஓரளவு நற்பலன்கள் இவர்கள் யாவருக்கும் நிகழும். வைகாசி–ஆனி-ஐப்பசி-தை மாதங்கள் இவர்களுக்கு விஷேடமான மாதங்கள்.

## உத்தரம்

உத்தரம் 1-ம் பாதத்தில் செனனமான சிங்க இராசிக்காரருக்கு வருட ஆரம்பம் தொடக்கம்

அக்டோபர் 6 வரை ஏழரைச் சனியின் கடைசிப் பகுதியும், அத்துடன் நவம்பர் 26 வரை குருவின் குருரகோசர சஞ்சாரமும் சேர்ந்து நிகழ்கின்றது. குருவின் சஞ்சாரம் நட்சத்திர அடிப்படையில் அக்டோபர் 11 வரையும் பலமடைந்து உள்ளது. இராகு கேதுக்களும் கோசர சஞ்சார கதியில் பலமடைந்து காணப்படுகிறார்கள். மற்றைய கிரகங்கள் அவ்வப்போது சாதக பாதக கோசர சஞ்சாரமும் செய்வர்.

பொதுவாக இவர்கள் சில தடை தாமதங்களுடன் காரியங்களைச் சாதிக்கக்கூடியதாய் இருக்கும். பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றி மறையும். பெரியவர்களின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும். விவாகாதி காரியங்களில் சிக்கல்களும், தடைகளும் ஏற்பட இடமுண்டு. அன்னிய தேச சஞ்சாரம், மன அமைதியின்மை, உடல் உபாதை, வியாச்சிய பயம், இராசாங்க கோபம், மறைந்து வாழ வேண்டிய சூழ்நிலை, கீழோர் தொடர்பு, போன்றவையும் இவர்களுக்கு உண்டாகலாம்.

அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகவேண்டி வரும். விரும்பாத இடமாற்றத்துக்கு ஆளாகவேண்டி வரும். விரும்பாத இடமாற்றமும் கிடைக்கலாம். விவசாயிகளுக்கு சம பலிதமே கிடைக்கும். வியாபாரிகளுக்கு வருவாய் கூடினாலும் வீண் விரயமும் இருக்கும். புது முதலீடு செய்தலைக் கூடியவரை தவிர்த்தல் நல்லது. குடும்பங்களின் நல்லுறவு நாளுக்கு நாள் குறைந்து வருவதுடன் சிற்சில பூசல்களும் உண்டாகலாம். மாணவர்களின் முயற்சி அளவிலேயே தேர்ச்சியும் பெறுவர். அரசியல் வாதிகள் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மருத்துவம் - பொறியலாளர் தொழிலாளர்களுக்கு சிற்சில பிரச்சினைகள் தோன்றிமறையும். தொழிற் பிரச்சனைகள், முதலாளி - தொழிலாளர் பிணக்குகள் அடிக்கடி தோன்ற இடமுண்டு. ஆசிரியர் - உறவில் பாதிப்பு ஏற்படலாம். பிரயாணிகள் - சாரதிகள் விபத்துக்களுக்குள்ளாவதுடன் அவமிருத்துகளுக்கு இலக்காக வேண்டியும்வரும். பக்திசிரத்தையுடன் தெய்வப்பணி - சமயப்பணிகளில் நின்று உழைப்பவர்களை எவ்வகைத்துன்பமும் துன்புறுத்த முடி முடியாது. அக்டோபர் 6 ல் ஏழரைச்சனிகழிவதும் நவம்பர் 26 ல் குருவின் கோசர சஞ்சாரம் கழிவதும் நன்மையாகும். இக்காலம் தொடக்கம் வருடாந்தம்வரை கஷ்டசாந்தி ஏற்பட்டுச் சமசுக பலன்கள் நிகழும். வைகாசி, ஆனி, ஐப்பசி, தை மாதங்கள் இவர்களுக்கு விசேடமாதங்கள்.

உத்தரம் பின்மூன்று பாதங்களிலும் செனனமான கன்னிராசிக் காரர்களுக்கு வருடம்முழுவதும் ஏழரைச்சனி தொடர்கின்றது. முக்கியமான கிரகங்களில் குருவைத்தவிர மற்றக்கிரகங்களின் கோசரசஞ்சாரம் அவ்வளவு அனுகூலமாக அமையவில்லை. குருவருடஆரம்பம் தொடக்கம் நவம்பர் 26 வரை சுபகோசரசஞ்சாரம் செய்வதுடன் நட்சத்திரரீதியிலும் பெலத்துடன் அமைகிறார். எவ்வகைப்பிரச்சினைகளையும் இவர்கள் சமாளித்து கொள்வார்கள். வாய்க்கு மிஞ்சிய வீண் செலவுகள் இவர்களுக்குத் தொல்லை கொடுக்கும். அடிக்கடி தேகநலக்குறைவு உண்டாகும். குடும்ப உறவில் அதிக் மாற்றம் ஏற்படஇடமில்லை. வஞ்சிக்கப்படுதல், பகைவிரோதம், சோரசத்துருபயம் போன்றவற்றால் அவ்வப்போது பாதிப்புக்கள் இவர்களுக்கு ஏற்படலாம். கல்விமான்கள், பெரியவர்களின் அறிவுரை ஆலோசனைகள் அனுசரித்து செயல்ப்படின் எவ்வகைத்துன்பங்களையும் சமாளித்து விடுவார்கள். தெய்வப்பணி, சமயப்பணிகளில் பக்திசிரத்தையுடன் ஈடுபடுதலும் நன்மைதரும்.

அரசாங்க ஊழியர்கள் வீண் வம்புகளில் அகப்படாமல் நிதானமாக இருத்தல் நன்மையாகும். வியாபாரிகளுக்கு அதிக ஆசை அதிகநட்டத்தை தரலாம். புதுத்தொழில் ஆரம்பித்தலைத் தவிர்த்தல் நல்லது. அரசியல்வாதிகள் எச்சரிக்கையும் நிதானமும் இழக்காமல் இருப்பின் நன்மையாகும். மாணவரின் கல்விக்கு ஊக்கமே உறுதுணையாகும். ஆசிரியர் மாணவர் உறவில் அதிக மாற்றம் ஏற்படாது. விவசாயிகள் உற்பத்தி குறைவுபடும். மருத்துவம் பொறியில் தொழிலாளர் நிலைமையில் பெரியமாற்றம் ஏற்படஇடமில்லை. தொழிலாளர் முதலாளிமார்உறவில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றினாலும் பெரிய பிளவுகள் ஏற்படமாட்டாது. கலைத்தொழிலாளர் பொருள் வளம் குன்றினாலும் கௌரவிக்கப்படுவர்.

நவம்பர் 26 முதல் வருடாந்தம் வரைக்கும் குருகோசரசஞ்சாரம் ஆரம்பித்தலின் இக்காலம் முதல் இவர்கள் எதிலும் எச்சரிக்கையாக இருத்தல்நல்லது. சனிப்பிரீதி பக்திசிரத்தையுடன் தெய்வவழிபாடு பெரியவர்களை மதித்து அவர்கள் ஆலோசனைப்படி அனுசரித்துப் போதல் இவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமையும். ஆனி, ஆடி, கார்த்திகை, மாசி, மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## அத்தம்

இவர்களுக்கு இவ்வருடம் குருவைத் தவிர பெரும்பான்மையான முக்கிய கிரகங்களின் கோசர சஞ்சாரம் அனுகூலமாக அமையவில்லை. குருவும் நட்சத்திர ரீதியில் அக்டோபர் 11 வரையும் பலம்குறைந்துள்ளார். அத்துடன் நவம்பர் 26-ல் குருவின் கோசர சஞ்சாரம் தொடங்கி வருடம் முடிவு வரை நீடித்துப்பலங்குறைகின்றார். வருடம் முழுவதும் ஏழரைச்சனியின் காலம் தொடருகின்றது. தசாபுத்தி அந்தரங்களில் பெலம் பெற்றவர்கள் தவிர மற்றவர்களுக்குச் சோதனைக்கு மேல் சோதனையான காலமாகவே அமையலாம். பெரிய ஏமாற்றங்களுக்குள் இவர்கள் சிக்கவேண்டி வரலாம். எதுவும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலையில் அமையும். கொடுக்கல் வாங்கல்களில் பெரும் பிரச்சினைகள் ஏற்படலாம். எத்தொழில் ஆரம்பித்தாலும் அதற்கு இடையூறும் காத்து இருக்கும். நண்பர்களும் விரோதிகளாவர். கருத்துவேற்றுமைகள் உண்டாகும். அடிக்கடி தேகநலக்குறைவு ஏற்படும். அவமிருத்து, கருவிவிஷ, அக்கினிபயம், சோரசத்துருபயம், வீண்வம்புகள் போன்ற சம்பவங்கள் இடைக்கிடை தொடரும். இராசபயம், வியாச்சிய பயமும் உண்டாகலாம். பொறுமை, நிதானம், தெய்வபக்தியே இவர்களுக்கு வழிகாட்டவேண்டும். அரசாங்க ஊழியர்களுக்கு எதிலும் எச்சரிக்கையும் நிதானமும் வேண்டும். அரசியல் வாதிகள் செல்வாக்கு இழக்காமல் எச்சரிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். வியாபாரிகள் புது முதலீடு செய்வதைத்தவிர்ப்பதுடன் உள்ள முதலைக் காப்பாற்றுவது நன்மைதரும். மாணவர் ஊக்கமே அவர்களின் தேர்ச்சிக்கு உதவலாம். ஆசிரியர், மாணவர் உறவில் சிறு சிறு பாதிப்புக்கள் ஏற்படலாம். தொழிலாளர் முதலாளிமார் பிணக்குகள் அடிக்கடி உண்டாகலாம். விவசாயிகள் உற்பத்தி குறைவுடன் கடன் பழுவிலும் தாக்கப்படலாம். மருத்துவம், பொறியியல், சாரதித் தொழிலாளருக்கு எச்சரிக்கையும் நிதானமும் தேவை. தெய்வபக்தி, குரு, சனி, பிரீதி, தேவ பணிகள் சமயப்பணிகளில் மனத்தூய்மையுடன் ஈடுபாடு உள்ளவர்களுக்கு கஷ்டசாந்தி உண்டாகும். ஆனி, ஆடி, கார்த்திகை மாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## சித்திரை

சித்திரை முதல் இரண்டுபாதங்களிலும் செனனமான கன்னியா இராசிக்காரருக்கு குருவைத்தவிர முக்கியமான கிரகங்களின் கோசர சஞ்சாரம் சாதகமாக அமையவில்லை. ஏழரைச் சனி வருடம் முழுவதும் தொடருகின்றது. வருட ஆரம்பம் தொடக்கம் ஜூலை 22 வரை சனியுடன் செவ்வாயும் சேருவது துர்ப்பலன்களுக்கே அனுகூலமாக அமையும். குரு சுபகோசர சஞ்சாரம் செய்வதுடன் அக்டோபர் 11 வரை நட்சத்திர ரீதியில் பலமடைந்துள்ளது அனுகூலமாக அமையும். வருட ஆரம்பம் முதல் அக்டோபர் 11 வரை குறிப்பிடக்கூடிய தீமைகள் நிகழாவிட்டாலும் இடைக்கிடை சில கெடுபிடிகளுக்கும் இவர்கள் இலக்காக வேண்டியும் வரும். அன்றுடப் பிரச்சினைகள் அனுகுமுறைக் கேற்ப நன்மை தீமையாக அமையும். தசா புக்தி அந்தரங்களில் பலம் பெற்றவர்கள் எதிர்பாராத சுப பலன்களையும் அனுபவிப்பர். பொருள் வரவு இருப்பினும் அநாவசியமான செலவுகளால் கடன் பிரச்சினைகளும் ஏற்படலாம். தேகநலம் அடிக்கடி பாதிக்கப்படலாம். நண்பர்களுடன் விரோதித்துக் கொள்ளாமல் எச்சரிக்கையாய் இருப்பது நன்மையாகும். கருவி, விஷ, அக்கினி பயம், அவமிருத்து பயம், கோரசத்துருபயம் போன்ற நிகழ்ச்சிகளும் இவ்வருடம் இவர்களுக்கு ஏற்படக் கூடும். நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை குரு பலமிழந்து குரூர கோசரசஞ்சாரம் செய்வது நன்மையல்ல. இக்காலத்தில் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள், இராசாங்க பயம், சிறைப்பயம் கடன் தொல்லை, குடும்பப் பிரச்சினைகள், தொழில் இழப்பு பொருள் நட்டம், மனக்குழப்பம், உடல் நலக் குறைவு, பந்து மித்திரர் சேதம் மிருத்துபயம் போன்ற சம்பவங்களும் இவர்களுக்கு நிகழலாம். குரு சனிப்பிரீதியும் தெய்வபக்தியுடன் தேவப் பணி, சமயப்பணிகளைச் செய்துவரின் கஷ்ட சாந்தியடைவர்.

அரசாங்க ஊழியர்கள் பல வித பிரச்சினைகளை நிதானத்துடனும் பொறுமையுடனும் சமாளிக்க வேண்டி வரும். அரசியல்வாதிகளுக்கு அவரவர் அணுகுமுறைக்கேற்ப நன்மை தீமைகளுண்டாகும். மாணவர் ஊக்கமே அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும், ஆசிரியர் மாணவர் உறவு வருடப் பிற்பகுதியில் பாதிக்கப்படலாம். கொள்ளைலாபம் பெற நினைக்கும் வியாபாரிகளுக்கு பேரிழப்புக்களை

உண்டாக்கும். காதல் விவகாரங்கள் வருட முற் பகுதியில் பிரச்சினைகளுடன் நிறைவுற்றாலும் வருடபிற்பகுதி அவமானம், ஏமாற்றம் முதலிய சம்பவங்களால் தோல்வியடையும். சாரதிகள், பிரயாணிகள் விபத்துக்குள்ளாகி அவமிருத்துக் குள்ளாகவும் கூடும். முதலாளி, தொழிலாளர் உறவு வருட பிற்பகுதியில் பாதிக்கப்படும். மருத்துவம், பொறியியலாளருக்கு பொறுமையும் நிதானமும்தான் துணை புரியும். விவசாயிகளுக் குச் சமபலனே கிடைக்கும். ஆனி, ஆடி, கார்த் திகை, மாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

சித்திரை கடைசி இரண்டு பாதங்களிலும் செனனமான துலா இராசிக்காரருக்கு முக்கிய மான எல்லாக்கிரகங்களும் கோசர சஞ்சாரத்தில் பல மிழந்து காணப்படுகிறார்கள். வருடம் முழு வதும் ஏழரைச்சனியும் நவம்பர் 26 வரை சென்ம குருவும் தொடருவது இவர்களுக்கு நன்மையல்ல. குரு வருட ஆரம்பம் முதல் அக்டோபர் 11 வரை நட்சத்திர சார சஞ்சார அடிப்படையில் பலம் பெறுவது ஓரளவு நன்மையாகும். பொதுவாக இவர்கள் இவ்வருடம் முழுவதும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாதவர்களான ஏமாற்ற வாழ்வை எதிர்நோக்க வேண்டி நேரலாம். கடன் தொல்லை, இராசாங்ககோபம், கரந்து வாழ வேண்டியநிலைமை காராக்கிருக வாசம், உடல் நலக்குறைவு, அவ மிருத்துபயம், பொருள் நட்டம், பந்துசன சேதம், பகை விரோதம், நிலைப்பிரிவு போன்ற சம்பவங் கள் இவர்களைத் தொடரலாம். தசாபுத்தி அந்த ரங்களில் பெலமில்லாதவர்களுக்கு எப்போதும் நிதானமும், பொறுமையும் தான் துணைபுரியலாம். குரு சனிப் பிரீதியுடன் மனோபக்தியுடன் தேவ சமயப் பணிகளைச் செய்து வருபவர்கள் ஓரள வாவது சாந்தியடைவர்,

அரசாங்க ஊழியர்கள் அரசியல் வாதிகளுக் குப் பொறுமையும் நிதானமும்தான் நன்மைதர லாம். வியாபாரிகள் புது முதலீடு செய்வதை இவ்வருடம் தவிர்த்தல் நல்லதுடன் இலாபம் இல்லாவிட்டாலும் நட்டமேற்படாது. எச்சரிக் கையாக இருப்பது நன்மையாகும். மாணவர்கள் முயற்சியே அவர்களுக்கு உறுதுணையாகவேண்டும். சாரதிகள் பிரயாணிகளுக்குப் பொறுமையும் நிதானமும் நன்மைதரும். தொழிலாளர் முத லாளிகள் உறவில் பிணக்குகள் உண்டாகலாம். மருத்துவம், பொறியியல், தொழிலாளர் அவரவர் அனுகு முறைக் கேற்ப நன்மை பெறுவர். விவ சாயிகள் பயிரழிவால் துன்பமேற்படாமல் எச் சரிக்கையாக இருப்பது நன்மையாகும். நவம்பர் 26-ன் மேல் வருடாந்தம் வரை குருவின் குரூர கோசர சஞ்சாரம் கழிதலின் எல்லாருக்கும் ஓரளவு கஷ்டசாந்தி உண்டாகலாம். ஆடி, ஆவணி, மார்கழி, பங்குனி மாதங்கள் விசேடமான மாதங்கள்.

## சுவாதி

இந்த நட்சத்திரத்தில் செனன மான வர்களுக்கு வருடாரம்பம் முதல் நவம்பர் 26 வரை சென்ம குருவும் வருடம் முழுவதும் ஏழரைச்சனி யும் தொடருவது நன்மையல்ல. குரு நட்சத்திர அடிப்படையிலும் பலமிழந்து காணப்படுகின்றார். மற்றைய கிரகங்களின் கோசர சஞ்சாரமும் அவ்வப்போது சாதக பாதகமாக இருக்கும். இவ்வருடம் பல பிரச்சினைகள் எதிர் நோக்கிச் சமாளிக்க வேண்டிவரும். அடிக்கடி தேக நலம் குறைவுறும். கடன் தொல்லைகள் சிலருக்குப் பெரும் துன்பமாக அமையும். பொருள் வருவாய் நாளுக்கு நாள் குறைதலுடன் வீண் செலவும் அதிகரிக்கும். வீண் அலைச்சல், அகால போசனம், பந்துசனசேதம், குடும்ப பிணி பீடைகள் சிலருக்கு அடிக்கடி துன்பம் கொடுக்கும். அற்ப விஷயங்களிலும் அநாவசியத்தலையீடுகளிலும் உட் படுவதுடன் வேலையில்லாமை அல்லது வேலை இழப்பு மனச் சஞ்சலம், வீடு வாகன நட்டம், இராசாங்க கோபம், சோர - சத்துரு - பிணி- பீடைகள் - மிருத்து - அவ மிருத்துப்பயங்களும் சிலருக்கு ஏற்படலாம்.

அரசியல் வாதிகள் அரசாங்க ஊழியர்கள் எதிலும் முன்னெச்சரிக்கையைக் கடைப்பிடிப்பது நன்மையாகும். மாணவர்கள் முயற்சியின் அள விலேயே தேர்ச்சி பெறுவர். விவசாயிகளுக்கு உற் பத்திக் குறைவும் நட்டமும் ஏற்படலாம். வியா பாரிகள் முன்னெச்சரிக்கையுடன் இருந்தால் பெருநட்டம் வராமல் தடுத்துக்கொள்ளலாம். தொழிலாளர் நிதானத்துடனும் பொறுமையுட னும் இருப்பதால் நன்மை பெறுவார்கள். ஆசி ரியர் மாணவர் உறவுகளில் அடிக்கடி சிக்கல்கள் ஏற்படலாம். முதலாளி - தொழிலாளர் ஒத்து ழைப்புக் குறைவுறும். இயந்திர - மருத்துவத் தொழிலாளர் சிறு - பெருவிபத்துக்களுக் குள்ளாக வேண்டியும் வரலாம். வாகனச் சாரதிகளுக்கு நிதானமும் பொறுமையும் முன்னெச்சரிக்கையும் தான் துணைபுரியும்.

தசாபுத்தி அந்தர சுகமில்லாதவர்களுக்குப் பொதுவாக இவ்வருடம் பெரும் கஷ்டங்களையே கொடுக்கும். தெய்வப்பணி - சைவப்பணிகள் பக்தி சிரத்தையுடன் ஈடுபாடு உடையவர்கள் ஓரளவாவது கஷ்டநிவாரணம் பெறுவர். நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை குருவின் கோசாரசுகம் ஏற்படுவதால் இக்காலம் இவர்களுக்குக் கஷ்ட சாந்தி ஏற்பட்டு சுபகால சுபபலன்கள் நிகழும். ஆடி ஆவணி மார்கழி பங்குனி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## விசாகம்

விசாகம் முதல்மூன்று பாதங்களிலும் சென்னமான துலாம் இராசிக்காரருக்கு வருடாதியாக நவம்பர் 26 வரையும் ஏழரைச் சனியுடன் சென்ம குருவும் சேர்ந்த கோசரசஞ்சாரம் தொடருவது பல எதிர்பாராத திடீர் நெருக்கடிகளைத் தோற்றுவிக்க ஏதுவாகலாம். குரு கோசரசஞ்சார ரீதியில் பெலம் குறைந்தாலும் நட்சத்திர சஞ்சார ரீதியில் பலமடைந்துள்ளார். எனவே எவ்வகை நெருக்கடிகளையும் சமாளித்துக் கொள்ளுவார்கள். வருட முற்பகுதியில் சில கஷ்ட நஷ்டங்கள் தோன்றினும் பிற்பகுதியில் எல்லாம் நன்மையாக இவர்களுக்கு அமையும். வாழ்க்கைச்செலவு கூடிக்கொண்டே போவதால் கடன் தொல்லையும் இவர்கள் மனதை துன்புறுத்தும். குடும்பங்களில் சிற்சில சச்சரவுகள் தோன்றி மறையும். இனபந்துக்களின் பகை விரோதம் அதிகரிக்கும். காதல் விவகாரங்கள் ஏமாற்றத்தில் அல்லது பெரிய பிரச்சினையில் முடிவுறும். அற்ப விடயங்களிலும் அவமானப்படவேண்டிய நிலையும் ஏற்படலாம். நிதானமும் பொறுமையும் உடையவர்கள் எல்லாவகையிலும் சமாளித்து முடிவில் நன்மையடைவார்கள்.

அரசாங்க ஊழியர்கள் எல்லா நிலைமைகளிலும் சமபலனைப் பெறுவார்கள், சிலருக்கு பதவி உயர்ச்சியும் ஏற்படலாம். மாணவர் கல்வியில் தேர்ச்சி பெறலாம். வியாபாரிகளுக்கு அதிக் லாபம் கிடைக்காவிட்டாலும் நட்டம் உண்டாக மாட்டாது. தொழிலாளர் முதலாளிமார் உறவில் குறிப்பிடக்கூடிய மாற்றம் ஏற்பட இடமில்லை. மருத்துவம் - பொறியியல் தொழிலாளர் சமபலன் பெறுவர். பிரயாணங்களில் விபத்துக்களை எதிர்நோக்கவேண்டி வரும். சாரதிகளுக்கு முன் எச்சரிக்கை எப்போதும் தேவை. நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை குருவின் கோசர சஞ்சாரம் சுபபலனைத் தருவதோடு வாழ்க்கையில் குறிப்பிடக்கூடிய நல்ல பலன்களையும் இந்த இராசிக்காரர் பெறுவர். தெய்வபக்தியாய்ச் சமயப்பணிகள் - தேவபணிகள் செய்பவர்களுக்கு எல்லாத் துன்பங்களும் நிவிர்த்தியாவது திண்ணம். ஆடி - ஆவணி - மார்கழி - பங்குனி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

விசாகம் 4-ம் பாதத்தில் சென்னமான விருச்சிக இராசிக்காரருக்கு வருட ஆரம்பத்தில் செவ்வாயும் சனியும் சுபகோசர சஞ்சாரம் செய்கிறார்கள்; குரு 12 ல் துர்கோசரசஞ்சாரம் செய்யினும் நட்சத்திர சாரஅடிப்படையில் பலம் பெறுகிறார் இராகு கேதுக்கள் வருடம் முழுவதும் துர்க்கோசரசஞ்சாரமே செய்கின்றனர். மற்றைய கிரகங்களும் அவ்வப்போது சாதக பாதகமான கோசரசஞ்சாரம் செய்கின்றனர். பொதுவாக இவர்கள் எவ்வகை நிலையிலும் ஏற்படும் கஷ்டநஷ்டங்களைச் சமாளித்துக் கொள்வார்கள். வருமானமும் செலவும் சம்மாக இருக்கும். கூடியவரை பிரயாணங்களைத் தவிர்த்தல் இவர்களுக்கு நன்மை தரும். சிலருக்கு அந்நியதேசத்து அல்லது அந்நியரால் பொருள் வருவாய் கூடும். உடல் நலக்குறைவு ஏற்பட்டாலும் அதிகபாதிப்புகளுக்கு இடமில்லை. அக்டோபர் 6 முதல் இவர்களுக்கு ஏழரைச்சனி தொடர்கிறதுடன் நவம்பர் 26 முதல் சென்மகுருவின் கோசரசஞ்சாரமும் சேருவது தீயபலனையே கொடுக்க ஏதுவாகின்றன. எனவே பிற்பகுதி இவர்களுக்குச் சோதனைமேல் சோதனைகாலமாகவும் அமையாலம். கூடியவரை நிதானத்துடனும் பொறுமையுடனும் தெய்வபக்தியுடன் குருசனிப் பிரீதி, வழிபாடுஇயற்றி வருவது இவர்களுக்கு நன்மைதரும். அரசுஊழியர்கள் வருடமுற்பகுதியில் சுபபலன்களையும் வருடஇறுதியில் பலசங்கடங்களையும் எதிர்நோக்க வேண்டிவரும். மாணவர்கள் கல்வித்தேர்ச்சிக்கு அதி முயற்சி தேவை. குடும்பப் பிணக்குகள் அதிகம் ஏற்பட்டாலும் தேகசுகக்குறைவுகள் அடிக்கடி தோன்றி மறையும். விவசாயிகளுக்கு வருட முற்பகுதியில் சமபலனும் வருடப்பிற்பகுதியில் பலபிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியும் இருக்கும். வியாபாரிகள் வருட ஆரம்பத்தில் லாபமடைந்தாலும் அக்டோபர் 6 ல் பின் முதலைக்காப்பாற்றுவதே பெரியகாரியமாக இருக்கும். தொழிலாளர் வருமானம் கூடினும் வருடபிற்பகுதியில் இவர்களுக்குப் பல கஷ்டங்களைக் கொடுக்ககூடும். சாரதிகளுக்கு நிதானம் தான் துணைபுரியும், வருடபிற்பகுதியில் பலசங்கடங்களையும் விபத்துக்களையும் சமாளிக்க வேண்டிவரும். சித்திரை, ஆவணி, புரட்டாதி, தைமாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

# அனுஷம்

இந் நட்சத்திரத்தில் ஜெனனமானவர்களுக்கு செவ்வாயும் சனியும் 11-ல் சஞ்சரிப்பதால் நன்மையாகும். குரு 12-ல் கோசரசஞ்சாரம் செய்யினும் நட்சத்திர அடிப்படையில் டிசம்பர் 11-ம் திகதிவரையும் பெலமடைந்து காணப்படுகிறார், ஜூலை 22-ல் செவ்வாய் 12ல் பிரவேசித்து மாத வீதம் அவ்வப்போது சாதக பாதக கோசரசஞ்சாரத்தைத் தொடருவார். அக்டோபர் 6 முதல் ஏழரைச் சனியும் ஆரம்பிக்கிறது மற்றையகிரகங்கள் அவ்வப்போது சாதக பாதக கோசரசஞ்சாரம் செய்வர். பொதுவாக இவர்களுக்கு இவ்வருடம் முற்பகுதியில் பெரியோர்உதவி, வீடு வாகனச் சிறப்பு, குடும்பசுகம், மனதுக்கு இனிய சம்பவங்கள் நிகழுதல், தொழில் சித்தி, அரசாங்க உதவி முதலிய சுபபலன்களுடன் கட்டுப்பாட்டுக்குள் அமைந்த தீய பலன்களும் கலந்து நிகழும். எந்த விஷயங்களும் தடைதாமதங்களுக்கிடையில் நிறைவுறச் சந்தர்ப்பங்களும் ஏற்படும். அவரவர் அனுகுமுறையும் நிதானமுமே இவர்களுக்கு உறுதுணை செய்யும். அக்டோபர் 6-ல்ஆரம்பிக்கும் ஏழரைச் சனிகாலமும், நவம்பர் 26-ல் ஆரம்பிக்கும் ஜென்மகுருவின் கோசரசஞ்சாரமும் வருடப்பிற் பகுதியில் எதிர் பாராதஇழப்புகளையும் உடல் நலக்குறைவையும், இராசாங்க கோபத்தையும், குடும்பத் தொல்லைகளையும், பொருள் நட்டங்களையும், கடன் தொல்லைகளையும் பெரியோர் கோபத்தையும், விபத்துப் போன்ற சம்பவங்களையும், இவர்கள் சமாளிக்கவேண்டி நேரிடும்.

அரசியல் வாதிகளுக்கு அவதானமும், பொறுமையும் தான் துணை புரியும். அரசாங்க ஊழியர்கள் நிலைமை வருட முற்பகுதியில் குறிப்பிடக்கூடிய மாற்றம் இல்லாவிட்டாலும் பிற்பகுதியில் அதிகாரிகள் கோபம், மனதுக்கு விருப்பமற்ற இட மாற்றங்கள், அலைச்சல் போன்ற வற்றை எதிர்நோக்க வேண்டி வரும். மாணவர்கள் கல்வியில் அதிக ஊக்கம் எடுப்பதாலேயே முன்னேறலாம்.

வியாபாரிகளுக்கு வருட முற்பகுதியில் லாபமும் வருடப்பிற்பகுதியில் சமபலனும் உண்டாகும், விவசாயிகளுக்கு சம பலன் கிடைக்கும். மருத்துவம், பொறியலாளர் — தொழிலாளர்களுக்கு வருட முற்பகுதியில் உழைப்புக்கேற்ற பலனும், பிற்பகுதியில் பல திடீர் நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டியும் நேரிடலாம். முதலாளி - தொழிலாளர்கள் சிற்சில பிணக்குகளை எதிர்நோக்கவேண்டியும் வரலாம். தை, சித்திரை, ஆவணி, புரட்டாதி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

# கேட்டை

வருட ஆரம்பம் முதல் அக்டோபர் 6 வரை சனியும், ஜூலை 22 வரை செவ்வாயும் கோசர சஞ்சாரத்தில் பலம் பெற்றுள்ளார்கள். குரு வருடம் முழுவதும் கோசர சஞ்சாரத்திலும், வருடத்தின் பெரும்பகுதியில் நட்சத்திர சஞ்சார அடிப்படையிலும் பலமிழந்து காணப்படுகின்றார். இராகு கேதுக்களும் வருட முழுவதும் கோசர சஞ்சாரத்தில் பலமிழந்தே இருக்கின்றார்கள். தசாபுத்தி அந்தரங்கள் பலம் பெற்றவர்கள் தவிர மற்றவர்கள் பல எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டி வரும். காரியங்களை இவர்களது பொறுமையும் நிதானமும்தான் ஓரளவாவது சாதிக்க உதவும். கடவுள் பக்தி இவர்களுக்கு உறுதுணை புரியும். கைக்கெட்டியது வாய்க்கெட்டாதது போன்ற நிகழ்ச்சிகள் இவர்களுக்கு அடிக்கடி நிகழும். குடும்பத்தில் அடிக்கடி சுகவீனம் போன்ற தொல்லைகள் ஏற்படும். பந்துசன விரோதம், கொடுக்கல் - வாங்கல் பிணக்குகள், இராசாங்க பயம், காரிய தடை தாமதங்கள், மன அமைதியின்மை, பொருள் நட்டம், சோரசத்ரு பயம், நண்பரும் விரோதமாதல், ஏமாற்றப்படுதல் போன்ற சம்பவங்கள் இவர்களுக்கு அடிக்கடி தொல்லைகளைக் கொடுக்கலாம்.

அரசியல்வாதிகளுக்கு நாவை அடக்கினால் நலம் பெறலாம். அரசாங்க ஊழியர் அதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டியும் வரலாம். தொழிலாளர் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டி வரலாம். முதலாளி – தொழிலாளர் உறவில் அடிக்கடி பிணக்குகள் தோன்றி மறையும். விவசாயிகளுக்குப் பயிரழிவு, நட்டம் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலைக் காப்பதே பெரிய சிரமமாக இருக்கும். சாரதிகள் அவமிருத்துக்கள் - விபத்துக்களை எதிர்நோக்க வேண்டி இருப்பதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மருத்துவம், பொறியியலாளர்கட்கு பொருளாதாரக் கஷ்டங்களுடன் பல பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டி நேரிடலாம். ஆசிரியர்-மாணவர் உறவில் பிணக்குகள் உண்டாகும். சித்திரை, ஆவணி, புரட்டாதி, தை மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## மூலம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு குருவைத் தவிர மற்றைய பிரதான கிரகங்களின் கோசர சஞ்சாரம் வருட முற்பகுதியில் பலமிழந்து காணப்பட்டாலும், குரு வருட ஆரம்பம் தொடக்கம் நவம்பர் 26 வரை கோசர சஞ்சாரத்திலும் அக்டோபர் 11 வரை நட்சத்திரசார அடிப்படையிலும் பலம் பெறுவது இவர்களின் அதிஷ்டமே. இராகு கேதுக்கள் வருடம் முழுவதும் கோசர பலமிழந்தாலும் நட்சத்திரசார ரீதியில் இராகு ஜூலை 1 தொடக்கம் மார்ச் 9 வரையும், கேது வருடாரம்பம் தொடக்கம் நவம்பர் 19 வரையும் பலத்துடன் சஞ்சரிக்கிறார்கள். பொதுவாக இவ்வருடம் இவர்களுக்கு சிறுசிறு தடங்கல்கள் ஏற்பட்டாலும் முன்னேற்றமே உண்டாகும். பெரியவர்களின் உதவியும், தெய்வ அனுகூலங்களும் இவர்களுக்குத் தக்க தருணங்களில் கிடைக்கும். செலவுடன் கூடிய பொருள் வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் விவாகாதி சுப நிகழ்ச்சிகள் நிகழும். எதிர்பாராத பொருள் வரவு அல்லது காரிய வெற்றிகள் சிறுசிறு தடை தாமதங்களுடன் கிடைக்கும். அந்நியர் தொல்லைகள் இருந்தாலும் பெரியவர்கள் உதவி இருப்பதால் அதிகம் பாதிப்புக்கு இடமில்லை. தசாபுக்தி அந்தர பெலமுடையவர்களுக்கு எல்லாச் சிறப்புக்களும் உண்டாகலாம்.

அரச ஊழியர்களுக்கு பதவி உயர்ச்சி அதிகாரிகளின் ஆதரவுகள் கிடைக்கும். அரசியல் வாதிகள் அனுகுமுறைக்கேற்ப ஆதரவு கூடிக்குறைந்து வரும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிட்டும். மாணவர் கல்வித் தேர்ச்சி பெறுவர். விவசாயிகளுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். தொழிலாளர்க்கு ஆதரவும் வருமானமும் கூடும். முதலாளி - தொழிலாளர் உறவில் சமநிலை இருக்கும். ஆசிரியர் - மாணவர் உறவு சீராக இருக்கும். மருத்துவம் - பொறியியலாளர் மனஅமைதி பெற வாய்ப்புகள் உண்டாகும்.

குருவின் கோசரசஞ்சாரம் நவம்பர் 26 முதல் வருடாந்தம் வரை பலமிழந்தாலும் சனி அக்டோபர் 6 முதல் வருடாந்தம் வரை உச்சராசியில் கோசார பலம் பெறுவதால் தொடர்ந்தும் நற்பலன்களே கூடுதலாக நிகழும். வைகாசி, புரட்டாதி, ஐப்பசி, மாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## பூராடம்

இந்த நட்சத்திரத்தில் ஜெனனமானவர்களுக்கு இவ்வருடம் நவம்பர் 26 வரை குருவைத் தவிர மற்றைய பிரதான கிரகங்களின் கோசர சஞ்சாரம் அனுகூலமாக அமையவில்லை. குருவும நட்சத்திர சார அடிப்படையில் அக்டோபர் 10 வரையும் பலமிழந்துள்ளார். சுப கோசர சஞ்சாரம் செய்வது இவர்களுக்குப் பெரிய அனுகூலமாகும். பொதுவாக இவர்கள் பல எதிர்ப்புகளுக்கிடையிலும் எவ்வகைக்கஷ்டங்களையும் சமாளித்து விடுவார்கள். உடல் நலக்குறைவு, குடும்பத் தொல்லை, கடன்பயம், பந்துமித்திரர், பகைவிரோதம், தொழில்கஷ்டம் முயற்சிகளின் பலன்குறைதல், வியாச்சியபயம், இராசாங்கபயம் முதலிய கஷ்டங்கள் வந்தாலும் பெரியவர்களின் உதவி, தெய்வபக்தி, பொருள் வரவு, அந்நியர் உதவி, தொழில்வளர்ச்சிபோன்ற சுபபலன்களும் அவ்வப்போது இணைந்தே நிகழும். ஊக்கமும் நிதானமும் பொறுமையும் உடையவர்களுக்குச் சுபபலன்களே கூடுதலாக நிகழும். சிலருக்கு அந்நிய தேச சஞ்சாரம், அந்நியதேசப் பொருள் வரவு, அந்நியர் உதவிகளும் கிடைக்கும். ஆனல் எச்சரிக்கையாக இல்லாதவர்கள் பெரிய ஏமாற்றத்துக்குள்ளாக வேண்டியும் வரலாம்.

அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் மதிப்பைப் பெறுவதுடன் ஆதரவுகளைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவதினல் நன்மை பெறுவர். அரசியல்வாதிகளுக்குப் பல சிரமங்களுக்கு மத்தியில் செல்வாக்கு உண்டாகும். முதலாளி - தொழிலாளர் உறவில் பிளவுகள் உண்டாக இடமில்லை. தொழிலாளர்களுக்குத் தொழிற் சித்தியுடன் வருவாயும் கூடினலும் வீண்விரயமும் ஏற்படும். வியாபாரிகள் முயற்சிக்கு ஏற்றலாபம் பெறுவார்கள். கமக்காரருக்கு விளைவும் பலனும் சமநிலையில் இருக்கும். மாணவர் கல்வி முயற்சி தேர்ச்சி அளிக்கும். ஆசிரியர், மாணவர் உறவு சீராக இருக்கும். மருத்துவம் பொறியியல் தொழிலாளருக்கு தொழிலில் முன்னேற்றமுண்டாக வாய்ப்புக்கள் அதிகரிக்கும். தெய்வபக்தியுடன், சமயபணி - தெய்வப் பணியில் ஈடுபாடு உடையவர்களுக்கு மன அமைதியும் நிறைவும் ஏற்படும். வைகாசி, புரட்டாதி ஐப்பசி, மாசி, மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

# உத்தராடம்

உத்தராடம் 1-ம் பாதத்தில் ஜெனனமான தனு இராசிக்காரருக்கு குருவைத்தவிர மற்றப் பிரதான கிரக மெல்லாம் முற்பகுதியில் கோசர பலம் குறைந்து காணப்படுகின்றன. எனினும் குரு இராசி அடிப்படையிலும் நட்சத்திர அடிப் படையிலும் பலம்பெறுவது இவர்களின் அதிஷ் டமே. சனியின் துர்க்கோசர சஞ்சாரம் முடிந்து அக் டோபர் 6 தொடக்கம் உச்ச ராசியில் சனி சுப கோசர சஞ்சார பவனிவருவதில் பலன் பெறுகிறன் றூர். இராகு கேதுக்கள் இராசி நிலையில் பலம் குறைந்தாலும் நட்சத்திர சார ரீதியில் பலம் பெறுகிறுர்கள். மற்றைய கிரகங்களும் அவ்வப் போது சாதக பாதக சஞ்சாரம் செய்கின்றனர். பெரும்பாலான கிரகங்களின் சஞ்சாரம் அனுகூல மற்றிருப்பதால் இவர்கள் இவ்வருடம் வரையறுக் கப்பட்ட நற்பலன்களுடன் தீய பலன்களையும் கலந்து அனுபவிக்கநேரிடும். தசாபுத்தி அந்தர பெலமுள்ளவர்கள் தொடர்ந்தும் சுப பலன் களையே பெறுவர். வருடாரம்பம் முதல் நவம் பர் 26 வரை பெரியோர் உதவி, பொருள் வரவு, வீடுவாகனச்சிறப்பு, தொழிற்சித்தி, குடும்பசுகம் விவாகாதி சுப நிகழ்ச்சிகளும் இடைக்கிடை தேக நலக்குறைவு, கொடுக்கல் வாங்கல் பிணக்கு கள், வீண் அபவாதங்களுக்கு ஆளாதல், விபத் துப் பிணி பீடைகளும் அவ்வப்போது கலந்து நிகழும். அக்டோபர் 6 முதல் வருடாந்தம் வரை எதிர்பாராத பொருள்வரவு, அந்நியர் உதவி, அந்நிய தேசப்பொருள் வரவு, உடல்நலக்குறைவு, பந்து மித்திரர் பகை, விரோதம், இராசாங்க பயம், சோரசத்துரு பயம் போன்றபலன்களும் கலந்து நிகழும். தெய்வபக்தியுடன் தேவகாரியங் களிலும் சமயப் பணிகளிலும் முழுமனதுடன் ஈடுபாடுள்ளவர்களுக்கு மன அமைதியுடன் கூடிய சுப பலன்களே கூடுதலாக நிகழும்.

அரசாங்க ஊழியர்களுக்கு அதிகம் பிரச்சினை கள் ஏற்பட இடமில்லை. அரசியல் வாதிகளின் நிலையில் குறிப்பிடக்கூடிய மாற்றம் ஏதும் உண் டாக மாட்டாது. மாணவர் கல்வியில் ஊக்க மும் தேர்ச்சியும் பெறுவர். ஆசிரியர் மாணவர் உறவு சீராக இருக்கும். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். விவசாயிகட்கு உற்பத்திப் பெருக்க மும் வருமானமும் கூடும். தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக்கிட்டுவதுடன் உழைப்புக்கேற்ற ஊதியமும் பெறுவர். மருத்துவம், பொறியியல் துறைத்தொழிலாளர் வாழ்க்கைத்தரம் உயரும். முதலாளி - தொழிலாளர் உறவு சுமுகமாக இருக் கும். காதலர்களுக்கு வருட முற்பகுதியில் விவாகசித்தியும் ஏற்படலாம். வைகாசி, புரட் டாதி, ஐப்பசி, மாசி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

உத்தராடம் கடைசி மூன்று பாதங்களிலும் ஜெனனமான மகரராசிக்காரர்களுக்கு இராசி அடிப்படையில் முக்கிய பெரும்பாலான கிரகங் களின் கோசரசஞ்சாரமும் இவ்வருடம் அனுகூல மாக அமையவில்லை. ஆயினும் நவம்பர் 26-ன் மேல் வருடாந்தம் வரை குரு கோசர சஞ்சாரத் தில் பலமடைந்து அனுகூலமாகின்றூர். மற்றக் கிரகங்கள் அவ்வப்போது சாதக பாதக சஞ்சாரம் செய்வர். இவர்களுக்கு இவ்வருடம் கஷ்டங்களு டன் கூடிய சமபலன்களே நிகழும். பொருள் வரவு கூடினுலும் செலவு அதிகரிப்பால் கடன் தோன்றும். அடிக்கடி உடல் நலம் குறையும். தொழில்வாய்ப்பு உண்டாவதுடன் வீண் வம்புக ளில் மாட்டிக்கொண்டு அல்லல் படவும் நேரும். அடிக்கடி கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான பிணக்குகள் தோன்றி மறையும். குடும்பத்தில் சிறுச்சிறு பூசல்களும் சுகக்குறைவுகளும் உண்டா கும். நண்பர்கள் விஷயத்தில் எச்சரிக்கையாய் இராதவர்களுக்கு ஏமாற்றமும் அவமானமும் ஏற் படவேண்டியும் வரும். பந்து மித்திரர் உதவி யும் தொல்லையும் தொடரும். நவம்பர் 26 முதல் குரு கோசரசஞ்சாரத்தில் பல மடைவதால் இக் காலம்முதல் பெரியவர்கள் உதவி இராசாங்க நன்மை, பொருள்வரவு, தொழிற்சித்திவிவாகாதிசுப நிகழ்ச்சிகள் போன்ற சுப பலன்கள் அதிகரிக்கும்.

அரசாங்க ஊழியர்கள் வருடமுற்பகுதியில் பல பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டி இருந்தா லும் பிற்பகுதியில் அதிகாரிகளின் ஆதரவு பதவி உயர்ச்சிகளையும் பெறலாம். அரசியல் வாதிகளின் போக்கில் அதிகமாற்றம் ஏற்படமாட்டாது. வியா பாரிகள் லாபத்துடன் பெரிய பிரச்னைகளையும் எதிர்கொள்ள வேண்டிவரும். விவசாயிகளுக்கு உற்பத்திச்செலவு அதிகரிக்கும், வருட இறுதியில் சமலாபம் பெறலாம். மாணவர் கல்வி முன் னேற்றம் உண்டாகும். ஆசிரியர் மாணவர் உறவு சீராக இருக்கும். மருத்துவம், பொறியியல் தொழில்துறையினர் வாழ்க்கையில் அதிகமாற்றம் உண்டாக மாட்டாது. முதலாளி, தொழிலாளர் மோதல்களைத்தவிர்த்துக் கொள்ளுவதால் நன்மை பெறுவர். வாகனச்சாரதித்துவம் போன்ற

தொழில் செய்வோர் நிதானமிழப்பின் விபத்துக்களுக்குள் சிக்குவதுடன் மிருத்து, அவமிருத்துப் பயமும் உண்டாகும். எந்த நிலையிலும் உண்மைத் தெய்வபக்தியுடையவர்கள் மனநிறைவு பெற்று வாழ்வது திண்ணம். ஆனி, ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## திருவோணம்

முக்கியமான கிரகங்களில் பெரும்பாலானவற்றின் கோசர சஞ்சாரம் இவர்களுக்கு அனுகூலமாக அமையவில்லை. நட்சத்திர சார அடிப்படையிலும் பிரதான கிரகங்களின் பலம் குறைவாகவே இருப்பதும் நன்மையல்ல. இராகு கோசரசஞ்சாரத்தில் வருடம் முழுவதும் அனுகூலமாக இருப்பினும் நட்சத்திர சார அடிப்படையில் ஜூலை 1-ம் திகதி முதல் மார்ச் 9-ம் திகதி வரை பலமிழந்து காணப்படுகிறார். நவம்பர் 26-ம் திகதி முதல் குரு வருடாந்தம்வரை கோசர சஞ்சாரத்தில் பலம் பெறுவது அனுகூலமாக அமையும். பொதுவாக இவ்வருடம் இவர்கள் அலைச்சல் மூலமே பலன்களை அனுபவிக்கவேண்டி வரும். எந்த முயற்சியில் ஈடுபடினும் தடை தாமதங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். வருவாய்க்குமேற்பட்ட செலவுகள் உண்டாகும். அடிக்கடி உடல் நலம் குன்றுவதும் அவ்வப்போது இனபந்துக்கள் விரோதங்களும் ஏற்படலாம். தொழில் இழப்பு அல்லது வேலையில்லாத்திண்டாட்டமும் சிலருக்கு வேதனைதரலாம். ஏமாற்றப்படுதல் சோரசத்துருபயம், இராசாங்கபயம், வியாச்சியபயம், இடப்பிரிவு, மனக்குழப்பம், கல்வித்தடைபோன்ற சம்பவங்கள் அவ்வப்போது நிகழலாம். சிலருக்குப் போக்குவரவில் பீடைகளும் விபத்து, அவமிருத்து போன்ற துன்பங்களும் ஏற்படலாம். தெய்வபக்தியுடன் தேவப்பணிகளை முழுமனதுடன் செய்து வருபவர்களுக்கு அதிக துன்பத்தைக் கொடுக்க இடமில்லை. நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை தொழிற்சித்தி, முயற்சி பலிதம், பந்துசன நன்மை, விவாகாதி சுபநிகழ்ச்சிகள் வீட்டில் நிகழ்தல், பொருள்வரவு, முன்பு தடைப்பட்டவை நிறைவு பெறுதல், சுக சந்தோஷம் போன்ற சம்பவங்களும் கலந்து நிகழும்.

அரசாங்க ஊழியர்களுக்கு வருட முற்பகுதியில் பிரச்சினைகள் தோன்றினாலும் நவம்பர் 26ன் மேல் பதவி உயர்ச்சி, அதிகாரிகள் ஆதரவு என்பன உண்டாகும். அரசியல்வாதிகள் அனுகுமுறைக்கேற்ப சாதக பாதகமான சூழ்நிலைக்கு ஆளாவார்கள். வர்த்தகர்களுக்கு வருட முற்பகுதியில் கொடுக்கல் வாங்கல் பிணக்குகளும், பிற்பகுதியில் சமலாபமும் கிடைக்கும். விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். மாணவர் கல்வியில் தடை தாமதங்கள் ஏற்படினும் முயற்சி பலனளிக்கும். வருட முற்பகுதியில் ஆசிரியர்-மாணவர் பிணக்குகள் தோன்றினும், பிற்பகுதி சீராக அமையும். குடும்ப உறவுகள் வருட முற்பகுதியில் பாதிக்கப்பட்டாலும் வருடப் பிற்பகுதி சீரடையும். மருத்துவம் - பொறியியல் தொழில்துறையினர்க்கு பொறுமையும் நிதானமுமே நன்மை தரும். தொழிலாளர் - முதலாளி உறவு அவ்வப்போது பாதிக்கப்பட்டாலும் வருடப் பிற்பகுதியில் சுமுகமாகவே இருக்கும். பொதுவாக தசாபுத்தி அந்தர பலமுள்ளவர்கள் போக மற்றவர்களுக்குக் குலதெய்வ வழிபாடும் பெரியோர்களின் ஆலோசனைகளுமே கஷ்ட சாந்திக்கு வழிகாட்டியாக அமையும். ஆனி, ஐப்பசி, கார்த்திகை, பங்குனி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## அவிட்டம்

அவிட்டம் முதல் இரண்டு பாதங்களிலும் பிறந்த மகர இராசிக்காரருக்கு பிரதான கிரகங்களில் பலவற்றின் கோசரசஞ்சாரம் வருடமுற்பகுதியில் அனுகூலமாக அமையவில்லை, ஆனால் நட்சத்திர சாரஅடிப்படையில் பலம்பெறுவது அனுகூலமாகின்றது. முக்கியமாக குரு வருடாரம்பம் தொடக்கம் அக்டோபர் 11 வரை நட்சத்திர சார அடிப்படையிலும், நவம்பர் 26 முதல் வருடாந்தம் வரை கோசார அடிப்படையிலும், இராகு வருடம் முழுவதும் கோசார அடிப்படையிலும் ஜூலை 1 முதல் மார்ச் 9 வரை நட்சத்திர சார அடிப்படையிலும் வருடாரம்பம் முதல் ஜூலை 30 வரையும் பின் டிசம்பர் 2 முதல் வருட இறுதிவரை சனியும் நட்சத்திர சார அடிப்படையிலும் பலம் பெறுகின்றனர்.

பொதுவாக இவ்வருடம் முழுவதும் சுப பலன்களையும், நிபந்தனைகளுடன் கூடிய தீய பலன்களையும் ஒரே சமயத்தில் அனுபவிக்க நேரலாம். தசாபுக்தி அந்தரம் சுகமாக அமைந்தவர்கள் எவ்வகையிலும் பாதிப்புக்குள்ளாக மாட்டார்கள். சிலருக்கு சனி மங்கள யோகமாகி எதிர்பாராத

விசேட நற்பலன்களும் உண்டாகலாம். பெரியோர் உதவி, வீடு வாகனச்சிறப்பு, குடும்பச் சிறப்பு, பொருள் வரவு, அந்நியர் உதவி, அந்நிய தேச சஞ்சாரம், விவாகாதி சுப சம்பவங்கள் மன நிறைவு, கல்விச்சிறப்பு, தொழிற்சித்தி, தெய்வ அனுகூலம், அரசாங்க உதவி, உடல்நலக்குறைவு, பந்துசன சேதம், பிதாவழி - சகோதரவழி பிணி பீடைகள், பொருள் அழிவுகள், விபத்துப்பயம் போன்ற பலன்கள் கலந்து நிகழும். கடினமான உழைப்பும் தெய்வ பக்தியும் கூடியவரை நற்பலன்களையே கொடுக்கும்.

அரசாங்க ஊழியர்கள் மேலதிகாரிகள் ஆதரவும் பதவியுயர்ச்சியும் பெறக்கூடிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளுவதால் நன்மையடையலாம். அரசியல்வாதிகளின் முயற்சிக்குத் தக்க செல்வாக்குப் பெறுவர். வியாபாரிகள் நிதானமாகச் செயற்படின் நல்ல லாபமடைவர். விவசாயிகளுக்கு மனநிறைவும் லாபமும் உண்டாகும். ஆசிரியர் மாணவர் உறவு சீராகஇருக்கும். மாணவர் கல்வித்தேர்ச்சி பெறுவர். மருத்துவம் பொறியியல் தொழிற்துறையினருக்கு உழைப்புக்கேற்ற ஊதியமும் வாழ்க்கைச்சிறப்பும் உண்டாகும் எனினும் நிதானக்குறைவால் விபத்துக்களுமுண்டாகலாம். முதலாளி தொழிலாளர் உறவில் பிளவு ஏற்படமாட்டாது. ஆனி ஐப்பசி, கார்த்திகை, பங்குனி மாதங்கள் விசேடமான மாதங்கள்.

அவிட்டம் கடைசி இரண்டு மாதங்களிலும் பிறந்த கும்ப இராசிக்காரருக்கு வருடாரம்பம் தொடக்கம் அக்டோபர் 6- வரை அட்டமசனியும் ஜூலை 22 வரை அட்டம செவ்வாயும் இவ்வருடம் முழுவதும் 5 ல் ராகுவுமாகப் பலமிழக்கின்றனர். ஆனால் குரு வருடாரம்பம் தொடக்கம் நவம்பர் 26 வரை சுபகோசரசஞ்சாரம் செய்வதுடன் நட்சத்திரரீதியிலும் அக்டோபர் 11 வரை பலமடைவது இவர்களின் அதிஷ்டமே. மற்றக் கிரகங்களும் அவ்வப்போது சுபா சுப கோசரசஞ்சாரம் செய்கின்றனர். பொதுவாக இவர்கள் எவ்விஷயத்திலும் பெரியோர் ஆலோசனைகளை மதித்து பொறுமையுடனும், நிதானத்துடனும் அன்றாட பணிகளைச் செய்துவரின் பெரிய பாதிப்புக்களிலிருந்து விடுவிக்கப்படுவதுடன் சுப பலன்களையும் பெறுவர். தெய்வபக்தியுடன் சமயப்பணிகளில் ஈடுபடுவோர் எவ்வகையிலும் பாதிப்பு அடையமாட்டார்கள்- பொதுவாக இவர்கள் வருட ஆரம்பம் முதல் நவம்பர் 26 வரை சமசுப பலன்களையும் பின் வருடஇறுதிவரை கஷ்ட பலன்களையும் எதிர் நோக்கவேண்டி வரும். கடன் தொல்லை மனச்சஞ்சலம், குடும்பத்தொல்லை, பொருளாதார நெருக்கடி, சிறைப்பயம், இராசாங்ககோபம், விழுதல் முதலிய விபத்துக்கள், அந்நியதேச சஞ்சாரம் கரந்துவாழ்தல், எதிர்பாராத பொருள் வரவு, பெரியோர் உதவி, பந்துசன உதவிபோன்ற சம்பவங்கள் மாறிமாறி கலந்து நிகழும். தசாபுத்தி அந்தரசுபமுள்ளவர்களுக்கு அதிக பாதிப்புகள் ஏற்படமாட்டா.

அரசாங்கஊழியருக்கு நிதானமும் பொறுமையும் நன்மைதரலாம். அரசியல்வாதிகள் எதிலும் எச்சரிக்கையாய் இருப்பது நன்மைதரும். மாணவர்கள் முயற்சிக்கேற்பத் தேர்ச்சிபெறுவர். வியாபாரிகள் எச்சரிக்கையாய் இராமை நட்டமடையச் செய்யும். சிலருக்கு இராசாங்கதண்டனைகளும் ஏற்படலாம். விவசாயிகள் நிதானமும் பொறுமையும் பெரியபாதிப்புவராமல் காக்கலாம். தொழிலாளர் முதலாளி உறவு சிக்கல்கள் தோன்றி மறையும். மருத்துவம், பொறியியல் தொழிற்துறையினருக்கு முன்னெச்சரிக்கைதான் துணைபுரியும். சித்திரை, ஆடி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் விசேடமான மாதங்கள்.

## சதயம்

வருடாரம்பம் தொடக்கம் நவம்பர் 26 வரை குருவைத்தவிர மற்றைய பிரதான கிரகங்களின் கோசர சஞ்சாரம் சாதகமாக அமையவில்லை. குருவும் அக்டோபர் 11 வரை நட்சத்திர சார அடிப்படையில் பலமிழக்கின்றார். சனி வருடாரம்பம் தொடக்கம் அக்டோபர் 6 வரை அட்டம கோசர சஞ்சாரம் செய்யினும் நட்சத்திர சார அடிப்படையில் பலம் பெறுகின்றார். வருடமுற்பகுதியில் சனியுடன் சேர்ந்து செவ்வாயும் அட்டம கோசர சஞ்சாரம் செய்கின்றது. மற்றைய கிரகங்களும் அவ்வப்போது சாதக பாதகமான கோசர சஞ்சாரம் செய்கின்றனர். பொதுவாக இவ்வருடம் இவர்கள் பல சிரமமான சங்கடங்களையும் சமாளிக்க வேண்டி வரலாம். இராசாங்க கோபம், சோரசத்துரு பயம், சிறைவாசம், கொடுக்கல் வாங்கல் பிணக்குகள், குடும்பப் பிணக்கு, எதிர்பாராத பொருள் நட்டங்கள் நண்பர்களும் விரோதிகளாக மாறுதல், ஏமாற்றத்துக்குள்ளாகல், சிலருக்குப் பொருள் வரவு, தொழில் சித்தி, அந்நியதேச சஞ்சாரம், ஒளிந்து வாழுதல், மனப்பயம், விடு வாகன பிணி-பீடை

கள் கருவி - விஷ அக்கினி பயம், அந்நியர் உதவி, தூரதேசப் பிரயாணம், கல்வித்தடை போன்ற சுபாசுப சம்பவங்கள் கலந்து நிகழும். தசாபுக்தி அந்தரம் முதலியவை பெலமுள்ளவர்களை எவ்வகைத் துன்பமும் தொடரமாட்டா.

அரச ஊழியர்கள் அதிகாரிகள் சீற்றத்துக்கும் பதவி இழப்பும் சம்பந்தப்பட நேரிடலாம். அரசியல்வாதிகள் பொறுமையும். நிதானமும், அனுசு முறையுமே அவர்களுக்குத் துணையாகும். மாணவர்கள் கல்வித் தடைகளுக்குள் ஆக வேண்டியும் வரலாம். எனினும் பொறுமையும் முயற்சியும் இவர்கள் தேர்ச்சிக்கு உதவும். குடும்பத்தவர்கள் சிறுசிறு துன்பங்களைச் சமாளிக்க வேண்டி வரும். முதலாளி-தொழிலாளர் உறவுகளில் அவ்வப்போது சிக்கல்கள் தோன்றும். வியாபாரிகளுக்கு முன்னெச்சரிக்கை அதிக நட்டம் வராமல் பாதுகாக்கும். விவசாயிகளுக்கு இயற்கையும் உதவாமல் விடலாம். மருத்துவம்—பொறியியல் தொழிலாளர் எதிலும் முன்னெச்சரிக்கையும் அவதானமுமாக இருக்க வேண்டும். பொதுவாக இந்த நட்சத்திரகாரர் அனைவருக்கும் வருடப் பிற்பகுதி பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம். தெய்வ நம்பிக்கையும் பக்தியுமே எவ்வகைப் பிரச்சினைகளிலுமிருந்து விடுவிக்க இவர்களுக்கு உறுதுணையாகலாம். சித்திரை, ஆடி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## பூரட்டாதி

பூரட்டாதி முதல் மூன்று பாதங்களிலும் செனனமான கும்ப இராசிக்காரருக்கு குருவைத் தவிர மற்றைய பிரதான கிரகங்களின் கோசர சஞ்சாரம் சாதகமாக அமையவில்லை. குரு வருட ஆரம்பம் தொடக்கம் அக்டோபர் 11 வரையும், கோசர ரீதியாகவும் நட்சத்திர சார ரீதியாகவும் நலம் பெறுகின்றார். நவம்பர் 26 முதல் வருடாந்தம்வரை கோசர ரீதியாகவும் பலமிழக்கின்றார். வருடாதி முதல் அக்டோபர் 6 வரை "அட்டமத்துச் சனி" காலமும் தொடருகின்றது. ஆனால் ஜூலை 30 முதல் வருட இறுதிவரை சனி நட்சத்திர சஞ்சார ரீதியில் பலம் பெற்றுள்ளார். வருடாரம்பம் தொடக்கம் ஜூலை 22 வரை செவ்வாயும் அட்டமத்தில் சஞ்சாரம் செய்கின்றார். மற்றைய கிரகங்களும் அவ்வப்போது சாதக பாதக சஞ்சாரம் செய்வர். எப்படியாயினும் அக்டோபர் 6-ல் அட்டமத்துச்சனி காலம் கழிவது - இக்காலம் முதல் வருட இறுதிவரை சுப காலமாக அமையினும் நவம்பர் 26 முதல் வருட இறுதிவரை குரு 10-ல் சஞ்சரித்தலின் சுபாசுபம் கலந்த சமசுப காலமாகவே அமையும்.

பொதுவாக இவ்வருடம் இவர்களுக்குச் சம சுக காலமாக அமையினும், தசாபுக்தி அந்தர பலம் பெற்றவர்கள் எவ்வகைப் பாதிப்புக்களுக்கும் இலக்காக மாட்டார்கள். தொடர்ந்தும் சுபபலன்களையே அனுபவிப்பர்.

இவர்களுக்குப் பொருள்வருவாய் கூடினாலும் கடன்பளுவும் கூடிக் கொண்டே இருக்கும். மன அமைதி குன்றும். உடல்நலம் அடிக்கடி பாதிக்கப்படும். கருவி, விஷ, அக்கினிபயமும். அவமிருத்து பயமும் உண்டாகும். வேலைவாய்ப்புக் குன்றும். குடும்பத்தில் அடிக்கடி சிறு சிறு பிணக்குகள் தோன்றி மறையும். சிலருக்கு சமுகத்திலிருந்து மறைந்து வாழவேண்டியும் வரலாம். பதவி இழப்பு அல்லது இராசாங்க கோபத்துக்கும் சிலர் இலக்காகலாம். பந்துசன விரோதம், சோரசத்துருபயம் அலைச்சல், சிறைப் பயமும் சிலருக்கு உண்டாகும். நிதானமிழக்காமல் பொறுமையாக இருப்பவர்கள் சுபசந்தோஷம் வீட்டுச்சிறப்பு, பந்துசன நன்மை, குடும்ப முன்னேற்றம் போன்ற பலன்களைப்பெறுவர். அரச ஊழியர்களுக்கு முன்னெச்சரிக்கையும் பொறுமையும் பிரச்சினைகளை விடுவிக்க உதவும். அரசியல் வாதிகளின் அனுகு முறைக்கு அமையச் செல்வாக்கு அமையும். வியாபாரிகள் புது முதலீடு செய்வதைக் கூடியவரை தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது. விவசாயிகள் சமபலன் பெற இடமுண்டு. முதலாளி - தொழிலாளர் பிணக்குகளை உடனுக்குடன் சமாளிப்பதால் நன்மை பெறுவர். மாணவர் கல்விக் குழப்பம் தவிர்க்கப்படவேண்டும். மருத்துவம் பொறியியலாளர் குறிப்பிடக் கூடிய முன்னேற்றங்களை அடைய வசதி ஏற்பட இடமில்லை. ஆசிரியர், மாணவர் உறவு பாதிக்கப்படும். குடும்பத்தின் உறவுகள், பாதிப்பு ஏற்படும். சித்திரை, ஆடி, கார்த்திகை, மார்கழி மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

பூரட்டாதி 4-ம் பாதத்தில் பிறந்த மீன இராசிக்காரருக்கு இவ்வருடம் கிரகசாரம் சாதகமாக அமையவில்லை. வருட ஆரம்பம் தொடக்கம் நவம்பர் 26 வரையும் குரு அட்டமத்தில்

கோசரசஞ்சாரத்தில் பலவீனமாகின்றார். ஆயினும் நட்சத்திர ரீதியில் அக்டோபர் 11 வரையும் பலம் பெறுகின்றார். நவம்பர் 26ன் மேல் வருட இறுதிவரை கோசரசஞ்சார பலம் பெறுகின்றார். சனி வருடாதி முதல் அக்டோபர் 6 வரையும் 7ல் சஞ்சாரம் செய்கின்றார். அக்டோபர் 6ல் இருந்து வருட இறுதிவரை அட்டமத்தில் சஞ்சாரம் செய்கின்றார். மற்றக்கிரகங்களும் சாதகமாக அவ்வப்போது சஞ்சரிப்பர். பொதுவாக இவர்களுக்கு இவ்வருடம் ஒரு சோதனைகாலமாக அமையினும் ஆச்சரியமில்லை. தசாபுத்தி அந்தரங்கள் பெலமுள்ளவர்களுக்கு சமசுப காலமாக அமையும். கடன்பயம் - சிறைப்பயம் - இராசாங்க கோபம் – பந்துமித்திரர் பகை - விரோதம் பொருள் நட்டம் - தொழில் இழப்பு - குடும்பத் தொல்லை போன்ற பல சம்பவங்களை இவர்கள் சமாளிக்கவேண்டி வரும். சிலருக்கு அவமிருத்து பயமும் உண்டாகலாம்.

அரசாங்க ஊழியர்களுக்கு முன்னெச்சரிக்கை தான் நன்மைதரும். அரசியல் வாதிகள் அவமானப்படாமல் நிதானமாக இருத்தல் நன்மையாகும். மாணவர் கல்வியில் குழப்பம் ஏற்படலாம். ஆசிரியர் மாணவர் உறவு பாதிக்கப்படும். தொழிலாளர் - முதலாளி உறவுகள் விரிசலடையும். வியாபாரிகள் நட்டமடைய நேரிடும். கமத்தொழில் வருமானம் குறைவதால் விவசாயிகள் பலகஷ்டங்களை எதிர்நோக்கவேண்டிவரும். மருத்துவம் – பொறியியல் தொழிலாளர் பெரிய பிரச்சினைகளையும் தாக்கங்களையும் சமாளிக்கவேண்டி வரும். சாரதித் தொழிலாளருக்கு அவமிருத்து பயமும் உண்டாகலாம். தெய்வபக்தியால் எவ்வகைப் பிரச்சினைகளையும் விடுவிக்கலாம்தானே! வைகாசி - ஆவணி – மார்கழி - தை மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

## உத்தரட்டாதி

இந்த நட்சத்திரத்தில் செனனமானவர்களுக்கு முக்கியமான கிரகங்களின் கோசர சஞ்சாரம் சாதகமாக அமையவில்லை. குரு வருட ஆரம்பம் தொடக்கம் நவம்பர் 26 வரையும் அட்டமத்தில் சஞ்சாரம் செய்கின்றார். ஆனால் நட்சத்திர ரீதியில் வருடாரம்பந் தொடக்கம் டிசம்பர் 11 வரையும் பலம் பெற்று அனுகூலமாக அமைகின்றார். சனி வருடாரம்பம் தொடக்கம் அக்டோபர் 6 வரையும் 7-ல் கோசரசஞ்சாரம் செய்கின்றார். அக்டோபர் 6-ல் அட்டமத்துச்சனி பகவானின் காலம் ஆரம்பமாகி வருட இறுதிவரை தொடருகின்றது. அட்டமத்துச் சனி காலம் தொடரினும் நவம்பர் 26-ல் குரு 9-ல் பிரவேசித்துப் பலம் பெறுவதும், டிசம்பர் 2 தொடக்கம் சனி நட்சத்திர ரீதியில் பலம் பெறுவதும் சாதகமாக அமைவதால் பெரும் கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டிவர மாட்டாது. மெதுவாக இவர்களுக்கு சுபாசுப பலன்களே நிகழும்.

கடன் பயமும் பொருள் வரவும் இருக்கும். பகை விரோதங்களும் பெரியோர், நண்பர் உதவியும் இருக்கும். வீடுவாகன சிறப்பும் குடும்பச் சிக்கல்களும் உண்டாக்கும். தொழில் சித்தியும், தொழில் வெறுப்பும் இருக்கும். அதிகாரிகள் ஆதரவும் வெறுப்பும் இருக்கும். இராசாங்க பயமும் கோசர சத்துரு பயமும் விபத்துப் பயமும் மோசடிகளினால் தாக்கப்படுதலும் உடல் நலக்குறைவால் அடிக்கடி பாதிக்கப்படுதலும் போன்ற பலன்கள் அவ்வப்போது நிகழும்.

அரசாங்க ஊழியர் நிலைமையில் குறிப்பிடக்கூடிய மாற்றம் நிகழ இடமில்லை. அரசியல் வாதிகளுக்கு செல்வாக்குக் குறைவு ஏற்பட இடமில்லை. மாணவர்கட்கு கல்வித்தேர்ச்சி குறையும். வியாபாரிகளுக்கு நட்டம் வராவிட்டாலும் பொருள் சேதத்துக்கு இடமுண்டு. விவசாயிகளுக்கு இயற்கையின் பாதிப்புகள் உண்டாகலாம். தொழிலாளர் முதலாளிகள் உறவில் சிறுசிறு பூசல்கள் தோன்றி மறையலாம். மருத்துவம், பொறியியல் தொழிற்துறையினர், சாரதித்தொழிலாளருக்குப் பொருளாதாரக் கஷ்டம் இல்லாவிட்டாலும் அவமிருத்துப் பயமும் ஏற்படலாம். குடும்பத்தில் பலபிணக்குகள் உண்டாகலாம். குரு-சனி பிரீதியும் தெய்வவழிபாடும் செய்துவருபவர்கள் நற்பலன்களையே கூடுதலாக அனுபவிப்பர். வைகாசி ஆவணி, மார்கழி, தை, மாதங்கள் இவர்களுக்கு விசேடமானமாதங்கள்.

## ரேவதி

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பெரும்பாலான முக்கிய கிரகங்களின் கோசரசஞ்சாரம் அனுகூலமாக அமையவில்லை. குரு வருடாதியாக நவம்பர் 26 வரையும் அட்டமத்தில் சஞ்சாரம் செய்வதுடன் அக்டோபர் 11 வரை நட்சத்திர சாரரீதியிலும் பலங்குறைவது நன்மை

யாகாது. சனி வருடாதியாக அக்டோபர் 6 வரை 7- ல் சஞ்சரிப்பினும் அக்டோபர் 6- ல் அட்டமத்தில் பிரவேசித்து வருட இறுதிவரை தொடருகின்றது. மற்றைய கிரகங்களும் அவ்வப்போது சாதகபாதகமாகக் கோசர சஞ்சாரம் செய்வர். இராகு கேதுக்கள் முறையே 4, 10-ல் வருடம் முழுவதும் சஞ்சரிப்பதும் நன்மையல்ல. குருவின் அட்டமம் முடியச் சனியின் அட்டமம் தொடருவதையும் இங்கு அவதானிக்கலாம். தசா, புத்தி அந்தரம் முதலிய சாதக பெலமுள்ளவர்கள் தவிர மற்றவர்களுக்கு இந்தவருடம் ஒரு சோதனை காலமாக அமையலாம். குரு, சனி, இராகு, கேதுப் பிரீதியும், பக்திசிரத்தையுடன் தெய்வ வழிபாடு சமயப் பணிகளில் ஈடுபாடுகள் உள்ள வர்களும் அதிக பாதிப்புக்களுக்கும் ஆளாக மாட்டார்கள்.

தேகநலம் குறைதல் நெருங்கிய இனபந்துக்கள் பிணி - பீடைகள் மனைவி, மக்கள் சேதம், பொருள் நட்டம், தொழில் இழப்பு, மன அமைதியின்மை கடன் தொல்லை, கலந்து வாழ வேண்டிய நிலை, அந்நியதேச சஞ்சாரம், சயன போசன சுகக்குறைவு, கருவி, விஷ, அக்கினி பயம், இராசாங்க கோபம், அற்பர் உறவு, அவமிருத்துப்பயம் போன்றவைகளுடன் அற்பசுகம், அந்நியர் உதவி, பெரியவர்கள் உதவி போன்றவைகளும் கலந்து நிகழும்.

அரசாங்க ஊழியர்கள் எதிலும் முன்னெச்சரிக்கையாய் இருப்பது நல்லது. அரசியல் வாதிகளுக்கு நாவடக்கம் நன்மைதரும். வியாபாரிகளுக்கு புதுமுதலீடு செய்வது நல்லதல்ல, விவசாயிகள் பல தொல்லைகளை எதிர்நோக்கவேண்டி இருக்கும். மாணவர்களுக்குக் கல்வித் தடைகள் உண்டாகலாம். ஆசிரியர், மாணவர் தொடர்பு குறையும். குடும்பத்தில் நல்லுறவுகள் குறையும். தொழிலாளருக்குப் பல பிரச்சினைகள் தோன்றலாம். முதலாளிகள், தொழிலாளர் உறவுகளில் விரிசல் உண்டாகும். மருத்துவம், பொறியியல் தொழில் துறையினர் சாரதித்தொழிலாளர் பல பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிவரும். இந்த நட்சத்திரத்தில் பிறந்த அனைவரும். நிதானமும், பொறுமையும் பெரியவர்களின் ஆலோசனைகளை அறுத்தும் வருதலால் நன்மை பெறுவர். வைகாசி, ஆவணி, மார்கழி, தை மாதங்கள் இவர்களுக்கு விசேடமான மாதங்கள்.

★ இதோ அரிய சந்தர்ப்பம்!

France, Italy நாடுகளுக்கு செல்வதற்கு சகல ஒழுங்குகளும் செய்கிறுர்கள்.

**IMPERIAL TRAVEL** ஸ்தாபனத்தார்

விசா, விமான ரிக்கற் உட்பட 9100/- மட்டுமே.

மற்றும் உலகின் எப்பாகங்களுக்கும் செல்வதற்கு விசா, பாஸ்போட், விமான ரிக்கட், ரவலர்ஸ் செக் என்பன பெற்றுக்கொள்வதற்கும் நாடுங்கள்

**IMPERIAL TRAVEL**

சில ரிக்கட் கட்டணங்கள் வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| கொழும்பு — திருவனந்தபுரம் | | | ... | 825/- |
| கொழும்பு — திருச்சி | | | ... | 850/- |
| கொழும்பு — மட்றுஸ் | | | ... | 1225/- |
| கொழும்பு — பம்பாய் | | | ... | 2700/- |
| கொழும்பு — சிங்கப்பூர் | | | ... | 3700/- |
| கொழும்பு — சிங்கப்பூர் | — | கொழும்பு | ... | 6400/- |
| கொழும்பு — கோலாலம்பூர் | — | கொழும்பு | ... | 6,800/- |
| கொழும்பு — லண்டன் | — | கொழும்பு | ... | 14,000/- |
| கொழும்பு — பெல்கிரேட் | — | கொழும்பு | ... | 17,200/- |
| கொழும்பு — பராக் | | | ... | 9,000/- |

தொடர்பு கொள்ள வேண்டியது; **பாக்கியராஜா**

First Floor 51, First Cross street, — COLOMBO - 11 தொலைபேசி: 547031

சோதிட ஆராய்ச்சி

# தமிழ் ஈழம் மலருமா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வே. சின்னத்துரை நல்லூர்

21-5-79 தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் நீடிக்கப்பட்டது.

22-5-79 அமெரிக்காவில் மசாசூற்ஸ் மாநிலத்தில் இத்தினத்தை தமிழ் ஈழத் தினமாக கொண்டாடினர்.

23-5-79 யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சிங்கள பத்திரிகையாளர்கள் திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களைப் பேட்டி கண்டனர்.

1-6-79 வளலாயில் திரு. தம்பிராசா என்பவரை இராணுவத்தினர் அவருடைய வீட்டிலிருந்து துரத்திவிட்டு தாம் அவ்வீட்டில் உறைந்தனர்.

2-6-79 அழுத்கம வாசியான திரு. முகைதீனை கோண்டாவிலில் வைத்து புகையிரதத்தில் தாக்கி அவரை வெளியில் தள்ளினர்கள் இராணுவத்தினர். இதன் விளைவாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு கையை இழந்தார்.

14-6-79 மஞ்சு சிறி என்னும் சிங்கள ஓவியர் இனம் தெரியாதவர்களினால் யாழ்ப்பாணத்தில் வைத்து தாக்கப்பட்டார்.

18-6-79 மத்தியவங்கியைச் சேர்ந்த கனகேந்திர னென்னும் ஈழவேந்தன் வேலையிலிருந்தும் இடை நிறுத்தம் செய்யப்பட்டார்.

23-6-79 குருநாகலில் உள்ள தமிழ்க் கடைகள் சிங்களவர்களால் தாக்கப்பட்டன.

3-7-79 வவுனியா மாவட்டத்தில் சிங்களப் பகுதிகள் மூன்றை இணைத்து வவனியாவை சிங்கள பகுதியாக்க ஒரு மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து த. வி. கூட்டணியினர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தனர்.

6-7-79 காசி ஆனந்தனின் திருமண விழா நடந்தது. இதற்கு பொலிஸ் பந்தோபஸ்தும் வந்து அவதானித்தது.

8-7-79 த. வி. கூட்டணியை தடை செய்யும் நோக்கம் அரசுக்கு இருந்தது. அப்போது ஒரு கருத்தரங்கில் திரு. கதிரவேற்பிள்ளை கூறியதாவது எங்கள் கட்சியையோ அல்லது தமிழ் ஈழ இயக்கத்தையோ அரசு தடை செய்யுமானல் தமிழ் ஈழ அரசு மறைமுகமாகி வேறு நாட்டில் இருந்து செயற்படும். (Govt. in Exile) அதோடு இங்கு தடைச் சட்டங்களை தமிழர்கள் மீறுவார்கள் என்றார்.

11-7-79 யாழ்ப்பாணத்திலும், கட்டுநாயக்காவிலும் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

12-7-79 அரசு யாழ்ப்பாண மாநகரசபைக் கட்டடத்தில் சிங்கக் கொடியை பறக்க விடுமாறு பணித்தது, அதற்கு மேயர் விஸ்வநாதன் மறுத்து விட்டார். அதனல் கோபம் அடைந்த அரசு மாநகர சபை மண்டபத்தையும், வாடி வீட்டையும் இராணுவத்திடம் ஒப்புவித்தது.

13-7-79 அன்று இரவில் நவாலியில் இன்பம், செல்வம், பாலேந்திரன் ஆகியோரை பொலிசார் நடுச் சாமத்தில் கைதாக்கினர்கள். அடுத்த நாள் அதிகாலையில் இன்பம், செல்வத்தின் உடல்கள் கோரமாகத் தாக்கப்பட்ட நிலையில் பண்ணையில் இருந்து மண்டைதீவுக்குப் போகும் ரோட்டில் கிடந்தன. பாலேந்திராவை இன்னும் எங்கு என்று காணவில்லை.

17-7-79 பயங்கரவாதத் தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறிற்று. 20-7-79 ற்குள் 47 இளைஞர்கள் கைதாக்கப்பட்டனர், மன்னரில் 8 இளைஞர்கள் கைதாக்கப்பட்டனர். 31-12-79 க்கு முன்னர் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று பிரிகேடியர் வீரதுங்காவை திரு. ஜயவர்த்தன பணித்தார்,

14-8-79 திரு. என். எம். பெரேரா காலமானர்.

22-8-79 அச்சுவேலியில் இராணுவத்தினர் வேட்டையாடி 22 பேர்களைக் கைது செய்தனர்.

27-8-79 திருமதி இந்திரா காந்தி திரு. வைகுந்த வாசனுக்கு தான் இப்போது பாராளுமன்ற தேர்தலில் கவனம் செலுத்துவதாயும் தான் அதிகாரத்துக்கு வந்தால் தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தனது மக்களுக்கு எடுத்துரைப்பேன் எனவும் கூறியிருந்தார்.

22-8-79 வவனியாவைச் சிங்களப் பகுதியாக்கும் நிலை ஏற்படாது என்று திரு. ஜயவர்த்தன கொடுத்த உறுதியின் பெயரில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை ரத்துச் செய்தனர்.

(தொடரும்)

# ஜன்ம இலக்கினம்

அ. சிவசுப்பிரமணியம், B. A, (Lond) மல்லாகம்.


**மகரலக்கினம்** (தொடர்ச்சி)

லக்கின ரீதியாக விளங்கும் (1) யோக அமைப்பும் (2) அவயோக அமைப்பும் சந்திர லக்கின ரீதியாக "யோக" அமைப்பாகக் காணப்படின் (1) யோகப்பிரபல்லியத்தையும் (2) அவயோக பங்கத்தையும் முறையே ஏற்படுத்துமென்றும், முன்கூறிய இரு அமைப்புகளும் சந்திரலக்ன ரீதியாக "அவயோக" அமைப்பாகக் காணப்படின் (1) தரம் குன்றிய யோக பலனும் (2) மிக மோசமான தீயபலனும் முறையே சம்பவிக்குமென்றும், லக்கின ரீதியாகத் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் அடைந்த ஜாதகத்தைச் சந்திர லக்னம் ஆபத்தினின்றும் காப்பாற்றி இரட்சிக்கும் தீவிர சக்தியைப் பெரும்பாலும் பெற்றிருக்குமென்றும் கூறற்பாலதாம்.

இவ்வாறு ஒரு ஜாதகத்தின் தரத்தை உயர்த்தி ஜொலிக்க வைத்து ஆதிக்கம் செலுத்தும் தலையாய கிரகமான அமிர்தா என்னும் சந்திரன் மனசு, மாதுர், சாத்வகுணம், செல்வம், இளம்பெண், இராச சன்மானம் ஆகியவற்றிற்குக் காரகன். மகர லக்கினகாரர்களுக்கு அவர் களத்திர அதிபதி - 7-ம் அதிபதி. இவருக்குக் "கேந்திராதிபத்தியதோஷம்" மிக முக்கியமானதல்ல. ஆகவே மகரலக்கின காரர்களுக்கு இவர் நல்ல பக்ஷ பலமும் சுப சம்பந்தமும் பெற்றுத் திடமாக நல்ல ஸ்தானங்களில் அமைவதே சிறந்த நிலையாகும். சந்திரன் நல்ல பட்ச பலமுள்ளவராகில் 2-ம், 4ம், 5-ம், 7-ம், 9-ம், 10-ம் பாவங்களில் நல்ல பலனை நல்குவர். பட்சபலமற்றவராகில் 3-ம், 11-ம் பாவங்களில் சிறப்பு எய்துவர். 3-ம் பாவத்தில் இருக்கும்பொழுது குருவின் திருஷ்டியைப் பெற்றும், 11-ம் பாவத்தில் நீசபங்கம் பெற்றும் இருப்பதே சிறந்த நிலைகளாகும், சந்திரன் பாபர் சம்பந்தமின்றி 2-ல் நிற்கில் நற்குணமும் அன்பும் ஒருங்கே அமையப்பெற்ற நல்ல மனைவியோ/கணவனோ வாய்க்கப்பெறும். சந்திரனும் செவ்வாயும் 4-ம் பாவத்தில் அமைந்தால், சந்திர லக்கினாதிபதியாக வரும் ஆட்சி பெற்ற செவ்வாய் திக்குப் பலமும் பட்சபலமும் ஒருங்கே அமையப் பெற்ற சந்திரனுடன் கூடுவதால் தலைசிறந்த "சந்திர-மங்கள" யோகம் ஏற்பட்டு ஜாதகனுக்கு நல்ல திஷ்டம், ஸ்திரமான சொத்து, சந்தோஷம், சுக வாழ்வு ஆகியன கண்டிதமாகக் கிட்டும். இவர்கள் 1-ம், 8-ம், 12-ம் பாவங்களில் ஒன்றுசேரின் சில சமயங்களில் வாழ்க்கைத் துணையை இழந்து இரண்டாம் முறை திருமணம் செய்ய நேரிடலாம். சந்திரன் 7-ல் ஆட்சி பெற்று நிற்க செவ்வாய் லக்கினத்தில் உச்சனுய் அமரத் தலைசிறந்த இராஜயோகம் ஏற்படும். மேலும், "ருசக யோகம்", "சந்திர-மங்கள யோகம்" ஆகியனவும் ஏற்பட்டு முன் சந்திர மங்களயோகத்துக்குக் கூறிய பலனுடன் செவ்வாய் தனது தசா காலத்தில் அபரிமிதமான செல்வ நிலையையும், சமூகத்திலோ அன்றேல் அரசாங்கத்திலோ தலைமைப் பதவியையும் நல்கும். சந்திரனும் சூரியனும் ஒன்று சேர்ந்து எங்கு இருந்தாலும் தீமையே ஏற்படும். மனத்திடசித்தமில்லாமல் மகளிரால் ஆளப்படுவான். இருவர்களின் தசாகாலங்களில் சொல்லொணுத் துன்பம் ஏற்படும். பொதுவாகப் பெண்களுக்குச் சந்திரன் 1ம், 3ம், 5ம், 7ம், 9ம், 11-ம் பாவங்களாகிய பெண் ராசியிலிருப்பதே மிகச் சிறந்த அம்சமாகும். இராக் காலத்தில் ஜனனமான பெண்களுக்கு சந்திரன் ஷெ நிலையில் நிற்க, சூரியன் அவருடன் ஒன்று சேராது மேற்கூறிய பெண் ராசிகளில் ஒன்றில் நிற்பரேல் "மகா பாக்கிய யோகம்" ஏற்பட்டுத் தக்க பராயத்தில் திருமணச் சிறப்பெய்தி நல்வாழ்வு வாழ்வர். சந்திரன் 2-ம் பாவத்தில் பூரட்டாதி நட்சத்திரத்திலோ, 7-ல் புனர்பூச நட்சத்திரத்திலோ, 10-ல் விசாக நட்சத்திரத்திலோ இருக்க ஜனனமானுல், ஜாதகரின் ஆரம்ப தசை வியாழ தசையாக அமைந்து, பெரும்பாலும் பெற்றோருக்கு "நல் அதிஷ்டம்" வாய்க்கப்பெறுமென்றும், ஜாதகருக்கு தக்க பருவத்தில் சனி, புதன், சுக்கிரன் ஆகிய யோகதசைகள் ஒன்றன்பின் ஒன்ருக ஏற்படும் நல்வாய்ப்பு உண்டாகுமென்றும், இக் கிரகங்கள் ஜாதகத்தில் நல்ல நிலையில் அமையப்பெற்ருல் ஜாதகர் பெரும் அதிஷ்டசாலியும் புண்ணியவானும் என்றும் கூறற்பாலதாம்.

(தொடரும்)

வீட்டுக்குத் தேவையான



நவீன மின்னொளிப் பொருட்கள்

சைக்கிள் | உதிரிப்பாகங்கள்


இறக்குமதி செய்யப்பட்ட

**ரேடியோ, மணிக்கூடு வகைகள்**

**டெலிபங்கன்**

**நேஷனல்**

**கோல்ட் ஸ்ரார்**



**போன்ற டெலிவிஷன் வகைகளுக்கும்**

சிறந்த இடம்

# மிட்லன்ட் மோட்டோர்ஸ்

கச்சாய் ரோட் — சாவகச்சேரி

# புது வருட பலாபலன்கள்

மேற்படி புதுவருடம் 14-4-82 இல் அதிகாலே 2-42 மணிக்குப் பிறக்கின்றது. அப்போது கிரகநிலே பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| | சூரி 0<br>புத 2 | | ராகு 24 |
| வெ 14<br>லக் 1 | புது வருட ஜாதகம் | | |
| | | | |
| கேது 24<br>நெப 3<br>சந் 1 | யுரே 10 | வியா 13 | செவ் 11<br>சனி 24 |

**பொதுவாக உலக பலன்:**

பல அரசுகளும் தம்து மூளையைப் பாவியாது, எதிர் வருவனவற்றைச் சிந்தியாம லும் இருக்கும். அதோடு மகா ஜனங்களுக்காக பரிதபிக்க மாட்டார்கள். ஜன நாயகம், ஜனநாயகம் என வாய்ப்பறை சாற்றுவர். ஆனல் செயலில் ஜனநாயகம் எள்ளளவும் தென்பட மாட்டாது. அரசியல் தலேவர்கள் மேன்மையான உயர்ந்த, சிறந்த கொள்கைகளேப் பின்பற்ற மாட்டார்கள். ஜனதிபதிகள் தத்தமது பிரதம மந்திரிகளுடன் மோதிக் கொள்ளும் நிலேபரம் ஏற்படும். அரசியல் தலேவர்களின் யோசனேயற்ற நடத்தையால் உலக நிலேபரம் சிதையும். ஆகையால் அதிகாரம் இராணுவத்தின் கையில் அகப்படும். அரசியல் தலேவர்களுக்கும் பொது ஜனத்திற்கும் இடையில் சதா மோதல்கள் தென்படும். பொதுஜன கிளர்ச்சிகளே அடக்கி ஒடுக்க அரசுகள் மூர்க்க மிருக பலத்தைக் கையாளும். உயர் பதவியிலிருப்பவர்களேப் பெண்கள் தம் மாயவலேக்குள் மாட்டி அவர்களேத் தப்பான வழியில் ஆட்சி செலுத்தும்படி கோருவார்கள். அதிக பெண்கள் அரசியலில் ஈடுபடுவார்கள். விலே மதிப்புள்ள கனிப்பொருட்களே வாங்கிச் சேகரிப்பார்கள். இதனல் பொருட்களின் விலே உயரும். இராணுவம் அரசாங்கத்துக்குக் கட்டுப்படாத ஓர் நிலே தோன்றும்.

**இலங்கை:** இலங்கையின் சுதந்திர சாதகத்தில் லக்னம் துலாம். லக்கினதிபதியும், 8-ம் அதிபதியும், வெள்ளியாகவிருக்கிறது. இந்த வெள்ளியை வருடப்பிறப்பு சாதகத்தில் துர்க்கிரகங்கள் ஒன்றும் தாக்கவில்லே. ஆனல் சந்திரனும், நெப்ரியூனும், கேதுவும் செக்ஸ்ரையில் பார்வையடைகிறது. வியாழனும் வெள்ளியைப் பார்க்கிறது. இவையெல்லாம் நற் பார்வைகளாகும். ஆகையால் 1-ம், 8-ம் வீட்டுக்குடைய பலன்கள் பாதிக்கப்படமாட்டா. எதிர் காலத்தில் பொது மக்களின் கஷ்டம் குறையும். நாட்டின் பெருமை பெருகும். மரண விகிதம் குறையும். பெரிய அபாயங்கள் நடவாது. இயற்கை அழிவுகள் குறையும்.



வே. சின்னத்துரை
நல்லூர்

2-ம் 7-ம் அதிபதியாகிய செவ்வாயை வெள்ளி பார்க்கிறது. வியாழன் அச் செவ்வாய்க்கு செக்ஸ்ரைல் அடைகிறது. இவை எல்லாம் நற்பார்வைகளே. ஆதலால் நாட்டின் பொருளாதாரம் நன்நிலேயடைய வழியுண்டு. நாணய மதிப்பு உயர இடமுண்டு. பணவீக்கம் குறையும். விலேவாசியும் குறையும். வங்கிக் கொள்ளே அற்றுவிடும். வியாபாரத்தில் நயமுண்டாகும். பிறநாட்டு உறவுகள் சுமுகமாகும். உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும் வலுவடையும். யுத்த பீதி இல்லாதொழியும்.

3-ம், 6-ம் அதிபதியாக வியாழன் இருப்பதால் இந்த வியாழனே யுரேனசும், சனியும் தாக்குவதால், புகையிரத, தபால் சேவைகளில் வேலே நிறுத்

தங்கள் ஏற்படும். அயல்நாட்டுப் பூசல்கள் உண்டாகும்; பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்படும். வேலை செய்யும் சமூகம் பாதிக்கப்படும். உள்நாட்டுக் கலகம் உண்டாகும். அபாயகரமான நோய்கள் தென்படும். யுத்தம் அல்லது எல்லைத் தகராறுகள் உண்டாகும். தொழிற்பேட்டைகள் மூடப்படலாம்.

4-ம், 5-ம் அதிபதி சனியைத் துர்க்கிரகங்கள் பார்க்கவில்லை. ஆனால் செவ்வாய் செக்ஸ்ரைல் அடைகிறது. இது ஓர் நற்பார்வையாகும். ஆகையால் பொதுக்கல்வி சிறந்தோங்கும். கல்வி ஸ்தாபனங்கள் விரிவடையும். மழை வழம் குறையாது. பிறநாட்டுத் தூதுவர்களுடன் சுமுக உறவு உண்டாகும்.

9-ம் அதிபதியும், 12-ம் அதிபதியும் புதனாகும். அப் புதனை துர்க்கிரகங்கள் தாக்காதபடியால் நாட்டின் தலைவருக்கு அபாயம் நீங்கி தர்மம் நிலைநாட்டப்படும். மறியற்சாலைகள், சிகிச்சைச் சாலைகள் நன்கு இயங்கும்.

10-ம் அதிபதி சந்திரனை யுரேனசும், சனியும் தாக்குவதால் பாராளுமன்றத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படும். ஆளும் கட்சி மாறும். மந்திரிகளுக்கு கொடுக்கப்பட்ட கருமங்கள் மாற்றமடையும். அரசியலில் புயல், கொந்தளிப்புகள், கொலைகள் ஏற்படும். உயர் ஸ்தானத்தில் இருப்போருக்கு கேடுகள் நிகழ இடமுண்டு.

11-ம் அதிபதி சூரியனை துர்க்கிரகங்கள் தாக்காதபடியால் நாடு சுபீட்சமடையும். அரசாங்க உடைமைகள் தனியார் உடைமைகள் ஆகலாம்.

தமிழர்களின் சாதகத்தில் லக்னாதிபதியும் 8-ம் அதிபதியும் செவ்வாய், இவற்றை துர்க்கிரகங்கள் தாக்காதபடியால் தமிழ் மக்களுக்கு சௌக்கிய சுபீட்சம் உண்டாகும். தமிழர் இடங்களில் சுபீட்சம் நிலவும்: பொதுமக்களின் பீடைகள் நீங்கும். மரண விகிதம் குன்றும். பாரிய அபாயங்கள் தவிர்க்கப்படும். தொற்று நோய்கள் பரவாது. இயற்கை அழிவுகள் ஏற்படாது.

2-ம், 7-ம் அதிபதி வெள்ளி, இந்த வெள்ளியை துர்க்கிரகங்கள் தாக்கவில்லையாதலின் தமிழர்களின் பொருளாதாரம் விரிவடையும். பொருட்களின் விலைவாசிகள் குறையும். வாழ்க்கைச் செலவு குறையும்.

3-ம், 6-ம் அதிபதி புதன் துர்க்கிரகங்களால் தாக்கப்படாமையால் போக்குவரத்து சாதனங்களின் சுபீட்சமும், அயல் நாட்டுடன் சுமுக வாழ்வும், பத்திரிகைச் சுதந்திரமும் பேணப்படும்.

4-ம் அதிபதி சந்திரனை துர்க்கிரகங்கள் தாக்குவதால் தமிழர்களின் கல்வி பாதிக்கப்படும். தமிழர்களின் கல்வி நிலையங்கள் மூடப்படும். அகழ்விடங்களிலும் சுரங்கங்களிலும் விபத்து ஏற்படும். மழை வீழ்ச்சி குன்றும். பகிரங்கக் கட்டிடங்கள் தகர்க்கப்படும்.

5-ம் அதிபதி சூரியனை துர்க்கிரகங்கள் தாக்காதபடியால் பொது மக்களுக்கும் அரசியல் வாதிகளுக்குமிடையே சுபீட்சம் நிலவும். பிற நாட்டாருடன் சௌஜன்யம் நிலவும்.

9-ம் அதிபதியும் 12-ம் அதிபதியும் வியாழன் ஆகும். அந்த வியாழனைத் துர்க்கிரகங்கள் தாக்குவதினால் சமய ரீதிகளில் அழிவுகள் உண்டாகும். அல்லது சமயச் சண்டை சச்சரவுகள் தோன்றும்; தமிழ்த் தலைவர்களில் ஒருவர் மரணமடையலாம். தர்மமும் சட்டமும் பாதிக்கப்படும். விஞ்ஞானக் கண்டுபிடிப்பால் அழிவு ஏற்படும். தமிழர்களின் திட்டங்கள் நிறைவேறாது. சிறைச்சாலையிலிருந்து கைதிகள் ஓட்டமெடுப்பார்கள். சிகிச்சைச் சாலைகள் அழிக்கப்படும். தமிழர்களுக்கு ஒரு சோதனையானகாலமாகும். தமிழர்களின் நாடு கடற்படையால் தாக்கப்படும். நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கப்படும். அடிக்கடி அபாயங்கள் உண்டாகலாம். தமிழர்களுக்குள் ஒரே குழப்பமும் குந்தகங்களும் ஏற்படும்.

10-ம், 11-ம் அதிபதி சனியை துர்க்கிரகங்கள் தாக்காதபடியால் தமிழர்கள் ஆட்சியில் மாற்றமில்லை. புரட்சிகளுக்கிடமில்லை. தமிழர்களுக்கு சுபீட்சமுண்டாகும். தமிழர்களின் பொருளாதாரம் முன்னேற்றமடையும்.

## இந்திய உப கண்டம்

இந்தியாவின் இலக்கினம் கன்னி. இலக்கினத்தில் துர்க் கிரகங்களாகிய வக்கிரச் சனியும் வக்கிரச் செவ்வாயும் உடனுறைகின்றன. அதோடு சனி 3-ம் வீட்டையும், வக்கிர யுரேனசையும் 10-ம் வீட்டையும் அதில் உறையும் ராகுவையும் பார்க்கின்றது. செவ்வாய் 4-ம் வீட்டையும், அங்குறையும் கேது நெப்டியூனையும் பார்க்கிறது. சனியும் செவ்வாயும் 7-ம் வீட்டையும் பார்க்கிறது. இவை இந்தியாவுக்கு அபாயச் சங்கை முழங்குகின்றன. பாக்கிஸ்தானுடன் யுத்தமின்மை ஒப்பந்தம் செய்து கொண்டாலும்,

பாக்கிஸ்தானிலிருந்து யுத்தம் மூழும் நிலை ஏற்படும். திருமதி இந்திரா காந்தியும் தன்னைப் பாது காத்துக்கொள்ள வேண்டும். வேலை நிறுத்தங்கள், எதிர்க்கட்சிகளினால் பாரிய தொந்தரவுகள் எல்லாம் உண்டாகக் கூடும். ஆளும் கட்சியில் சில பிளவுகள் ஏற்பட இடமுண்டு. ஆகையால் மந்திரி சபையில் மாற்றங்கள் ஏற்படலாம். பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படலாம். செய்த ஒப்பந்தங்கள் ரத்தாகலாம். பாக்கிஸ்தானில் சியாவுக்கு எதிராக இரகசிய சூழ்ச்சிகள் எடுக்கப்படும். அவரும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

## மத்திய கிழக்கு

அராபிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் நட்புறவுகள் குன்றும். இஸ்ரேலுடன் எகிப்து நட்புறவு கொள்ளாவிட்டால் எகிப்தின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடையும். பலஸ்தீனர்களுக்கு ஒரு புதிய நாடொன்று பிறக்க இடமுண்டு. இதை இஸ்ரேலும் கடைசியில் விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

## ருசியா

ருசியாவின் இலக்கினம் கும்பம். அவர்களுக்கு 8-ம் வீடு, 10-ம் வீடு, 11-ம் வீடு, 2-ம் வீடு, 5-ம் வீடு எல்லாம் தாக்கப்படுகின்றன. இவை ருசிய கம்யூனிஸ்ற் கட்சிக்குள் பல மாற்றங்கள் உண்டாவதையும், மூத்த ஒரு தலைவர் மறைவதையும். தங்கள் பாது காப்புக்கு மிகவும் பந்தோபஸ்துகளை ஏற்படுவதையும் காட்டும்! அவர்கள் ஒரு காலமும் யுத்தத்தை விரும்ப மாட்டார்கள். ஆனல் பிறர் தம் நாட்டை ஆக்கிரமிப்பதை கடைசி மட்டும் எதிர்த்தே தீருவார்கள். உலக நாடுகளில் ருசியர்களே உண்மையான சமாதான விரும்பிகள்.

## அமெரிக்கா

மிதுன லக்கினமே அமெரிக்காவின் இலக்கினம். இங்கு 1-ம், வீடு, 4-ம் வீடு, 6-ம் வீடு, 7-ம் வீடு, 10-ம் வீடு எல்லாம் தாக்கப்படுகிறது. அமெரிக்கா தான்தோன்றித் தனமாக பல நாடுகளிலும் தனது செல்வாக்கைப் பெருக்க முயற்சியெடுக்கும். இதனல் யுத்த அபாயம் உண்டாகலாம். ஜனதிபதி றீகனுக்கு இன்னுமொரு அபாயம் காத்திருக்கிறது. எதற்கும் அவர் பாது காப்பாக இருக்கவேண்டும். அவரது கொள்கைகள் பல நாடுகளையும், வெறுக்கச் செய்யும்.

## இங்கிலாந்து

இவர்களுடைய லக்னம் மேடம், இவர்களுக்கு 3-ம் வீடு, 6-ம் வீடு, 8-ம் வீடு, 9-ம் வீடு, 12-ம் வீடுகள் தாக்கப்படுகின்றன. இங்கு நிற வேற்றுமை சண்டைகள் மறுபடியும் தலையெடுக்கும். அயர்லாந்து பிரச்சினை தீர்க்கப்படாத பிரச்சினையாக இருந்துகொண்டுதானிருக்கும். வேலையில்லாத் திண்டாட்டம் கூடிக்கொண்டே போகும்.

## சீன

சீனவின் எல்லைப் புறங்களில் ராணுவ கெடுபிடிகள் உண்டாகும். அதோடு தலைவர்களுள்ளும் சில மாறுதல்கள் ஏற்படலாம்.

---

(50-ம் பக்கத் தொடர்ச்சி)

(ஆ) அவ்வாறே எல்லாச் சாந்திர மாதங்களும் அவற்றுேடிணையும் சௌர மாதங்களுக்கு முந்திய அமாவாசை முடிவில் ஆரம்பிக்கப்படும்.

2. எந்தச் சௌரமாதத்தில் ஒரு சாந்திரமாதம் உள்ளடங்குகின்றதோ அந்தச் சாந்திர மாதம் சௌரமாத சங்கிராந்தியைப் பெருததினல் அதிகமாதம் எனக் கொள்ளப்பட்டு விரதாதிகளுக்கு விலக்கப்பட்டு அடுத்த சாந்திரமாதம் நிஜமாதமாகக் கொள்ளப்படும்.

3. எந்தச் சாந்திரமாதத்தில் ஒரு சௌர மாதம் உள்ளடங்குகின்றதோ அந்தச் சாந்திரமாதத்தில் இரண்டு சௌர மாதச் சங்கிராந்திகள் நிகழுமாகையால் முதற் சங்கிராந்தியின் சௌர மாதத்துடன் இணையும் சாந்திரமாதமாக அது கொள்ளப்பட்டு அடுத்த சாந்திர மாதம் க்ஷயமாதம் என நீக்கப்படும்.

4. க்ஷயமாதம் வரும் வருடத்தில் முன்னும் பின்னுமாக இரண்டு அதிகமாதங்கள் நிகழும்.

**முக்கியகுறிப்பு:**

சோதிடமலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளர்களின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

# அதிக - க்ஷய மாதங்கள்

( பிரம்மஸ்ரீ ந. கந்தசாமி ஐயர், — கோண்டாவில் )

தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் வெளியாகும் பஞ்சாங்கங்கள் எல்லாம் சௌர சாந்திரமான பஞ்சாங்கங்கள் என அழைக்கப் படும். அதன்விரிப்பு சௌரமானத்தையும், சாந்திரமானத்தையும் சேர்த்து அமைக்கப்பட்டது என்பதாகும். சௌரமானம் என்பது சூரியனால் ஏற்படும் வருடங்கள் மாதங்களாகிய அளவினையும் சாந்திரமானம் என்பது சந்திரனால் ஏற்படும் வருடங்கள் மாதங்களாகிய அளவினையும் குறிக்கும்.

பொதுவாக நாம் அனுஷ்டிக்கும் ஜன்மாஷ்டமி, ஸ்ரீராம நவமி, நவராத்திரி, ஸ்கந்தஷஷ்டி, முதலிய விழாக்கள், விரதாதிகள் சாந்திர மாதப்படியே கொள்ளும்படி சாஸ்திரங்கள் விதித்திருந்தாலும் அவற்றைக் குறித்த அயனங்கள் பருவ காலத்துடனும், சில சந்தர்ப்பங்களில் சௌர (சூரிய) மாதத்துடனும் இணைத்து நிர்ணயஞ் செய்திருக்கிறார்கள். அயனம் பருவகாலம் என்பன சூரியனின் பெயர்ச்சியால் ஏற்படுவன. அதனால் நம் பண்டைய இந்திய வானசாஸ்திரிகள் சௌரமானமும், சாந்திரமானமும் கலந்த பஞ்சாங்கங்களைக் கணித்து வெளியிடும் விதி முறைகளையும் வகுத்துள்ளார்கள். *

நாம் கைக்கொள்ளும் நிரயன சௌர (சூரிய) வருடம் சூரியன் மேட ராசியிற் பிரவேசிக்கும் பொழுது (மேடசங்கிராந்தி - சித்திரை மாதப் பிறப்பு) ஆரம்பமாகி அடுத்த மேடராசிப் பிரவேசத்துடன் முடிவடைகிறது. இதற்குரிய காலம் 365 நாள் 6 மணி 9 நிமிடங்கள்.

சாந்திர வருடம் சூரிய வருடம் ஆரம்பமாகும் சித்திரை மாதத்துக்கு முந்திய பங்குனி மாதத்தில் நிகழும் அமாவாசைக்கு அடுத்த பிரதமையில் ஆரம்பமாகி அடுத்த வருடம் பங்குனி மாத அமாவாசையுடன் முடிவடையும், இதற்குரிய காலம் - சாந்திரமாதம் சராசரி 29 நாள் 8 மணி 48 நிமி கொண்டதால் அதனை 12 ஆற் பெருக்க - 354 நாள் 8 மணி 48 நிமி ஆகும்.

ஆகவே சௌரவருடத்திலும் பார்க்க சாந்திர வருடம் 10 நாள் 21 மணி 21 செக் அல்லது 10 7/8 நாட்கள் குறைவென்பது புலப்படுகிறது. அதாவது 12 சௌரமாதங்களில் 12 சாந்திரமாதங்களும் 10 7/8 நாட்களும் நிகழும். அதனால் 36 சௌர மாதங்களில் 37 சாந்திர மாதங்கள் நிகழ்ந்துவிடுமென்று தெரிகிறது. இப்படியே போகவிட்டால் சில வருடங்களில் சௌர மாதங்களுக்கும் சாந்திர மாதங்களுக்கும் சம்பந்தமில்லாமல் ஒன்றுக்கொன்று தூரவிலகிவிடும். உதாரணமாக சித்திரை அல்லது வைகாசியில் வரும் சாந்திர வைசாக விசாகம் தை மாதத்தில் நிகழும் நிலை ஏற்படும். அதனால் இந்நிலையைத் தவிர்ப்பதற்காக — சௌர மாதங்களுடன் சாந்திர மாதங்கள் ஒத்துநடப்பதற்காக - 3 வருடங்களுக்கொருமுறை ஒரு சாந்திர மாதத்தை இரண்டு தரம் எண்ணிச் சௌரமாதத்துடன் இணைய வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் 3 வருடத்துக்கொருமுறை எந்த ஒரு சௌர மாதச் சங்கிராந்தியின் பின் அமாவாசை முடிந்து அடுத்தமாத சங்கிராந்திக்குமுன் அடுத்த அமாவாசை முடியுமானால் அல்லது எந்த ஒரு சௌர மாதத்துள் ஒரு சாந்திரமாதம் அடங்குமானால் அந்தச் சாந்திரமாதம் அதிகமாதமென்றும் (மேலதிகமாதம்) அடுத்து நிகழும் சாந்திரமாதமே நிஜ (உண்மையான) சாந்திர மாதமெனவும்

---

* சாந்திரமானத்தை மட்டும் கொள்ளும் முஸ்லீம்களின் முஹர்ரம் எல்லாப் பருவங்களிலும் வருவதும், சாயன சௌரவருடத்தை மட்டும் கொள்ளும் ஐரோப்பியர், குடிசார் (Civil) மாதங்களை நியமித்துக் குறித்த திகதிகளில் பண்டிகைகளைக் கொண்டாடுவதையும் ஈண்டு நோக்கவும்.

கொள்ளவேண்டுமென்ற நியதியைப் பண்டைய இந்திய வானசாஸ்திரிகள் வகுத்தார்கள். இந் நியதிப்படி நிகழும் துந்துபி வருடத்தில் புரட்டாதி மாதத்தில் சாந்திரமாதமாகிய ஆசுவினம் அடங்கிவிடுவதனுல் அதனை அதிக ஆச்வின மாதமென்றும் அடுத்து ஐப்பசியில் நிகழும் சாந்திர மாதத்தை நிஜ ஆசுவினம் என்றும் பஞ்சாங்கங்களில் வெளியாகியிருப்பதைக் காணலாம்.

எந்தெந்த மாதங்களில் அதிகமாதங்கள் நிகழும் என்பதை அறிந்துகொள்வதற்கு பின்வரும் அட்டவணையை அவதானிக்கவும்.

சௌரமாதங்களும், அவற்றேடிணையும் சாந்திரமாதங்களும்.

| சௌரமாதம் | நா. | ம. | நிமி. | சாந். மாதம் |
|---|---|---|---|---|
| * சித் மேட மாதம் | 30 | 20 | 56 | சைத்ரம் |
| வை இடப ,, | 31 | 6 | 41 | வைசாகம் |
| ஆனி மிதுன ,, | 31 | 10 | 55 | ஜ்யேஷ்டம் |
| ஆடி கடக ,, | 31 | 8 | 25 | ஆசாடாம் |
| ஆவ சிங்க ,, | 30 | 23 | 54 | சிராவணம் |
| புரட் கன்னி ,, | 30 | 11 | 52 | பாத்ரபதம் |
| ஐப் துலா ,, | 29 | 23 | 42 | ஆசுவினம் |
| கார் விரு ,, | 29 | 14 | 34 | கார்த்திகம் |
| மார் தனு ,, | 29 | 10 | 44 | மார்க்கசிரம் |
| தை மகர ,, | 29 | 12 | 58 | பௌஷம் |
| மாசி கும்ப ,, | 29 | 20 | 55 | மாகம் |
| பங் மீன ,, | 30 | 8 | 33 | பால்குனம் |
| மொத்தம் | 365 | 6 | 9 | |

சாந்திரமாதம் சராசரி 29 நாள் 12 மணி 44 நிமி கொண்டதாயினும், சந்திரனின் நீச (Apogee) உச்ச (Perigee) நிலையை அனுசரித்து அதன் அளவு 29 நாள் 5 மணி 54 நிமி. இருந்து 29 நாள் 19 மணி 30 நிமி. வரை வேறுபடும்.

அட்டவணையின்படி மாசி முதல் ஐப்பசி முடிய உள்ள மாதங்கள் சாந்திர மாதங்களின் அளவிலும் கூடியிருப்பதால் அம்மாதங்களிலொன்றில் ஒரு சாந்திரமாதம் அடங்குவதற்கு அதாவது அதிகமாதம் நிகழ்வதற்கு வாய்ப்பு உண்டென்றும், கார்த்திகை மாதத்தில் வாய்ப்பு மிகக் குறைவென்றும், மார்கழி, தை மாதங்களில் பெரும்பாலும் நிகழாதென்றும் அறிந்து கொள்ளலாம். மேலும், இதற்கு மாருக சாந்திர கார்த்திக மாதம் கார்த்திகை மாதத்திலும், கூடும் வாய்ப்பு சிறிதுண்டென்றும் சாந்திர, மார்க்கசிர, பௌஷ மாதங்கள் முறையே சௌர மார்கழி தை, மாதங்களிலும் கூடும் வாய்ப்பு அதிகமுண்டென்பதும் கவனிக்கத்தக்கது.

ஒரு வருடத்தில் ஒரு அதிகமாதம் நிகழ்ந்தால் அவ் வருஷத்தில் சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட கால எல்லைகளில், கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மாதங்களில் ஒன்று ஒரு சாந்திர மாதத்திற்குள் முற்றாக அடங்கி விடுவதுண்டு. அதாவது இம்மாதங்களில் ஒன்றின் சங்கிராந்திக்கு முன் ஒரு அமாவாசை முடிந்து அடுத்த சங்கிராந்திக்குப் பின் அடுத்த அமாவாசை முடியும். உதாரணமாக நிகழும் துந்துபி வருடத்தில் மகர சங்கிராந்திக்கு (தை மாதப்பிறப்பு) 3 மணி 47 நிமிடத்திற்கு முன் ஆரம்பிக்கும் சாந்திர மாதம் கும்ப சங்கிராந்திக்கு (மாசி மாதப்பிறப்பு) 2 மணி 15 நிமிடத்திற்குப் பின்பு முடிகின்றது. இப்படி நிகழ்ந்தால் க்ஷயமாதம் என்று ஒரு சாந்திரமாதம் நீக்கப்பட்டு எண்ணப்படாது விடப்பட வேண்டும். அப்படியானல் குறித்த சாந்திர மாதத்துக்கு எந்தச் சாந்திர மாதப் பெயரிட்டு வழங்க வேண்டும் என்பதும் எந்தச் சாந்திர மாதப் பெயர் நீக்கப்பட வேண்டும் என்பதும் தீர்மானிக்கப்படவேண்டிய விடயமாகும். மகர சங்கிராந்திக்கு முன் ஆரம்பிப்பதால் பௌஷம் என்பதா? கும்ப சங்கிராந்திக்குப் பின் முடிவதால் மாகம் என்பதா? என்ற வினு எழுகின்றது. இதற்கு விதி முதற் சங்கிராந்தியோடிணையும் சாந்திர மாதப் பெயரால் குறித்த மாதம் அழைக்கப்பட வேண்டும் என்பதாகும். அதனுல் குறித்த சாந்திர மாதம் மகர சங்கிராந்தி (தைப்பிறப்பு) யோடிணையும் பௌஷமாதமாகக் கொண்டு அடுத்த சாந்திர மாதமாகிய மாகம் க்ஷயமாதம் என எண்ணுது கழித்துவிடப்பட வேண்டும். அவ்வாறே நிகழும் துந்துபி வருஷ திருக்கணித பஞ்சாங்கத்

* தமிழில் வழங்கும் சௌரமாதப்பெயர்கள் சாந்திரமாதங்களின் பெயர்களிலிருந்தே உருமாற்றம்பெற்று சைத்ரம் என்பது சித்திரை என்பதுபோல் வழங்கப்படுவதனுல் ஏற்படக்கூடிய சந்தேகத்தை நீக்குவதற்காக ராசிப் பெயர்களில் (கேரள நாட்டில் நடைமுறையில் உள்ளதுபோல்) அமைந்த மாதப்பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன.

தில் அம்மாதம் பௌஷம் எனக் குறிக்கப்பட்டிருத்தலையும் மாகம் நீக்கப்பட்டிருத்தலையும் காணலாம்.

இப்படி க்ஷயமாதம் நிகழுமேயானால் நிச்சயமாக அடுத்த மாதங்களில் ஒன்றில் முந்திய இழப்பை ஈடு செய்யும் வகையில் மேலும் ஒரு அதிக மாதம் நிகழும். அவ்வாறு மாசி மாதத்தில் கும்ப சங்கிராந்திக்கு 2 மணி 15 நிமிடத்திற்குப் பின் ஆரம்பித்த சாந்திர மாதம் மீன சங்கிராந்திக்கு (பங்குனி மாதப்பிறப்பு) ஒரு மணித்தியாலம் முன் முடிவதால் அது க்ஷயமாதத்துக்கு அடுத்து நிகழும் ஓர் அதிக மாதமாகக் கொள்ளப்படும். அடுத்து, நிஜமாதம் கொள்ளப்படல் வேண்டும். இங்கே மாகமாதம் நீக்கப்பட்டதால் இந்த அதிகமாதம் அதிக பால்குன மாதமாகவும், அடுத்த சாந்திர மாதமே நிஜபால்குன மாதமாகவும் கொள்ளப்பட்டிருத்தலையும் சாந்திர வருடப் பிறப்பாகிய சைத்ராரம்பம் மேட சங்கிராந்திக்கு (சித்திரை மாதப்பிறப்பு) முதல்நாளே ஆரம்பமாயிருத்தலையும், அதனால் சௌர சாந்திரமானங்கள் ஒத்து இயங்குமாறு ஜோதிஷ கணித விதிப்பிரகாரம் இணைக்கப்பட்டிருத்தலையும் திருக்கணித பஞ்சாங்கத்திற் கண்டு கொள்க.

மேற்கூறியவற்றிலிருந்து ஒரு அதிகமாதம் நிகழும் வருடத்திலேயே அது நிகழ்ந்தபின் க்ஷயமாதம் ஏற்படுமென்பதும், அவ்வாறு ஏற்பட்டால் அந்த வருடத்தில் இன்னொரு அதிகமாதம் நிகழும் என்பதும் தெரியவரும். ஆனால் க்ஷயமாதம் எப்பொழுது வருமென்று இலகுவிற் சொல்லிவிட முடியாது. அது பின்வரும் அட்டவணையிலிருந்து *19, 46, 65, 76, 122, 141* வருட இடைவெளிகளில் வந்துள்ளதைக் காணலாம்.

| கி. பி. | இடைவெளி வருடங்கள் | க்ஷய மாதம் | க்ஷய மாதத்திற்கு முன்னும் பின்னும் நிகழ்ந்த அதிக மாதங்கள் |
|---|---|---|---|
| 526-527 | 19 | பௌஷம் | கார்த்திகம், பால்குனம் |
| 545-546 | 19 | பௌஷம் | கார்த்திகம், பால்குனம் |
| 564-565 | 19 | பௌஷம் | ஆசுவினம், பால்குனம் |
| 610-611 | 46 | மார்க்கசிரம் | கார்த்திகம், வைசாகம் |
| 629-630 | 19 | பௌஷம் | ஆசுவினம், சைத்ரம் |
| 770-771 | 141 | பௌஷம் | ஆசுவினம், சைத்ரம் |
| 892-893 | 122 | மார்க்கசிரம் | கார்த்திகம், சைத்ரம் |
| 911-912 | 19 | பௌஷம் | ஆசுவினம், சைத்ரம் |
| 1052-1053 | 141 | பௌஷம் | ஆசுவினம், சைத்ரம் |
| 1193-1194 | 141 | பௌஷம் | ஆசுவினம், சைத்ரம் |
| 1258-1259 | 65 | பௌஷம் | கார்த்திகம், சைத்ரம் |
| 1277-1278 | 19 | பௌஷம் | கார்த்திகம், பால்குனம் |
| 1296-1297 | 19 | பௌஷம் | மார்க்கசிரம், பால்குனம் |
| 1315-1316 | 19 | மார்க்கசிரம் | கார்த்திகம், பால்குனம் |
| 1334-1335 | 19 | பௌஷம் | ஆசுவினம், பால்குனம் |
| 1380-1381 | 46 | மார்க்கசிரம் | கார்த்திகம், வைசாகம் |
| 1399-1400 | 19 | பௌஷம் | கார்த்திகம், சைத்ரம் |
| 1476-1477 | 76 | மாகம் | ஆசுவினம், பால்குனம் |
| 1521-1522 | 46 | மார்க்கசிரம் | கார்த்திகம், வைசாகம் |
| 1540-1541 | 19 | பௌஷம் | ஆசுவினம், சைத்ரம் |
| 1681-1682 | 141 | பௌஷம் | ஆசுவினம், சைத்ரம் |
| 1822-1823 | 141 | பௌஷம் | ஆசுவினம், சைத்ரம் |
| 1963-1964 | 141 | மார்க்கசிரம் | கார்த்திகம், சைத்ரம் |
| 1982-1983 | 19 | மாகம் | ஆசுவினம், பால்குனம் |

**சௌர சாந்திரமான இணைப்பில் பின்பற்றப்படும் விதிகள்**

1. (அ) சாந்திர வருடப்பிறப்பாகிய சைத்ர சித்திரை மாதப்பிறப்புக்கு முன் நிகழும் அமாவாசை முடிவில் இருந்து ஆரம்பிக்கும்.

*(47-ம் பக்கம் பார்க்க)*

# சந்தேக நிவிர்த்தி

'மகம்'

க. சிற்றம்பலம், யாழ்ப்பாணம்.

சந்: கோசார பலன்களுக்கு ஏன் சந்திர ராசியை மையமாக வைத்து எழுதப்படுகிறது? லக்கினம் தெரிந்தவர்கள் லக்கினத்தை மையமாக வைத்து கோசாரபலன்களை ஆராய்வதுதானே விசேடம்?

நிவி: கோசார பலன்கள் சந்திர ராசிக்குப் பார்ப்பதே சரியாக இருக்கின்றது. இது எங்கள் பாரம்பரிய சோதிட ஆசாரியர்களின் முடிபு. லக்கினம் தேகத்தைக் குறிக்கிறது. சந்திரன் மனத்தையும், சூரியன் ஆத்மாவையும் குறிக்கிறது. மனம் கண்ணாடி போன்றது. ஒருவரின் தேகத்திற்கு, மனசுக்கு, ஆத்மாவிற்கு ஏற்படும் தாக்கங்களை ஒருவரின் மனசு கண்ணாடிபோல் எடுத்துக் காட்டுகிறது. மேலும் மனிதன் மனசை மையமாகக் கொண்டே வாழ்கின்றான். இவை காரணமாகவே சந்திர ராசியை கோசாரத்திற்கு மையமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சி. கந்தசாமி, மட்டக்களப்பு.

சந்: எங்கள் பிரதமருக்கு இப்பொழுது அட்டமத்தில் சனி, செவ்வாயும் ஜனாதிபதிக்கு ஏழரைச் சனி கடைக்கூறும் நிகழ்கின்றது. இவற்றைக்கொண்டு இந்த அரசாங்கம் இந்த வருடம் வீழ்ச்சியடையும் என்று சொல்லமுடியுமா?

நிவி: மேற்கூறியவற்றைக் கொண்டு மாத்திரம் அரசாங்கம் வீழ்ச்சியடையும் என்று சொல்லிவிட முடியாது. இலங்கையின் லக்கினத்திற்கும் அட்டமத்துச் சனி நடக்கிறது. இவற்றால் அரசாங்கத்திற்கு பலத்த சோதனை காலம் என்று கூறலாம். இந்தச் சோதனைக்கு நின்று பிடிக்கும் ஆற்றல் எங்கள் தலைவர்களுக்கு உண்டா என்பது ஒரு பெரும் கேள்விக்குறி!

சு. சிவசுந்தரம், கொழும்பு-13.

சந்: சிறிமாவோ அம்மையார் அவர்களுக்கு இப்பொழுது காலம் எப்படி?

நிவி: லக்கின சந்திர ராசியில் சனி, செவ்வாய் வலம் வருகின்றன. மிக்க சிக்கலான சோதனை காலம். செவ்வாய் கன்னி ராசியை விட்டு விலகியபின் இவருக்கு ஒரு பெரும் விடுதலை காலம் தான்.

க. சிவசுப்பிரமணியம், மன்னார்.

சந்: விருச்சிக இராசியில் கெடுதியான கிரகங்கள் சஞ்சரித்தபோதெல்லாம் இலங்கையில் வாழும் தமிழர்கள் பல கஷ்டங்களை (அரசியல் ரீதியில்) அனுபவித்திருக்கிறார்கள். இப்பொழுது யூரேனஸ் இந்த இராசியில் பிரவேசித்த காலம் முதல் அபாயகரமான கோஷ்டியரின் கொள்ளை, கொலை அதிகரித்துக்கொண்டு வருகிறது. எனவே விருச்சிக் ராசிக்கும் தமிழர்களுக்கும் ஏதும் தொடர்பு உண்டா? அப்படி உண்டெனின் குரு விருச்சிகத்தில் உலவும் (1982 ஐப்பசி முதல் 1983 வரை) காலம் தமிழர்களுக்கு விமோசனமான காலமாக இருக்குமா?

நிவி: அனேக சோதிடர்கள் இலங்கை கும்ப இலக்கினத்திற்குரியதென்றும் இங்குள்ள சிறுபான்மையினராகிய தமிழரைக் குறிக்கும் இலக்கினம் மேடம் என்றும் கொள்கின்றனர். மேடம் தமிழரின் இலக்கினமாயின் விருச்சிகம் தமிழரின் விதியைக் குறிக்கும் இராசியாகும். வேறு சில சோதிடர் இலங்கைக்குரிய இலக்கினம் கன்னியென்கின்றனர். அங்ஙனமாயின் விருச்சக ராசி தமிழருக்குரிய இராசியெனக் கொள்ளலாம். எனவே விருச்சிக இராசி தமிழருடன் தொடர்பு கொண்டுள்ளதாகக் கருத வேண்டும். விருச்சிக இராசியில் குரு பிரவேசித்த காலங்களை நாம் ஆராயுமிடத்து 1959-ம் ஆண்டு இந்நாட்டின் தலைவர் பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டு அரசு சில மாதங்கள் ஒரே திண்டாட்டத்தில் திக்குமுக்காடியது. பின்னர் 1971-ம் ஆண்டு அரசைக் கவிழ்க்க முற்பட்டதன் காரணமாக ஏராளம் இளைஞர்கள், சிறுதொகை பொலிஸ் படையினர் துப்பாக்கிக் குண்டிற்கு இரையாகினர். இவற்றை அனுமானித்துப் பலன்களைக் கிரகிக்கவும்.

சு. பாலசிங்கம், திருகோணமலை.

சந்: அனேக சோதிடர்கள் கூற்றின்படி 10-ம் இடத்தில் கிரகங்கள் இருந்தால்தான் அரசியல்

(54-ம் பக்கம் பார்க்க)

உங்கள் மனதிற்குப் பிடித்த
பாதணிகளைத் தெரிவு செய்வதற்கும்

- ★ சூட்கேஸ்
- ★ பிரயாணப் பைகள்
- ★ றங் வகைகள்
- ★ அழகு சாதனப் பொருட்கள்


ஆகியவற்றைக் குறைந்த விலையில் பெறுவதற்கும்

எமது ஸ்தாபனத்திற்கு

**இன்றே விஜயம் செய்யுங்கள்**

**யாழ்ப்பாண மக்கள் விரும்பி வாங்கும்**

**சீரு, நாஷனல், கோல்ட்ஸ்ரார்**




**வர்ண - கலர் - வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகள்**

**எம்மிடம் அமோகமாக விற்பனையாகின்றன**

இன்றே வாங்கி குடும்பத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்துங்கள்

# விமலாஸ்

**இல. 9, நவீனசந்தை, — சாவகச்சேரி.**



# விஷகன்யா தோஷம்

''ஜோதிஷபூஷணம்'' பட்டாக்குறிச்சி
**ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய ஐயர்,**
தமிழ்நாடு.

மனிதர்களாகப் பிறந்து தக்கவயது வந்ததும் திருமணம் என்னும் மங்கலச்சடங்கு தவிர்க்க முடியாததோர் சந்தோஷ பந்தமாகிறது. இத் திருமணம் செய்ய அமைவதற்குமுன் ஆணாக இருப்பவன் தனக்குவரும் பெண், நல்லவளாக தோஷங்களில்லாதவளாக, யோகம் உடையவளாக இருக்க வேண்டுமென்று எண்ணி ஜாதகத்தை முன்வைத்து மேற்படி குண நலன்களை ஆராய்கிறான். அதேபோல் பெண்ணும் தனக்கு அமையும் கணவன் எப்படியிருப்பான் தனக்கு அனுகூலமானவனாக, தான் தெய்வமாகப் போற்றக் கூடியவனாக இருப்பானா என்று ஆவல் கொள்கிறாள். சோதிடப்படி சாதகத்தில் கிரகங்களின் நிலை, பலன், தாக்கங்கள் இவற்றை ஒவ்வொருவரும் ஆராய்வதில் பரிமாற்றம் செய்து கொள்கின்றனர். இதையே பெண் ஜாதகப்படி விஷகன்னியா தோஷம் முதலிய தோஷங்கள் தாக்குகின்றனவா என்பதை ஆராயும்போது இங்கு விஷகன்யா தோஷம் பற்றிய நன்மை தீமைகளை எடுத்துரைப்போம்.

இவ்வாராய்ச்சி செய்வதன் மூலம் திருமணத் திற்கு முன்பே தோஷம் பற்றி அறிந்து கொள்வதால் தோஷ நிவிர்த்திக்கு ஆவன செய்வதற்கு வழியாகின்றது. அதாவது இத்தோஷத்தினால் மட்டும் தடைப்படுவதற்கு காரணமாகும் சுப காரியம் பின் கூறப்படும் சாந்தியினால் நிவிர்த்தியாகின்றது.

''பாபத்வய மத்யகதே சந்திரே லக்னேச கன்யகா
ஜாதா |
நிஜ பித்ரு வம்சம் சேஷம் ஸ்வஸ்ரகுலம் ஹந்தி
நிச்சேஹம்'' | |

- சந்திர ஜன்மலக்னத்திற்கு இரண்டிலும், பன்னிரண்டிலும் பாபக்கிரகங்கள் சேர்ந்திருக்கும் போது பிறந்த பெண் விஷகன்னிகை ஆவதோடு திருமணம் செய்வதுடன் தன் தந்தையின் குலத் திற்குத் துன்பத்தையும், புகுந்த மாமனார் வீட்டுக்கு அதிக சிரமங்களையும் நிச்சயமாக கொடுக்கின்றாள்.

''ரிபு க்ஷேத்ர ஸ்திதௌ த்வௌது லக்னே யத்ர
சுப கிரஹோ |
குரூரஸ் சைகஸ்தத்ர ஜாதா பவேத் ஸ்திரி
விஷகன்னிகா'' | |

- ஜனன காலத்தில் இரண்டு சுப கிரகங்கள் சத்ருவீட்டில் இருந்தாலும், இக்கிரகங்களுள் ஒன்று பாபக்கிரகத்துடன் சேர்ந்தாலும் அப் பெண் விஷகன்னிகை தோஷமுடையவளாகிறாள்.

''பத்ரா திதிர்யதாஸ்லேஷா சதயம் கிருத்திகா
ததா |
மந்தார ரவி வாரஸ் சேத் விஷகன்யா புதைஸ்
மிருதா'' | |

- சனி, ஞாயிறு கிழமைகளில் துவிதியைத் திதியும் ஆயிலியம், சதயம், கார்த்திகை நக்ஷத் திரங்களும் சேர்ந்த அன்று பிறந்த பெண் விஷ கன்னிகையாகிறாள்.

''த்வாதசீ வாருணஸ் ஸூர்யே விசாகா சப்தமீகுஜே |
மந்தாஸ்லேஷா த்விதியாஸ் ச விஷயோகா ஸ்திரி
-யோமதா'' | |

- சதய நக்ஷத்திரமும் துவாதசித் திதியும் ஞாயிற்றுக்கிழமையும் சேரும் தினத்திலும், விசாகம், சப்தமி திதி, செவ்வாய்க்கிழமை ஒன்றும் சேரும் நாளிலும், சனிக்கிழமை ஆயிலியம், துவி தியைத் திதி சேரும் போதும் பிறந்த பெண்ணும் மேற்படி யோகத்தையடைகிறாள்.

''தர்மஸ்தோ பூமி சூனுஸ் தனு சதனகத;
ஸௌர்ய சூனுஸ்ததானீம் |
மார்த்தாண்ட சூனுயாதள யதிஜனி சமயே
ஸா குமாரீ விஷாக்யா'' | |

- செவ்வாய் பாக்ய திரிகோணமான ஒன்பதிலிருந்து, சனி லக்கினத்திலும் சூரியன் 5-லும் இருக்கும் சமயம் பிறந்த பெண் விஷ யோகத்தைப் பெறுகிறுள்.

''பரண்யாம் பானுவாரேச சித்ராயாம் புத வாசரே |
குஜவாரேச விஸ்வர்க்ஷே வர்ஷயே புதவாசரே'' | |

- பரணி நக்ஷத்திரமும் ஞாயிறு வாரமும், சித்திரை நக்ஷத்திரமும் புதன்கிழமையும்,மூல நக்ஷத்திரமும் செவ்வாயும் சேர்ந்ததினத்தில் பிறந்த பெண்ணும்,

''ஜேஷ்டாயாம் குருவாரேச பூர்வாஷாடே
ப்ருகோர்த்தினே |
ரேவத்யாம் சனிவாரே ஸ்திர், ஜன்மஸ்யாத்
விஷாயிதம்'' | |

கேட்டை நக்ஷத்திரமும் வியாழக்கிழமையும், பூராடமும் வெள்ளிக்கிழமையும், ரேவதி நக்ஷத்திரமும், சனிக்கிழமையும் சேரும் தினத்தில் பிறந்த பெண்ணும் விஷயோகமாகிறுள். மேலும்,

லக்னுநிந்தோஸ் சுபோ வா யதி
மதன பதிர் த்யூனயாயி விஷாக்யா
தோஷஸ் சை வாணபத்யம் ததனு ச நியதம்
ஹந்தி வைதவ்ய தோஷம்
சித்தம் ஜ்னேயம் க்ருஹக்ஷைஸ் சுமதிபிரகிலம்
யோக ஜாதம் கிரஹாணும்
மானய ராக்யானுமத்யா மதமிககதிதம்
ஜாதகே ஜாதகானும்.

என்னும் சுலோகப்படி ஜன்மலக்னத்திற்கோ, சந்திரலக்னத்திற்கோ களத்திரஸ்தானுதிபதி 7-ம் இடத்தில் ஆதிபத்தியம் பெற்றுலும் விஷயோகமாகிறுள். எனினும் மேஷம். விருச்சிகலக்னமாக இருந்து சுக்கிரன் ஏழில் நின்றுலேயே இத்தோஷம் உண்டாகின்றது என்பதும் சிலர் அபிப்பிராயம். இத்தோஷம் காரணமாக புத்திரன் பிறக்காவிட்டால் அமங்கலி தோஷம் நீங்கி விடுகிறது.

இவ்விஷயத்தில் கணவன் ஜாதகத்தையும் நன்ருக ஆராய்ந்து, தோஷமிருப்பின் சர்ப்ப சாந்தி, நாகப்பிரதிஷ்டை, ஆயுஷ்ய சூக்த ஹோமம் செய்து ரக்ஷை (ஹோம சாம்பலும் நெய்யும் சேர்ந்த களிம்பு) அணிந்து கொண்டால் தோஷம் நீங்கும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மையாகும். இங்கு சொல்லப்பட்ட இத்தோஷங்கள் உண்டானபோதிலும்,

''குலக்ஷயம் சர்வ நாசம் பும் சாம் ஜன்மபவேத்தி
தாம் |
குருத்ருஷ்டியா நதோஷஸ்யாத் ஸ்வஸ்தான
பலஸ்யாதபி'. | |

மேலே கூறப்பட்ட விஷயோகங்களில் ஆண் பிறந்தாலும் விஷயோகம் ஏற்பட்டு தன்குலம், சுற்றம் இவற்றை அழிக்க காரணமாகிறுன். எனினும் குருபகவான் பலம் பெற்ருே, சேர்ந்தோ, நற்பார்வை பெற்ருலோ இத்தோஷம் நீங்கி நல்ல பலனேற்படுகிறது.

---

சந்தேக ... (51-ம் பக்கத் தொடர்ச்சி)

பதவி கிட்டுமென்று ஒரு கொள்கையுண்டு. அப்படியாயின் ஜவர்கலால் நேரு அவர்களின் சாதகத்தில் 10-ல் ஒரு கிரகமும் இருக்கவில்லையே. அவரின் சாதகம், லக்கினம், சந்திரன், கடகம், 2-ல் சனி, 3-ல் செவ்வாய், 4-ல் புதன், சுக்கிரன், 5-ல் சூரியன், 6-ல் குரு, கேது, 12-ல் ராகு. இதை விளக்குக.

நிவி: ஜவகரின் 10-ம் இடத்தை குரு, செவ்வாய், புதன் சுக்கிரன், ஆகிய நான்கு கிரகங்கள் பார்க்கின்றன. திருஷ்டி பலன் இருப்புப் பலனைவிட சில வேளைகளில் அதிகம் வேலை செய்கிறது. அவருக்கு இதைவிடக் கிரக மாலிகா யோகம் இருந்தது. பத்தாமிடம் சுத்தமாக இருந்து சுபதிருஷ்டி பெறுவது மிகவும் நல்லது.

கி. குருநாதன், கொடிகாமம்.

சந்: கேந்திரங்களில் கிரகங்கள் இருப்பது மிக்க சிறப்பெனப் பல நூல்கள் கூறுகின்றன. ஆனுல் பரீட்சித்துப் பார்க்குங்கால் கேந்திரத்தில் இருக்கும் கிரகங்கள் மிக்க கஷ்ட பலன்களைக் கொடுக்கிறதாகத் தெரிகிறது. காரணம் என்னவாக இருக்கலாம்.

நிவி: கேந்திரத்தில் இருக்கும் கிரகங்கள் பலம் மிக்கவை. நன்மை தீமை பற்றி அவ்வக் கிரகத்தின் ஆதிபத்தியம், இருப்பு இராசி, நட்சத்திர மித்திரத்துவத்தைப் பொறுத்தது, எந்தக் கிரகம் கேந்திரத்தில் இருக்கிறதோ அந்தக் கிரகத்தின் தெசை நடக்குங்கால் நல்லதோ கெட்டதோ பலன்கள் மிக்க பிரபல்யமாக, பிரசித்தமாக நடக்கும். மேற்கத்தைய சோதிட விதிகளின்படி இலக்கினத்திற்கு கேந்திர பார்வையில் இருக்கும் கிரகங்கள் மிகுந்த சிரமத்தின்மேல் பிரபல்யத்தைக் கொடுக்கும். கஷ்ட பலனே அதிகம்.

# காலக் கணக்கு ஏற்பட்ட வரலாறு

( மாத்தளை — அருணேசர் )

காலத்தை அளவிடும் முறையை முதன்முதல் பாரத நாட்டு முன்னோர்களே கண்டுபிடித்தார்கள் கணிதசாஸ்திரத்தில் வல்லுனர்களாயிருந்த அவர்கள் காலத்தை அளவுபடுத்தி நிர்ணயித்தமுறை மிக நுட்பமானது. மிகச்சிறிய அளவிலிருந்து தொடங்கி எண்ணுதற்கும் முடியாத மிகப்பெரிய அளவுவரை நிர்ணயப்படுத்தியுள்ளார்கள்.

ஆகச்சிறு கால அளவுக்கு சிட்டிகை என்று வழங்கப்பட்டது. நடுவிரலும் கட்டைவிரலும் சேர்ந்து பிரியும் போது ஏற்படும் ஓசையின் காலஅளவே சிட்டிகை எனப்படும்.

கைநொடி அல்லது கண்இமைக்கும் நேரம் கொண்ட இதனை மாத்திரை என்று கூறப்பட்டது. இச்சிறிய கால அளவுதான் விரிந்து விரிந்து யுகம் கல்பம் எனப் பன்மடங்காகப் பெருகுவதற்கு அடிப்படையாகி அமைந்தது. அத்தகைய கால வரையறையை பின்வருமாறு அளவுபடுத்தப் பட்டுள்ளது:-

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | சிட்டிகை | கொண்டது | 1 | நிமிடம் |
| 15 | நிமிடம் | ,, | 1 | காஷ்டை |
| 30 | காஷ்டை | ,, | 1 | கலை |
| 15 | கலை | ,, | 1 | நாழிகை |
| 30 | நாழிகை | ,, | 1 | முகூர்த்தம் |
| 30 | முகூர்த்தம் | ,, | 1 | நாள் |
| 7 | நாள் | ,, | 1 | வாரம் |
| 2 | வாரம் | ,, | 1 | பட்சம் |
| 2 | பட்சம் | ,, | 1 | மாதம் |
| 2 | மாதம் | ,, | 1 | ருது |
| 3 | ருது | ,, | 1 | அயனம் |
| 2 | அயனம் | ,, | 1 | ஆண்டு |
| 4320000 | ஆண்டு | ,, | 1 | சதுர்யுகம் |
| 4 | சதுர்யுகம் | ,, | 1 | கல்பம் அல்லது மகாயுகம் |
| 17 | கல்பங்கள் | ,, | 1 | மன்வந்தரம் |

இவ்வாறு 14 மன்வந்தரங்கள் முடிந்த பிறகு உலகம் நீரில் மூழ்கி அழிந்து, பிறகு மறுபடியும் படைக்கப்படும் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன.

மேற்கூறப்பட்ட கால அளவுகளைப் பின்பற்றியதே பிற்காலத்தவர்களின் காலக்கணிப்பு. வேத காலத்தில் ஒவ்வொரு நாளையும் நட்சத்திரங்களைக் கொண்டு கணக்கிட்டுவந்தார்கள். திதி அல்லது ஏழுநாள் கொண்ட வாரம் முதலியவை பற்றிய குறிப்புகள் இல்லை.

ஆனால் ஆறுநாள் கொண்ட வாரமுறை கையாளப்பட்டது. ரிக்வேத சுலோகங்களில் சூரியன், சந்திரன், சில நட்சத்திரங்கள், மாதங்கள், பருவங்கள் முதலியவைகளைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

ஆயினும், சோதிட முறையில் ஏழுகிரகங்கள் இருப்பது பண்டைக் காலந்தொட்டே அறியப்பட்டு வந்துள்ளது. அதனால் ஏழு கிரகங்களுக்கும் ஒரு நாளைக்கு ஒரு கிரகத்தின் ஆட்சியாக வைத்திருந்தார்கள். சப்த சாகரம், சப்த சைலம், சப்த கன்னிகை என்பன போல சுப எண்ணுகை சப்த கிரகங்கள் அமைந்தது மட்டுமல்லாமல், சோதிட முறையில் ஏற்கப்பட்டும் அமைக்கப்பட்டும் வந்தன. அதுவே ஏழு நாட்களுக்கும் பெயராயின.

ஏழு கிரகங்கள் என்பவை - சூரியன், சந்திரன் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பனவாகும், அவற்றின் வரிசைப்படியே சூரியனை ஞாயிற்றுக்குரிய நாளை ஞாயிற்றுக்கிழமை என்றும் சந்திரனை திங்களுக்குரிய நாளை திங்கட்கிழமை என்றும், அங்காரகனை செவ்வாய்க்குரிய நாளை செவ்வாய்க்கிழமை என்றும், புதன்கிரகத்துக்குரிய நாளை புதன்கிழமை என்றும், பிரகஸ்பதியான வியாழனுக்குரிய நாளை வியாழக்கிழமை என்றும் சுக்கிரனை வெள்ளிக்கிரகத்துக்குரிய நாளை வெள்ளிக்கிழமை என்றும், சனிக்கிரகத்துக்குரிய நாளை சனிக்கிழமை என்றும் வழங்கப்பட்டன.

பூமியிலிருந்து ஏழுகிரகங்களின் தூரம் எவ்வளவென சோதிட வல்லுநர்களால் முன்னரே

அறியப்பட்டிருந்தபடி அத்தூரத்தை ஒட்டி இப்படி வரிசைப்படுத்தப்பட்டன. அவ்வரிசைப்படியேதான் வாரநாட்களும் பெயர் அமைக்கப்பட்டுள்ளது. எனவே வார அமைப்பும் சோதிட அடிப்படையில்தான் அமைந்ததென்பது தெளிவாகிறது.

இந்துக்களிடமிருந்த இந்த வழக்கமே ஆதியிலே சுமேரியா, பாபிலோனியா, எகிப்து முதலான நாடுகளுக்கும் பரவியது. இதனை ஆராய்ச்சியாளர்கள் நன்கு நிரூபித்துள்ளனர். இதனையே கிரேக்கர்களும் உரோமர்களும் பின்பற்றினர்.

பழங்கால எகிப்தியர் 10 நாட்கள் கொண்ட வார முறையையே கையாண்டனர். பாபிலோனியரின் வாரமுறை ஏழு நாட்கள் கொண்டதாக அமைந்ததெனினும், மாத இறுதியில் வரும் வாரம் தேவைக்கேற்ற படி 8 அல்லது 9 நாள் கொண்டதாக இருந்ததெனத் தெரிகிறது. கி. மு. முதலாம் நூற்றாண்டுக்குப் பின்னரே ஏழுநாள் வார முறை ஒழுங்கு படுத்தப்பட்டுக் கையாளப்பட்டு வந்துள்ளது.

இந்துக்களின் வார, மாத அமைப்பின்படியே பாபிலோனியர் முதலானோரும் வாரத்தில் ஏழு நாட்களையும், மாதத்தில் 30 நாட்களையும், ஆண்டில் 365 நாட்களையும் அமைத்துக் கொண்டார்கள். கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் இந்துக்கள் இட்டுள்ள பெயர்களையே அவர்களும் வைத்துள்ளார்கள்.

சூரியன் முதலிய கிரகங்களை இந்துக்கள் தெய்வநிலையில் வணங்கியது போலவே கிரேக்கர், உரோமர்களும் அவற்றைத் தெய்வப் பெயர்களைக் கொண்டு வணங்கினார்கள். பண்டைக்காலத்து உரோமர்கள் மாதங்களுக்கு தங்கள் தெய்வங்களின் பெயர்களை வைத்தபடியே (மாறியும் மாறாமலும்) அவை இன்றும் ஆங்கில மாதங்களின் பெயர்களாக வழங்கிவருகின்றன.

இந்துக்கள் வருடங்களை அரசர்களின் ஆட்சி தொடக்க காலத்தை வைத்து சாலிவாகன சகாப்தம், விக்கிரம சகாப்தம், எனக் கணித்தனர். கிறிஸ்தவர்களின் ஆண்டு காலத்தை முதல் முதல் டையனீஸியர் எக்ஸிகியஸ் என்ற துறவி சுமார் 532 - ஆம் ஆண்டில் அமைத்தார். இது இத்தாலிக்கு 6 - ஆம நூற்றாண்டின கடைசியில் அறிமுகப்படுத்தப்பட்டு பாதிரியட்சகர்களின சபையில் கி. பி. 816-இல் ஏற்கக் கொள்ளும்படி கட்டளையிடப்பட்டது.

ஆனால் ஜெர்மனியின் மூன்றாவது சார்லஸ் மன்னன் '' நமது பிரபுவின் வருஷத்தில் '' என தமது பிரகடனங்கள் முதலியவற்றில் குறிப்பிடத் தொடங்கிய பின்புதான் இது பொதுவான உபயோகத்துக்கு வந்தது.

இவ்வாறாகத்தான் காலக்கணக்கு முன்னேறி வந்துள்ளது.

---

மதிப்புரை

## விக்னேஸ்வர மகோத்ஸவ பத்ததி

இந்துமத அடிப்படையாக அமைந்துள்ளவையே வேதாகமங்கள். இவ்வுலக, மறுவுலக வாழ்க்கைக்கு வழிவகுப்பனவும் இவையே அதிலும் ஆகமங்கள் பரார்த்தபூஜைகளைப் பிரதானமாக கொண்டவை. இவ்வாறு அமையப் பெற்றதே இந்நூலாகும். இதுவரைகாலமும் மகோத்சவ பத்ததி நூலுருவிலில்லாத குறையைப் போக்கியவர் பதிப்பாசிரியரான வித்தியாசாகர, நியாய சிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள். கொடியேற்றத்துக்கு வேண்டிய பூர்வாங்கக்கிரியைகள்யாவும் உரிய விதிமுறைப்படி சேர்க்கப்பட்டுள்ளன. நவசந்தி பூஜை, யாக பூஜை, தீர்த்தின சூர்ணோத்சவம், ஒரேபார்வையில் ஸ்பர்சாகுதி மூர்த்திகள் ஆகிய யாவும் அழகுற விளக்கமாக பதிக்கப்பட்டுள்ளன. ஆலய குருமாருக்கு மிகவும் சிறந்த ஒரு பொக்கிஷமாகும். தமிழ் நாட்டில் அழகுற அச்சிடுவித்த பெறுமதி அதிகமாயினும் யாவருக்கும் பயன் பெறும் வண்ணம் குறைந்த விலையில் வெளியிட்டுள்ளமை போற்றற்குரியது.

விலை ரூபா: 20/=
(தபாற் செலவு 2-50)

கிடைக்குமிடங்கள்:

(1) கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
93, கோவில் வீதி,
நல்லூர், — யாழ்ப்பாணம்.

(2) கி. சதாசிவ சர்மா
மட்டுவில், வடக்கு.
சாவகச்சேரி.

# நவக்கிரகங்களும் சாந்திகளும்

"பிரதிஷ்டா வித்தகர்", "சிவாகம ஞானசாகரம்"

**சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள்**

மட்டுவில், — சாவகச்சேரி.

உலகில் ஆண்டவன் படைப்பிலே எண்ணற்ற யோனி பேதங்களில் எத்தனையோ கோடி ஆன்மாக்கள் பிறந்து, வாழ்ந்து இறக்கின்றன. பிறப்பு, வாழ்வு. இறப்பு என்பவற்றிற்கு ஆண்டவன் ஓர் காலநிர்ணயத்தை ஆகமநூல்கள் மூலம் வடித்துள்ளான். அக்கால நிர்ணயத்தின் மூலம் ஆன்மாக்கள் இயங்கிக் கொண்டிருக்கிறன. இது ஆண்டவனின் பஞ்சகிருத்தியத்துள் அடங்குகின்றது. பஞ்சகிருத்தியத்தின்மூலம் ஆன்மாக்கள் ஆண்டவனால் படைக்கப்பட்டு, அவனருளால் காக்கப்பட்டு அவனருளுடனே மறைகின்றன. இவ்விதம் வாழுங்கால் ஆன்மாக்கள் செய்த நல்வினை, தீவினைகளின் பயனால் இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கின்றன. இந்த இன்பதுன்பங்கள் எல்லா ஆன்மாக்கட்கும் பொதுவானது. இவற்றில் பூவுலகில் பிறந்து மானிட ஜென்மத்திற்கு மட்டும் ஆறுவது அறிவாகிய பகுத்தறிவை இறைவன் கொடுத்துள்ளான். இதனால் மக்கள் நல்வினை, தீவினைகளை அறிந்து நற்கதியை அடைய முடிகிறது. ஒவ்வொரு மனிதனும் பூர்வ ஜென்ம பலன்களினால் இக ஜென்மத்தில் இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கின்றான். இந்த ஜென்மத்தில் அவன் நல்லவற்றைச் செய்தாலும், பூர்வீக ஜென்மபலன் காரணமாக துன்பங்கள் அவனைச் சோதிக்கச் செய்கின்றன. இதன்மூலம் மேலும் நல்லவனாகின்றான். அப்பர் சுவாமிகள் சமண அரசனால் துன்பப்பட்டதும்; மணிவாசகர் பாண்டியனால் வருத்தப்பட்டதும் இதற்கு ஓர் சான்றாகும். இவ்வாறான நாயன்மார் வாழ்விலும் பூர்வஜென்மபலன் மூலம் அவர்கள் வாழ்க்கை அமையப் பெற்றதும் இறைவன் நிர்ணயமே.



ஆண்டவன் தன் பஞ்சகிருத்திய நிலையிலே ஆன்மாக்களின் நல்வினை, தீவினைப்படி அவரவர்கட்கு நன்மை, தீமைகளைப் பகிர்ந்தளித்து உலகத்தைப் பரிபாலிக்க அட்டதிக்குப் பாலகர்களையும், சூரியன் முதலாகிய கிரகங்களையும் படைத்துள்ளான். இவற்றில் சூரியன் ஒளியைக் கொடுத்து உலகத்தைப் பரிபாலிக்கின்றான். சூரியனின் ஆஞ்ஞைப்படி அதன் கீழ் ஏனைய கிரகங்கள் அதன் ஒளியைப் பெற்று தங்கள் ஆஞ்ஞைப்படி ரட்சிக்கின்றன. ஒரு ஆன்மா பிறக்கும்போது கிரகங்கள் எவ்விடங்களில் சஞ்சரிக்கின்றனவோ அதற்கமைய அந்த ஆன்மாவின் காலநிர்ணயம் வகுக்கப்படுகிறது. அதை நாம் அறியும் நோக்கதுடனேயே ஆகமரீதியான சோதிடம் இறைவனால் அருளிச் செய்யப்பட்டது. இச் சோதிடத்தின் மூலம் ஆன்மாவுக்கு எவ்வாறான பலன்கள் எக்காலத்தில் நிகழும் என்பதை யூகித்து அறிகின்றோம். அப்பலன்களும் அவ்வான்மா பூர்வ ஜென்மத்தில் செய்த நல்வினை, தீவினைகளுக்கேற்பவே கிடைக்கிறது.

உலகில் மக்களாகிய எமக்கு மட்டுமே சோதிடத்தின்மூலம் எமது பாவபுண்ணியங்களையும், கிரகதோஷங்களையும் அறிய முடிகின்றது. இது போன்று ஏனைய ஜீவராசிக்கும் கிரகபலன்கள் நடைபெற்றாலும், பகுத்தறிவின்மையால் அவை

இதனை அறியமுடிவதில்லை. இவ்வாறு, ஆண்டவனால் நிர்ணயிக்கப்பட்ட சூரிய, சந்திரன் முதலான கிரகங்கள் எமது ஜாதகத்தில் சஞ்சரித்து எமது பாவ புண்ணியங்களுக்கேற்ப எமது பலன்களை நல்குகின்றன. தேவர்களாகிய இவர்களின் சேர்க்கைகளினால் எமக்கு நற்பலனும், சில காலங்களில் துன்பத்தோடு கூடிய கஷ்டபலனும் ஏற்படுகின்றன. இச்சந்தர்ப்பங்களில் நாம் மனம் தளராது, தன்னம்பிக்கையை இழக்காது எமது குல தெய்வங்களையும், நவக்கிரக தேவர்களையும் வழிபடவேண்டுமென புராணங்கள் நீதிநூல்கள், பகருகின்றன. "நல்லகுரு நாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல கொல்லவல்ல பொல்லா வினையறுக்க" எனும் நல்வாக்கும் இதனை வலியுறுத்துகிறது. நாம் கஷ்டம் ஏற்படும் போதுதான் கடவுளை நினைக்கின்றோம், சோதிடத்தைப் பார்க்கிறோம். மனிதனின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய துர்க்குணங்கள் நீங்கி நல்வாழ்வு வாழவே இடையில் கஷ்டங்களையும், துன்பங்களையும் கொடுத்து, அவனைச் சோதித்து நல்லவனுக்குவதே ஆண்டவனின் தெய்வீகத்தன்மை.

அத்தெய்வீகத் தன்மைக்கேற்ப நமது வாழ்வில் கிரகசேர்க்கைகளினால் ஏற்படுகின்ற துன்பங்களும், கஷ்டங்களும் நீங்கவும், நவக்கிரக தேவர்களுக்குப் பூஜைகளும், சாந்திகளும் ஆகமநூல்கள் மூலம் கூறப்படுகின்றன. நவக்கிரக சேர்க்கைகளும், தோஷங்களும் இறைவனைத்தவிர முப்பத்துமுக்கோடி தேவர்களையும், சாகாவரம்பெற்ற சூரபன்மன் முதலிய அசுரர்களையும் வருத்தியதாகப் புராணவரலாறுகள் கூறுகின்றன. இவர்களுக்கே இப்படியென்றால் என்றும் மாயையில் உழலும் எம்போன்ற மானிடர்களுக்கு எம்மாத்திரம். இவற்றின் தோஷங்கள் நீங்கவே ஆலயங்களில் நவக்கிரகங்களை வேதாகம ரீதியாக நமது முன்னோர்கள் ஸ்தாபித்திருக்கின்றார்கள்.

நவக்கிரக கோவில்களில் சூரியபகவான் கிழக்கு நோக்கி நடுவில்நின்று அருள்பாலிக்க அத்திருவருளினால் அவன் கிரண ஒளிமூலம் அக்கினி திக்கிலே மேற்குநோக்கிச் சந்திரனும், தெற்கே தெற்குநோக்கிச் செவ்வாயும், வடகிழக்கு மூலையிலே வடக்கு அல்லது கிழக்கு முகமாகப் புதனும், வடக்கே வடக்குமுகமாக வியாழபகவானும், கிழக்கே கிழக்குநோக்கிச் சுக்கிரனும், மேற்கே மேற்குநோக்கிச் சனீஸ்வரனும், தென்மேற்கு மூலையில் தென்முகமாக ராகுவும், வடமேற்கு மூலையில் கேதுவும் வீற்றிருந்து எம்மைப் பரிபாலிக்கிறார்கள். ஒவ்வொரு வாரமும் அந்தந்தக் கிரகங்களை வணங்கிவரின் தோஷங்கள் நீங்கப் பெறுகிறது. குறிப்பாக சனீஸ்வரதோஷம் நீங்க சனிக்கிழமை தோறும் விரதமிருந்து கிரகங்களை ஒன்பதுமுறை வலம்வந்து சனீஸ்வரனை எள் எண்ணெய்த் தீபம் ஏற்றி வணங்கிவரின் சனீஸ்வரதோஷம் விலகும். இவற்றிலும் விசேடமாக எல்லாக்கிரகங்களின் தோசமும் நீங்கி நற்பலன் பெற நவக்கிரக சாந்திகள் கூறப்படுகின்றன.

ஆலயத்திலே ஆண்டவனுக்குப் பூஜைசெய்து பூரணகும்பம் வைத்துப் பூஜித்து, அக்கும்பத்தை இறைவனுக்கு அபிஷேகித்து ஆராதனை செய்து உருவேறத் திருவேறும் என்ற ரீதியில் வணங்கி அவனருள் பெறுகின்றோம். அதுபோன்று நவக்கிரக தேவர்கட்கும் கும்பம்வைத்து பூஜித்து, இறைவனுக்கு நாக்காக விசேடித்துக் கூறப்படும் அக்கினிதேவனை மந்திரரூபமாக வளர்த்து அந்த ஹோமாக்கினியில் கிரகதேவர்கட்கும் பிரீதியான நிவேதனங்கள், சமித்துக்கள், தானியங்கள், பழவகைகள் என்பவற்றை ஹோமம் செய்து பூரண ஆகுதி கொடுத்துக் கிரகதேவர்கட்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தை கிரகதோஷமுடையவர்களுக்கு ஸ்நானம் செய்வித்தோ, புரோட்சணம் செய்தோ வழிபடின் கிரகதோஷங்கள் நீங்கப்பெறும். அத்துடன் கிரகதேவர்கட்குரிய நிறவஸ்திரங்களை அவரவருக்குரிய தானியங்களையும், தட்சணையுடன் தானமாக வழங்குவதனாலும் நோய், பிணி, என்பன நீங்கப்பெறுகின்றன. இவ்வகைச் சாந்திகள் மக்களுடைய வீட்டினிலே செய்வதற்கும் வேத நூல்கள் இடமளிக்கின்றன.

கிரகதேவர்களுடைய மண்டலங்கள் நிறங்கள், தானியங்கள், சமித்துவகைகள் என்பனபற்றி ஆராய்வோம்.

நவக்கிரகங்களில் நடுநாயகமாக விளங்கும் சூரியபகவான் வட்டவடிவ மண்டலத்தில் செந்தாமரை வண்ணத்தில் செம்பட்டாடை அணிந்து தாமரை மலரணிந்து அக்கினி, உருத்திரன் ஆகிய அதிதேவதை, பிரத்தியதி தேவதைகளுடன் கோதுமை தானியத்தையும், எருக்கலை சமித்தையும் பிரீதியாக ஏற்றருளுகிறார். தண்ணளியுடைய சந்திரன் அமிர்தஸ்வரரூபராய் சற்சதுரவடிவ மண்டலத்தில் வெண்ணிறவஸ்திரமணிந்து வெண் பூக்களணிந்து ஜலேஸ்வரன் அதிதேவதையாகவும் கௌரி பிரத்தியதி தேவதையாகவும் சூழ்ந்து

இருக்க அரிசியையும், பலாசம் சமித்தையும், ஏற்றருளுகிறார். மங்களகாரகன் செவ்வாய் முக்கோண வடிவினதாகிய மண்டலத்தில் சிவப்புநிற வஸ்திரமணிந்து, செந்நிறப் புஷ்பமணிந்து, பூமிதேவியும், ஷேத்திரபாலரும் அதிதேவதையாகவும், பிரத்தியதி தேவதையாகவும் சூழ்ந்துவர துவரை தானியத்தையும் கருங்காலிச் சமித்தையும் தமக்கு பிரீதியாக்கிக் கொள்கிறார். வித்தியாதிபதி புதன் பசுமை வண்ணத்தினராய் அம்பு வடிவான மண்டலத்தில் பச்சைப் பட்டணிந்து பச்சை, வில்வம் ஆகிய பத்திரங்கள் அணிந்து விஷ்ணுவும், நாரயணனும் பிரத்தியதி தேவதையாகப் புடைசூழ வீற்றிருந்து பயறு தானியத்தையும், நாயுருவி சமித்தையும் ஏற்றருள்கின்றார்.

குருமூர்த்தியாகிய வியாழன் நீள்சதுரவடிவ மண்டலத்தில் மஞ்சள் வடிவினராய் மஞ்சள்நிறப் பட்டணிந்து மஞ்சள்நிறப் புஷ்பமணிந்து, இந்திர மருத்துவனும், பிரமாவும், அதிதேவதை பிரத்தியதி தேவதையாகச் சூழ கடலைத் தானியத்தையும், அரசஞ்சமித்தையும் ஏற்கிறார். சுக்கிராச்சாரியரான வெள்ளி பகவான் பஞ்சகோண வடிவ மண்டலத்தில் வெண்பட்டாடையணிந்து, வெண்நிறப்பூவணிந்து, இந்திராணி அதிதேவதையாகவும் வீற்றிருக்கின்றார். துன்பத்தைக் கொடுத்து நல்லதைச் செய்யும் கிரகமாகிய சனீஸ்வரன் வில்வடிவ மண்டலத்தில் நீலநிற வஸ்திரமணிந்து நீலமலர்கள் அலங்கரிக்க யமன் அதிதேவதையாகவும், பிரஜாபதி பிரத்தியதி தேவதையாகவும் ஆள, காகவாகனத்தில் வீற்றிருந்து பக்தர்களின் இடர்தீர்த்தருள்கின்றார். எள்ளையும், வன்னிச் சமித்தையும் வேள்வி மூலம் ஏற்கிறார். சாயாக் கிரகங்களிலொன்றாகிய ராகு பகவான் சுளகு வடிவினராகி மண்டலத்தில் புகைவடிவினராய் புகைநிறவஸ்திரமணிந்து, கருமைநிறப் புஷ்பங்களுடன் உழுந்து தானியத்தையும், அறுகு சமித்தையும் பிரீதியாக ஏற்றருள்செய்கிறார், இவருக்குத் துர்க்கை அதிதேவதையாகவும், சர்ப்பராஜன் பிரத்தியதிதேவதையாகவும் அமையச் சர்ப்பதோஷங்களை நிவிர்த்தி பண்ணுகிறார். சித்திர குணங்களுடைய கேது பகவான் கொடிவடிவினதாகிய மண்டலத்தில் வீற்றிருந்து பலநிறப்பட்டாடையணிந்து. பலநிறப்புஷ்பங்களோடு, சித்திரகுப்தனை அதிதேவதையாகவும், பிரமன் பிரத்தியதி தேவதையாகவும், சுழ தர்ப்பையைச் சமித்தாகவும், கொள்ளைத் தானியமாகவும் ஏற்கிறார்.

இவ்வண்ணம் திருவருள் பாலிக்கும் கிரகங்களை வழிபாடுசெய்வதனால் மனிதனின் இருளாட்சி நீங்கி அருளாட்சி கிடைக்கிறது. சாந்தி என்பது கிரகதோஷங்கள் நீங்க கிரகங்களுக்கு பூஜை, ஹோமம் என்பன செய்து கிரகதேவர்களைச் சாந்திப்படுத்துவதே! ஆண்டவனின் வழிபாடே ஆன்மாவுக்கு நிறைந்த சாந்தியாகும். இவ்விதமாக சாந்திகள்மூலம் கிரகதோஷம் நீங்கி நல்வாழ்வு வாழ்வோமாக.

## சேவலும் மயிலும்

முருகக்கடவுளின் கொடியில் சேவலும் அடியில் வாகனமாக மயிலும் இருக்கிறது. ஏன் மயில் கொடியிலும் சேவல் வாகனமாகவும் இருந்திருக்கக் கூடாது என்ற கேள்வி எழுந்தால் அதுவும் நியாயமே.

ஜாதக அலங்காரம் என்னும் சோதிட நூலில் இதற்கு ஒரு அருமையான காரணம் கூறப்பட்டுள்ளது. மயில் எப்போதும் மழை இருளைக்கண்டு மகிழ்ச்சிகொண்டு ஆடுவது. சேவலோ இரவு அதாவது இருள் அகலவேண்டும் என்று ஆதவனைக் கூவி அழைப்பது.

அறியாமை, ஆணவம், உலகபோகங்கள் என்று கூறப்படும் இருளை அடிமைப்படுத்தி, பேரின்ப ஒளியை நினைந்து ஆன்மாக்கள் வீட்டின்பத்தை அடைய வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தும் தத்துவமாகவே தான் மயிலை முருகன் தனது வாகனமாகக் காலடியிலும், சேவலைக் கொடியாக தனது முடிக்கு மேலேயும் உயர்த்தினர் என்று ஜாதகாலங்கார உரையாசிரியர் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளது மிகவும் உன்னதமான ஒரு கருத்தாகும்.

தகவல்:
அகளங்கன்

கணித சுத்தமும் நுட்பமும் உடையது
திருக்கணித பஞ்சாங்கம்

சிறந்த ரகம்! நிதான விலை!

## கண்கவர் வர்ணங்கள்

★ வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிடவைத் தினுசுகளும்

★ உள்நாட்டுப் பிடவைத் தினுசுகளும்

★ றெடிமேட் ஆடைகளும்

★ சிறுவர்களுக்கேற்ற றெடிமேட் உடைகளும்

மலிவு விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

# சித்ரா ரெக்ஸ்ரைல்ஸ்

159, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி,
**யாழ்ப்பாணம்.**

# பிறநாட்டுப் பிரயாணம்

அ. சிவசுப்பிரமணியம் B. A, (Lond)
மல்லாகம்

பண்டைக் காலத்தில் பிறநாட்டுப் பிரயாணம் மிக ஆபத்துக்கள் நிறைந்ததும், நீண்டு சுவாரசியமில்லாததும், அதிக செலவு உடையதாயும் அமைந்தமையால், துணிகரச் செயல்களில் பேராற்றல் பெற்ற ஒரு சில வீரரே தம் உயிரைப் பயணம் வைத்து ''திரை கடல் ஓடித் திரவியந் தேட முற்பட்டனர்''. மனிதனின் விவேக சிந்தனையில் உருவான அறிவுக் கருவூலங்களின் பயனாக 'நீராவி சகாப்தம்', 'ஆகாயவிமான சகாப்தம்' 'ஜெட் சகாப்தம்' ஆகியன ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றிப் படிப்படியாக காலத்தையும் தூரத்தையும், உலகத்தையும் சுருங்கச் செய்துவிட்டன. இன்று 'ரொக்கட் சகாப்தம்' பரிணமித்து சந்திரமண்டலப் பிரயாணத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இன்று சனத்தொகை பெருகி வரும் பூமியை விட்டுச் சந்திரனில் குடியேற்றத் திட்டம் அமைக்கவும், அங்குள்ள மிகவும் விலை உயர்ந்த கனிப் பொருட்களைக் கைப்பற்றி வியாபாரம் செய்யவும் வல்லரசுகள் போட்டியிடுகின்றன. இந்நிலையில் பொருளாதாரத் துறையில் பெரிதும் பின்தங்கிய வறிய நாடுகளில் கல்விக் கொள்கையால் ஏற்பட்ட அதிருப்தி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, வாழ்க்கைக்கேற்ற வருமானமின்மை, இசைவான தொழில் வாய்ப்பின்மை, நிலமின்மை, ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டு அதிருப்தி அடைந்த இளைஞர்கள் அந்நிய நாடுகளில் சிறப்பான நல்ல வேலை வாய்ப்புகளும், மிகத் தாராளமான ஊதியங்களும், சிறந்த சலுகைகளும் பெறக்கூடிய நல்ல சந்தர்ப்பங்கள் இன்று ஏற்பட்டுள்ளதைக் கண்டு ''பிறநாட்டுப் பிரயாண மோகம்'' கொண்டுள்ளனர். இன்று ஜோதிடம் பார்க்கும் ஆவலை 'பிறநாட்டுப் பிரயாணம்' தூண்டியளவுக்கு வேறு எந்த விஷயமும் நம் இளைஞர்களைத் தூண்டவில்லை. ஆகவே, ''பிறநாட்டுப் பிரயாண வாய்ப்பு'' தங்கள் ஜாதக அமைப்பில் உண்டா என்பதைச் சுலபமாக ஆராய்ந்து நிச்சயமாக நிர்ணயிக்கக்கூடிய முறையை இச் சிறு கட்டுரையில் ஓரளவு மிகச் சுருக்கமாகக் கூறி விளக்க முற்பட்டுள்ளேன்.

பிறநாட்டுப் பிரயாணத்தைப் பற்றி நாம் ஆராய மூன்று முக்கிய விஷயங்களைப் பற்றிய விபரங்களை அறிந்திருத்தல் வேண்டும். அவையாவன:- (1) பிரயாணத்தை ஏற்படுத்தும் வீடுகளும், அவற்றின் அதிபதிகளும். (2) பிரயாணத்திற்குச் சாதகமான ராசிகள் (3) பிரயாணக் காரகக் கிரகங்கள். முதலாவதாக நாம் பிரயாணத்தை ஏற்படுத்தும் வீடுகளைப் பற்றியும் அவற்றின் அதிபதிகளைப் பற்றியும் ஆராய்வோம். பொதுவாக, பிரயாணத்தைக் குறிக்கும் வீடுகளைப் பற்றி சில நுண்ணிய மாறுபாடுகளை — ஆனால் பலமுள்ள அறிவுறுத்தல்களை — சில சோதிடம் கண்ட பெரியார்கள் கூறியிருப்பினும்; சகலரும் 12-ம் வீட்டுக்கே அதிக ஆதிக்கம் கொடுத்துள்ளனர். 'பிரயாணம் செய்தல்' என்பது வீட்டில் இருந்து கிளம்பல். 'பிறநாட்டுப் பிரயாணம் செய்தல்' என்பது சொந்த நாட்டின் எல்லைப் புறத்தைக் கடந்து அப்பால் செல்லல். ஒரு ஜாதகத்தில் ஜன்ம லக்கினம் சுதேச வாசத்தைக் காட்டும். லக்கினத்திற்கு 12-ம் வீடு சுதேச வாசத்தின் நட்டத்தை ஏற்படுத்துகின்றது. ஆகவே 12-ம் வீடு இலாபகரமான பிறநாட்டு வாசத்தை மறைமுகமாகத் தருகிறது. 3-ம், 7-ம், 9-ம், 10-ம், 12-ம் வீடுகள் பிறநாட்டுப் பிரயாணத்தைத் தரக்கூடிய முக்கிய வீடுகள் என அறிக. 4-ம் வீடு ஜாதகரின் நிரந்தரமான இனிய வாசஸ்தலத்தைக் குறிக்கும். பராக்கிரமம், காரிய பூர்த்தி, ஜயம் ஆகியவற்றைக் குறிக்கும் 3-ம் வீடு, நிரந்தர இல்லத்தைக் குறிக்கும் 4-ம் வீட்டுக்கு (நட்டத்தானமாக) 12-ம் வீடாக வருவதால், 3-ம் வீடு பிற நாட்டுப் பிரயாணத்தைக் குறிப்பது சுலபமாகப் புலப்படும். இப் பிறநாட்டுப் பிரயாணம் பொதுவாக உல்லாசப் பொழுது போக்குக்காகவோ அன்றேல் அறிவு விருத்திக்காகவோ செய்யப்படும் குறுகியகாலப் பிரயாணம் என்பதே பராசரர், காளிதாசர் ஆகியோரின் கூற்றும், மேல்நாட்டு ஜோதிடர்களின்

அபிப்பிராயமும் ஆகும். விவாகம், வியாபாரம், அந்நிய தேசவாசம் ஆகியவற்றைக் குறிக்கும் பிரபல தொழில் ஸ்தானமான (10க்கு 10-ம் இடம்) 7-ம் வீடு சாதாரண வெளி நாட்டுப் பிரயாணத்தையும், சில காலம் அங்கு தங்கி இருக்கும் நிலையையும் ஏற்படுத்துமெனப் பராசரர், காளிதாசர், வைத்தியநாத பண்டிதர், சத்தியாச் சாரியார், ஆகிய பெரியார்கள் பகர்ந்துள்ளனர். 7-ம் வீடு 4-ம் வீட்டுக்கு 4-ம் வீடு. லக்கினத்திற்கு எதிரியான வீடு. இவை தற்காலிக நகர்தலையும் நிரந்தரமில்லாத வாசத்தையும் காட்டும்.

பாக்கியம், அதிருஷ்டம், தேவத பக்தி, தர்மம் ஆகியவற்றைக் குறிக்கும் 9-ம் வீடு 3-ம் வீட்டுக்கு எதிரிடையான வீடு. அது அருட் செல்வத்தோடு பொருட் செல்வத்தை ஏற்படுத்துவதால், அது புண்ணியஸ்தல யாத்திரைகளையும் ஜீவனோபாயத்திற்குப் பொருள் சம்பாதித்தல், சமய, கலாச்சார போதனை, பிரசாரம், பிரசங்கம் ஆகியன செய்யச் செல்லல் ஆகியவற்றைக் குறிக்கும். 9-ம் வீடு நீண்டகாலப் பிரயாணத்தைக் குறிக்குமென பராசரர், காளிதாசர் ஆகியோர் கூறியுள்ளனர். 10-ம் வீடு, 4-ம் வீட்டுக்கு எதிரிடையாக அமைவதைக் காண்க. 10-ம் வீடு பிற நாட்டுப் பிரயாணத்தையும் அங்கு சில கால வாசத்தையும் குறிக்குமென பராசரர் பகர்ந்துள்ளார். 10-ம் வீடு முக்கியமாக கர்மம், வியாபாரம், இராஜ்ஜிய விஷயங்கள் ஆகியவற்றைக் குறிப்பதால் ஷெ விஷயங்களுக்காகவே பிரயாணங்களை ஏற்படுத்தும். 10-ம் வீடு முக்கியமாகப் பிரயாணத்தைக் குறிக்கும் 12-ம் வீட்டுக்கு 11-ம் வீடாக (லாப வீடாக) அமைவதால், சகல பிரயாணங்களுக்கும் அது மிகப் பலம் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும். அது வலுப் பெற்றிருந்தால் அரசாங்கங்களிடமிருந்தோ, தனிப்பட்ட ஸ்தாபனங்களிடமிருந்தோ நல்ல ஆதரவுகளையும் உபகாரங்களையும் சம்பளச் சலுகைகளையும் (Scholarship) விசாக்களையும், வேண்டிய அனுமதிகளையும் கஷ்டநஷ்டமின்றி நேரகாலத்தில் பெற்று தமது பிரயாணத்தை இன்பகரமானதாகவும், இலாபகரமானதாகவும் ஆக்கிக் கொள்ளலாம். 10-ம் அதிபதி கெட்டால் சகலதும் மாறுபடும். ஆகவே 10-ம் வீட்டு அதிபதி முக்கிய பிரயாணக் கிரகங்களான 1-ம் 7-ம், 9-ம் அதிபதிகளுடன் சம்பந்தம் பெற்றுப் பாபர் சம்பந்தம் இன்றி, இஷ்ட ஸ்தானங்களான கேந்திர கோணங்களில் (சிறப்பாகச் சர ராசிகளில்) உச்ச ஆட்சி நட்புஸ்திதிகளில் நிற்பதே 'இராஜயோகத்தோடு' கூடிய "பிரயாண யோகத்தை" நல்கும். 10-ம் வீட்டில் ராகு, சந்திரன் பலமாக இணைந்து நின்றால் தீர்த்த யாத்திரை ஏற்படும். 9-ம் வீடு சர ராசியாக அமைய, சனி புதன் அங்கு இருக்க, 10-ம் அதிபதியும் அவர்களுடன் ஒன்று சேர்வரேல் ஜாதகர் ஓர் துறவியாகப் பிறநாட்டில் அலைந்து திரிவாரென்று 'பாஸ்கர பாவ தீபிகை' பகர்கிறது. 12-ம் வீடு, நம் வாசஸ்தானமான 4-ம் வீட்டுக்கு 9-ம் வீடாகவும், பாக்கியம், அதிஷ்டம் ஆகியவற்றைக் குறிக்கும் 9-ம் வீட்டுக்கு 4-ம் வீடாகவும் அமைவதைக் காண்க. 12-ம் வீடு நீண்ட தூரதேசப் பிரயாணத்தையும், கப்பல் மார்க்க வியாபாரத்தையும், அந்நிய தேசத்தில் உத்தியோகம், அந்நியதேச நிரந்தரவாசம் (சிலசமயம்) கல்வி பயிலல் ஆகியவற்றையும் பெரும்பாலும் குறிக்கும். 12-ம் அதிபதி பாபர் சம்பந்தம் பெற்று நிற்க, 12-ல் பாபர்களின் திருஷ்டியைப் பெற்ற பாபக்கிரகம் நிற்பரேல், ஜாதகர் தன் சுதேச வாசத்தை விடுத்து அந்நிய தேச வாசத்தையே மேற்கொள்வரென்றும், அதனால் அதிக பணச் செலவு, அலைச்சல் ஆகியன ஏற்படக்கூடுமென்றும், இவை யாவும் சுபக்கிரகமாக அமைந்தால் அவர் பிறநாடு செல்லாது தனது தேசத்திலேயே அடிக்கடி இன்பகரமாகப் பிரயாணம் செய்வாரென்றும், பராசரர் பகர்ந்துள்ளார். 12-ல் புதனோ, ராகுவோ நின்றால் பெரும்பாலும் பிற நாட்டுப் பிரயாணம் ஏற்படும். சில சமயங்களில் பாபக் கிரகங்களான சனி, செவ்வாய், ராகு, கேது ஆகியோரில் எவரேனும் 4-ம் வீட்டில் நின்றால் அந்நிய தேசப் பிரயாணம் ஏற்படக்கூடும். இவர்களில் இருவரோ அன்றேல் இருவருக்கு மேற்பட்டவர்கள் அங்கு நிற்கில் கண்டிதமாகப் பிற நாட்டுப் பிரயாணம் ஏற்படும் என்க.

இலக்கினாதிபதி இருக்கும் வீட்டுக்கு 12-ம் வீட்டைக் கொண்டும் பிறநாட்டுப் பிரயாணம் கூறவேண்டுமென வைத்தியநாத பண்டிதர் தனது 'ஜாதக பாரிஜாதம்' என்னும் சோதிடக் கிரந்தத்தில் கூறியுள்ளார். அவரின் விஷயச் சுருக்கம் பின் வருமாறு:- (1) லக்கினாதிபதி இருக்கும் வீட்டுக்கு 12-ல் இருக்கும் கிரகம் உச்ச ஆட்சி நட்பு ஸ்திதிகளில் இருந்தாலும், அன்றேல் உச்ச ஆட்சி நட்பு ஸ்திதிகளிலுள்ள மித்துரு கிரகத்தால் திருஷ்டிக்கப் பட்டாலும், ஜாதகர் பிறநாடு செல்லாது தன சொந்த நாட்டிலேயே வாழ்வார். (2) லக்கினாதிபதி இருக்கும் வீட்டுக்கு 12-ல் இருக்கும்

கிரகம், லக்கினுதிபதியின் சத்துருவானுலும் அன்றேல் நீசமாகவோ பலம் குன்றியோ இருந்தாலும் ஜாதகர் நிச்சயமாகப் பிறநாடு செல்வர். இந்நிலையில் அவரைச் சுக்கிரன் மித்திரனை நிலையில் நின்று திருஷ்டிப்பரேல் அவர் நிரந்தரமாக அந்த அந்நிய தேசத்திலேயே வாழ்வார். (3) லக்கினுதிபதி இருக்கும் ராசிக்கு 12-ம் வீட்டுக்குடையவர் இஷ்ட ஸ்தானங்களான லக்கின கேந்திர கோணங்களில் உச்ச ஆட்சி ஸ்திதிகளில் நின்று சுபர்களால் திருஷ்டிக்கப்பட்டாலும் அன்றேல் அவருக்கு இரு புறமும் சுபக்கோள்கள் நின்றுலும்; ஜாதகரின் பிறநாட்டுப் பிரயாணம் மனேகரமானதாக அமையுமென்றும், இந்நிலையில் ஷெ கிரகத்தைச் சந்திரன், சுக்கிரன், வியாழன் திருஷ்டிப்பரேல் கவர்ச்சியான அழகிய நகரத்திலேயே அவர் தங்கியிருப்பர்.

இனி நாம் பிரயாணத்திற்குச் சாதகமான ராசிகளைப்பற்றி ஆராய்வாம், மேடம், மகரம், கர்க்கடகம், துலாம் ஆகிய நான்கு ராசிகளும். சர ராசிகள் [Movable = நகர்தல்]. சிங்கம், இடபம், விருச்சிகம், கும்பம் ஆகிய நான்குராசிகளும் 'ஸ்திர ராசிகள்' [Fixed - நகரார்த]. தனுசு, கன்னி, மீனம், மிதுனம், ஆகிய நான்கும் 'உபய ராசிகள் [Common - நகர்தலும், நகர்தலின்மையும்]. மேற்கூறிய ஒவ்வொரு பிரிவுகளிலும் முதலாவதாக வரும் ராசி பஞ்சபூதத்தில் அக்கினி தத்துவத்தையும்', இரண்டாவதாக வரும் ராசி 'நிலத்தையும்' மூன்றுவதாக வரும் ராசி 'நீரையும் நான்காவதாக வரும் ராசி 'வாயுவையும்' குறிக்கும் என்பர். இந்தராசிகளின் தன்மைகளையும், இந்த ராசிகளில் இருக்கும் கிரகங்களின் தன்மைகளையும், இவர்களைத் திருஷ்டிக்கும் கிரகங்களின் தன்மைகளையும், ஆராய்ந்து ஜாதகருக்குப் பிரயாண யோகம் உண்டா என்பதை அறியலாம். மேலும், பிரயாணம் உண்டெனில், அவர் பிரயாணம் செய்யும் மார்க்கம், திக்கு, செல்லும் தேசத்தின் சீதோஷ்ண நிலை தேசச்சிறப்பு, பிரயாணத்தால், ஏற்படும் இலாப நட்டம், பிறநாட்டுச் சீவிய காலம், சந்தோஷ-துக்கம், யோகபலன் ஆகிய பல முக்கிய விஷயங்களைக்கன்டு அறியலாம். உதாரணமாக துலா லக்கினத்தில் ஜனனமான ஒருவருக்கு லக்கினத்தில் சந்திரனும் புதனும், 4-ல் செவ்வாய், 5-ல் வியாழன். 7-ல் சூரியன் 9-ல் சுக்கிரன் ஆகிய கிரக நிலை இருப்பதாக வைத்துக்கொள்வோம். பிரயாணத்தைத் தரவல்ல 9-ம், 12-ம் வீட்டு அதிபதியாகவும், பிரயாணக்காரகக் கிரகமாகவும் வரும் புதன் லக்கினுதிபதியான சுக்கிரனுடன் பரிவர்த்தனம் பெற்று லக்கினமாக வரும் வாயு தத்துவ சர ராசியான துலாத்தில் 10-ம் அதிபதியும் பிரயாணக்காரகக்கிரகமுமான பட்சபலமுள்ள சந்திரனுடன் கூடி இருப்பதால் பிரயாண யோகமும், ''லட்சுமியோகமும்'' ''தர்மகர்மாதிபதி யோகம் ஏற்படுவது உற்றுநோக்கத்தக்கது. மேலும், பிரயாணத்தை ஏற்படுத்தும் அக்கினி தத்துவ சர ராசியான 7-ம் வீட்டில் உச்சச் சூரியனும், சூரியன் இருக்கும் ராசி அதிபதியான செவ்வாய் வேறொரு சர ராசியை அலங்கரித்து, 'ருசக யோகத்தையும், 'பிரயாணத்தையும்' ஏற்படுத்துவதும், லக்கினுதிபதிக்கு 12-ம் வீட்டு அதிபதியாய் சுக்கிரனே வந்து பிரபல திரிகோண ஸ்தானமான 9-ல் நின்று, குரு திருஷ்டி பெற்று பிரயாண யோகத்தை ஏற்படுத்துவதும் மிகச் சிறப்பான அம்சங்கள். இவருக்கு புதன், சூரியன், சந்திரன், சுக்கிரன், செவ்வாய் ஆகியோரின் தசைகளில் பிரயாண யோகங்கள் ஏற்படும். இவர் பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் ராஜ ஸ்தானிகராக வாழ்வார். இயற்கைக் காட்சிகளையும் கவர்ச்சி மிகுந்த அழகிய நாடுகளின் நகரங்களையும் பார்க்கும் உலக சஞ்சாரியாவார், பிரயாண யோகத்துடன் ''தன யோகமும்'', 'இராஜ யோகமும்' இணைந்திருப்பதைக் காண்க. அவர் சூரிய, சந்திர, சுக்கிர, புதன் தசைகளில் ஆகாய மார்க்கமாகவே பிரயாணம் செய்வார். வாயு கிரக சம்பந்தத்தால் இது ஏற்படுகிறது. புதன், சந்திரன் தசையில் குளிர்ந்த பிரதேசங்களிலும், சூரிய, செவ்வாய் தசைகளில் உஷ்ணப் பிரதேசங்களிலும் சுகபோகங்களோடு கூடிய மாடமாளிகைகளில் நல்வாழ்வு வாழ்வார். பெரும் புகழும் செல்வமும் எய்துவார். இவரின் பிரயாணங்களும் வாழ்வும் உபத்திரவங்களைச் சற்றும் கொடாது நல்ல அதிருஷ்டத்தையும், சந்தோஷத்தையுமே என்றும் ஏற்படுத்தும். இவரின் சூரியன் கிழக்கு தேசத்திற்கும், சந்திரன் வடமேற்கிற்கும், புதன் வடக்கிற்கும், சுக்கிரன் தென் கிழக்குக்கும் செவ்வாய் தெற்குக்கும் கொண்டு செல்லும்.

பிரயாணத்தை ஏற்படுத்தும் வீடுகளின் அதிபதிகள் லக்னுதிபதிக்கு பகைவராகாமலும், பாபர்களால் திருஷ்டிக்கப்படாமலும் சர ராசிகளில் ஒன்றில் உச்ச ஸ்வசேத்திர மித்திரஸ்திதியில்

நின்று அதை அலங்கரிப்பரேல் பிற நாட்டுப் பிரயாணம் தங்கு தடையின்றி வெகு விரைவில், அக்கிரக தசை ஆரம்பகாலத்தில், கண்டிதமாக ஏற்படும். இந் நிலையில் மேற்கூறிய சர ராசி இஷ்டஸ்தானங்களான லக்கின கேந்திர கோணங்களாக அமையப் பெற்று, பிரயாணக் காரகக் கிரகங்களான சந்திரன், சுக்கிரன், புதன் ஆகியோராலோ அன்றேல் வியாழனாலோ திருஷ்டிக் கப்படின் 'பிரயாணயோகம்' ஏற்பட்டு மனோரம்மியமான பிரதேசத்திற்குச் சென்று நல்வாழ்வு வாழ்வாரென்றும், இப்பிரயாண யோகத்துடன் 'தனயோகமோ' அன்றேல் 'இராஜயோகமோ' இணைந்து காணப்படின், இவை ஜாதகரின் யோக பலத்தை மகோன்னத நிலைக்கு உயர்த்தி ஜொலிக்கச் செய்து சவுக்கியாதிக்கம், ராஜஸன்மானம், மிகுந்த ஐசுவரியம், கீர்த்தி ஆகியவற்றை நல்கும். பிரயாணத்தை ஏற்படுத்தும் வீடுகளின் அதிபதிகள் உபய ராசிகளில் இருப்பரேல் இங்கு மங்கும் தங்கு தடைகள், தாமதங்கள், செலவுகள். ஆகியன அனேகமாக ஏற்பட்டே பிரயாணம் சித்திக்குமென்றும், அவற்றின் ஏற்ற தாழ்வு சுப திருஷ்டியின் வலிமையைப் பொறுத்ததென்றும், ஷெ அதிபதிகள் ஸ்திர ராசிகளில் நிற்பரேல் சில சமயங்களில் உபய ராசிக்குக் கூடிய பலன்களே கிட்டுமென்றும், ஆனால் பெரும் பாலும் மிக நீண்டகால தாமதத்தின் பின்னர் அதிக பணச் செலவோடு கூடிய கடும் பிரயாசையால் பிரயாணம் சில சமயம் வாய்க்கக்கூடுமென்றோ அன்றேல் நேரிடாமற்போகவும் கூடுமென்றோ கூறற்பாலதாம். பொதுவாக, சர ராசியில் ஜனனமானவர்களுக்கே பிற நாட்டுப் பிரயாணம் பெரும்பாலும் சித்திக்கும். சர ராசி லக்னமாக அமைந்து, லக்கினாதிபதி சர ராசிகளில் சஞ்சரிக்க, லக்கினத்தைச் சர ராசியிலிருக்கும் கிரகம் திருஷ்டித்தால் கண்டிதமாகப் பிற நாட்டுப் பிரயாணம் ஏற்படும். லக்கினாதிபதி 7 லோ அன்றேல் 8 லோ நின்றால் பிறநாட்டுப் பிரயாணம் ஏற்படும் என்பர்.

'சருவார்த்த சிந்தாமணி' என்ற சோதிட கிரகத்தின்படி மிக வேகமாகச் செல்லும் கிரகங்களான சந்திரன், புதன், சுக்கிரன் ஆகிய மூவரும் சரக்கிரகங்களென்றும் தெரியவருகிறது. 'உத்தரகலாமிர்தம்' என்னும் சோதிட கிரந்தம் ராகுவுக்கும் பிரயாண காரகத்துவத்தை நல்குகிறது. இது அனுபவத்திற்கும் சரியாகக் காணப்படுகிறது. பொதுவாக ராகு 3-ம், 4-ம், 9-ம், 10-ம், 12-ம் வீடுகளில் நிற்கும் பொழுது பிரயாணத்தை ஏற்படுத்துகிறார். ஆனால் கல்வி, ஞானம், தெய்வானுகூலியம், சன்மார்க்க நடத்தை, செல்வச் சேர்க்கை ஆகியவற்றிற்கு உருக் கொடுத்து சுபத்தையும் நன்மையையும் செய்வதையே தனது பிரத்தியேக உருத்தாகப் பெற்ற தேவகுருவாகிய வியாழனும், ஜீவனம், தொழில் ஈடுபாடு, கடும்பிரயாசை, சகிப்புத் தன்மை, துக்கம், சுகக்கேடு, தாமதம், தங்கு தடை ஆகியவற்றிற்கு உருக்கொடுத்துத் தன் மாபெரும் சக்தியால் ஒருவரின் கருமவினைக்கேற்றவாறு ஆக்கியும் அழித்தும் கருமம் ஆற்றும் சனிபகவானும் மந்தகெதியுடையவராகையால், அவர்களுக்கு பிரயாணயோகங்களை ஏற்படுத்தும் கிரக சேர்க்கைகளில் அவர்கள் முக்கிய இடம் பெறுவதை நாம் காணமுடிகிறது. பொதுவாக வியாழன் சிறப்பான பலன்களையும், சனி சலன பலன்களையும் தருவர். வியாழன் 7-ம், 8-ம் வீடுகளிலும், சனி 4-ம், 7-ம். 10-ம் வீடுகளிலும் நின்றால் பிறநாட்டுப் பிரயாணத்தை ஏற்படுத்துவர் என்பர். சனிகோசர சஞ்சாரத்தில் சந்திரலக்னத்துக்கு ஊடாகச் செல்லும் பொழுது (ஜென்மச்சனி) பிறநாட்டுப்பிரயாணத்தை சில சமயங்களில் தருவது கண்கூடு. பிறநாட்டுப் பிரயாணம் ஆரம்பிக்கும் பொழுது தாராபலம், குருபலம், யாத்திர சூலம் ஆகியவற்றைக் கவனித்தே பிரயாணத்தை நாம் மேற்கொள்ளவேண்டும். மேல் நாட்டு ஜோதிடர்கள் வியாழன், இயற்கைக் காட்சிகளைப்பார்த்து ரசிக்கும் உலக சஞ்சாரியாக மனிதனை ஆக்கும் எனக் கூறுகின்றனர். ஆகவே குரு பலம் எமக்கு வேண்டற்பாலதாம்.

★

### முக்கிய குறிப்பு

கட்டுரையாளர்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ள விரும்பும் வாசக நேயர்கள் சுய விலாசமிடப்பட்ட முத்திரையிட்ட தபால் உறைகளை அனுப்ப வேண்டும். அன்றேல் அக் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

ஆ—ர்

# அங்கலக்ஷணக் குறி அனுமானங்கள்

பே. சுப்ரமண்யன் செட்டியார்
நீராவியடி

உலகில் மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும் தன்னுடைய எதிர்காலம் எவ்விதம் இருக்குமென்பதை அறிய ஆவல் உள்ளவனுக இருக்கிறுன். தான் மணக்கும் பெண், அல்லது கூட்டு வியாபாரம் செய்யப்போகும் பங்காளி தனக்குப் பொருத்தமானவர்தானு என்பதை முன்கூட்டியே அறிய விரும்புகிறுன். இந்த ஆவலைப் பூர்த்தி செய்யவே ஜோதிஷம், கைரேகை சாஸ்திரம், சாமுத்திரிகா இலட்சணம் சகுன சாஸ்திரம், சரசாஸ்திரம் என்பன போன்றவையை நம் ஆன்ருேர்கள் வகுத்துத் தந்துள்ளனர்.

இந் நாளில் ஜோதிஷம், கைரேகை சாஸ்திரம் ஆகியவிரண்டுமே பெருவழக்கில் உள்ளன. மேலைத் தேயத்தவர்கள் கூட — முக்கியமாக அமெரிக்கர்கள் — நவீன விஞ்ஞானக் கருவிகளான கம்பியூட்டர் தூர தர்சினி ஆகிய சாதனங்களைப் பயன்படுத்தி மிகவும் நுணுக்கமான ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர். சாமுத்திரிகா லட்சண உபயோகம் இன்னமும் அதற்குரிய அந்தஸ்த்தைப் பெறவில்லை. பண்டைக் காலத்தில் கிரேக்கர்களிடையே அது வழங்கி வந்து பின்னுல், ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பரவியிருக்கிறது. மேலைநாட்டில் சாமுத்திரிகா லட்சணத்தை அறிந்து நூல் எழுதியவர்களுள் அரிஸ்டாட்டில் பிளாஷ்டோ ஆகியோர் முக்கியமானவர்கள். சாமுத்திரிகா லட்சணம் ஒரு சாஸ்திரமேயாகும் என்பதை நிரூபித்து லவாதர், சார்ல்ஸ் டார்வின் ஆகியோர் எழுதியிருக்கிறுர்கள். 'புதிய சாமுத்திரிகா லட்சணம்' (The New Physiognomy) என்ற நூலை சாமுவேல் வெல்ஸ் எழுதியுள்ளார்.

சாமுத்திரிகா லட்சணம் உடற்கூறு சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டது. மனே வேறுபாடுகளுக்கமைய புறத்தோற்ற உறுப்புக்கள் அமையும். சிலர் அழகாக இருக்கிறுர்கள்; ஆனுல் வசீகரம் இல்லை. வேறு சிலர் சுமாராக இருந்தாலும் ஒருவித காந்த சக்தியை, செந்தளிப்பை அவர்களிடம் காண முடிகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உடலின் ஒவ்வோர் உறுப்பின் அசைவையும் மூளை அல்லது உள்ளம் என்னும் அறிவு கட்டுப்படுத்தி நடத்துகிறது. நாளடைவில் இந்த மனேசிருஷ்டி உறுப்புக்களில் நிரந்தரமாக நிலை பெற்று விடுகிறது. உதாரணத்திற்கு தேகப்பயிற்சி செய்வோரைக் கூறலாம். நிலைக் கண்ணுடியின் முன் நின்று கொண்டு தேகாப்பியாசம் செய்கையில் இடை சிறுத்து, மார்பு அகன்று, தோள்கள் விம்மிப் புடைத்து வருவதாக ஏகாக்கிரக சித்தத்துடன் கற்பனை செய்துகொண்டு அப்பியாசம் செய்கிறுர்கள். காலப்போக்கில் அவர்கள் விரும்பியவாறே உறுப்புக்கள் அமைந்து விடுகின்றன. மனசினுல் உறுப்புக்களை உருவாக்குவது போல உறுப்புக்களின் அமைப்பு லட்சணங்களைக் கொண்டு ஒருவரின் மனப்பாங்கையும் குணுதிசயங்களையும் அறிந்து கொள்ளலாம். இதுதான் சாமுத்திரிகா லட்சண சாஸ்திரம். நேரில் முழு உடலையும் காணுத ஒரு மனிதனுடைய அங்கம் ஒன்றை மட்டும் பார்த்துவிட்டு அவனுடைய முழு உருவத்தையும் சிருஷ்டித்துக் காட்டிய தாகக் கூறும் சம்பவங்களை மேல்நாட்டுத் துப்பறியும் நாவல்களின் (சேர். லொக் ஹோம்ஸ்) காணலாம். சீதை அசோகவனத்தில் சிறையிருந்த காலத்தில் அவள் இராவணனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்ததே இல்லையாம். குனிந்த தலை நிமிராமல் இருந்த அவள் அவனுடைய பாதங்களை மட்டுமே பார்த்திருந்தாளாம். எனினும் இராவண வதம் ஆகி நீண்ட காலத்திற்குப் பிறகு அவள் அயோத்தியில் இருந்த நாளில் கைகேயியின் மகள் வற்புறுத்தலுக்கிசைந்து இராவணனுடைய உருவத்தைத் தத்ரூபமாகப் பூமியில் வரைந்து காட்டினுளாம். அதுவே அவள் இரண்டாவது தடவை வனவாசம் போக நேர்ந்தது என்று தமிழ்ச் சரித்திரத்தில் ஒரு கதை உண்டு.

தமிழில் காணும் சாமுத்திரிகா லட்சண நூல்கள் எல்லாம் முருகன் அகத்திய மாமுனிக்கு உபதேசித்த வகைகளாகவே காணப்படுகின்றன.

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரையின் ஆதிகர்த்தா அகத்தியர். தங்களிடம் தீக்ஷை பெறுகிறவர்கள் குறை ஏதும் இல்லாத திடமான ஆரோக்கியம் பெற்றவர்களாகவே இருத்தல் அவசியம் என்பதை சித்தர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். இதை அடைவதற்கு, ஆசனங்கள், பந்தங்கள், முத்திரைகள், கிரியைகள் பிராணாயாமம் ஆகிய வற்றை வகுத்தளித்துள்ளனர். இது மட்டுமல்லாமல் சிஷ்யர்களாகச் சேருபவர்களுக்கு இன்ன இன்ன அங்க லட்சணங்கள் பொருந்தியிருக்க வேண்டுமென்பதையும் அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். சமீப காலத்தில் வாழ்ந்த ராமகிருஷ்ண பரமஹம்சரும் சீடர்களின் அங்க லட்சணங்களை அவதானிப்பதில் முக்கிய கவனம் செலுத்தினார். முக்கியமாக முதலில் நேத்திரங்களைக் கவனிப்பார். தாமரை இதழ்கள் போன்ற கண்களையுடையோர் சாத்வீக குணமுடையோர். எருமையின் கண்களையுடையோர் காமவெறி பிடித்தவர்கள். யோகியின் கண்கள் புருமத்தியை நோக்கிய கீழ் முகமாகவும், செந்நிறமாகவுமிருக்கும்.. காதவோடு நீண்டும் இருக்கும். சம்பாஷணையின்போது அடிக்கடி கடைக்கண்ணால் பார்ப்பவர்கள் புத்தி ஜீவிகள். ஈஸ்வர தியானம் உடையோரின் மணிக்கட்டுகள், முழங்கைகள், முழங்கால்கள், தோள் மூட்டுகள் பருத்து இருக்காமல் எந்தப் பக்கமும் வளைந்து திரும்பக்கூடிய முறையில் அமைந்திருக்கும். சரீரம் மென்மையாகவிருக்கும். ஒருவருடைய புத்திதீட்சண்யம் நல்ல வழியிலா அல்லது கெட்ட வழியிலா உபயோகப்படுத்தப்படும் என்பதை அறிய அவருடைய முன்கையை — அதாவது முழங்கை தொட்டு நுனிவிரல் வரை எடை போட்டுப் பார்ப்பார். அப்பொழுது கையை தளர்ச்சியாக வைத்திருக்கச் சொல்வார். பாரமாயிருந்தால் லௌகீகன்; இலேசாகவிருந்தால் இறைவழிபாடுடையோன். சுவாமி பிரேமானந்தாவை முதன் முதலில் கண்டபொழுது இப்படி ராமகிருஷ்ணர் சோதித்தார்.

சிஷ்யர்களின் அங்க லட்சணங்களை அவதானிப்பதோடு நில்லாமல் அவர்களின் தேக உபாதைகள் - அதாவது மலசலம் கழிக்கும் விதம், துயில் கொள்ளும் முறை, நடக்கும் விதம் ஆகியவற்றையும் ராமகிருஷ்ணர் கவனிப்பாராம். லோகாயுத மனிதன் தூங்குவதற்கும், யோகி தூங்குவதற்கும் வித்தியாசமுண்டு. சாதாரண மனிதன் சலம் விடும்பொழுது இடதுபக்கம் சாய்ந்தே நீர் பாயும்; யோகியினுடையது வலதுபக்கம் சாயும். யோகியின் மலத்தை பன்றிகள் உண்ணாது. பெண்களில் இருவகை உண்டென்பார் ராமகிருஷ்ணர். அவ் வகையினர் வித்தியா சக்திகள், மங்கையர்க்கரசி, திலகவதி போன்றவர்கள். அவித்தியா சக்திகள் சூர்ப்பனகை போன்றவர்கள். உண்டி சுருக்கி, புலன்களை அடக்கி, சொற்ப நேரம் தூங்கி, ஆத்மீக சம்பாஷணைகளில் நாட்டமுடையவர் வித்தியா சக்திகள். இதற்கு நேர்மாறானவர்கள் அவித்தியா சக்திகள். சுவாமி விவேகானந்தரின் அங்க இலட்சணங்களை அவதானித்த ராமகிருஷ்ணர் யோகியின் பல அம்சங்களை அவரிடம் கண்டார். ஆனால் ஒரு குறை. தூங்கும் பொழுது சுவாசம் பெருமூச்சுடன் கூடியதாக இருந்ததாம். இத்தகையோர் அற்பாயுசு உடையோரென யோகிகள் கூறுவர்.

சாமுத்திரிகா இலட்சண சாஸ்திரம் பழங்கதையாய், கனவாய் மெல்லென மறைந்து போகாமல் காப்பது சாஸ்திர விற்பன்னர்களின் தலையாய கடமை. அது சநாதன தர்மத்திற்குச் செய்யும் தொண்டு. ஏட்டுப் பிரதிகளாயும் செல்லரித்த புஸ்தகங்களாயும் கிராம மூலை முடுக்குகளில் கவனிப்பாரற்றுக் கறையான் பிடிக்கும் நிலையில் உள்ளவற்றை வெளிக்கொணர்ந்து அச்சுவாகனமேற்றுவதற்கு சுவாமிநாத ஐயர் போன்ற பலர் முன்வரவேண்டும்.

## உண்மை

வேடங்கள் உள்ளே
மறைக்கப்பட்ட
பெலவீனங்களையும்
பயங்கரங்களையும்
அறிய விரும்பி
வேடத்திரையை
விரைந்தே கிழித்தேன்
உண்மையைக் கண்டு
வேடங்கள் எல்லாமே
வெளி வேஷங்கள் அல்ல.

சினச்சானு
தென்-மட்டுவில்

# வளரும் விண்ணியல்

## 1

[ சி. சுப்பிரமணிய ஐயர் F.R.A.S. அவர்களால் எழுதப்பட்ட 'விண்ணூல் விரிவு' என்னும் நூலை காலத்துக்கேற்ற சில திருத்தங்களுடன் வெளியிடுகிறோம்.]

விண்ணூலென்பது ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியன எவ்விதம் தோன்றினவென்பதையும், அவை எவ்விதம் அசைகின்றனவென்பதையும், அவற்றின் திண்மை, கவர்ச்சி, பருமன், தூரம், உஷ்ணம் ஆகியனவற்றையும், அவை ஓர் குறிக்கப்பட்ட காலத்தில் ஆகாயத்தில் எவ்விதம் இருக்குமென்பதை அறியும் வகையையும் கிரகணங்கள் நிகழும் காலத்தையும் தெரிவிக்கும் ஓர் சிறந்த நூலாகும். இந்நூல் மனிதருடைய வாழ்நாளில் ஏற்படப் போகின்ற நன்மை, தீமைகளைப்பற்றி முன்னரே அறிவிக்கும் சோதிடத்திற்கு (Astrology) முதற் கருவியாகவும், துணைக்கருவியாகவுமிருப்பதாலும், மற்றைய சாஸ்திரங்களின் தொடர்பினையுடையதாலும், இது சாஸ்திரங்களுக்கெல்லாம் ராணியாகக் (The Queen of the Science) கருதப்படலாயிற்று. இத்தகைய சிறப்பினையுடைய இந்நூலானது பூர்வீக வானநூல் (Ancient Astronomy) எனவும், தற்கால வானநூல் (Modern Astronomy) எனவும் இரு பிரிவுகளாகக் கொள்ளப்படத் தக்கதாகும். இவ்வித நூலானது இந்தியாவில் செழித்தோங்குமுன் எவ்விடத்தில் தோன்றியிருக்குமென்பதை ஆராய்வோம்.

இந்தியாவில் ஆரியர் (Aryans) குடியேறமுன் வானநூல் சம்பந்தமான சில கொள்கைகள் இருந்திருக்கக் கூடுமேயன்றி வானநூல் என்ற நிலையில் வளர்ந்திருந்ததாகத் தெரியவில்லை. ஆரியர் எப்பொழுது வந்தார்களோ அப்பொழுதே விண்ணூலும் அவர்களுடன் வந்த ஓர் கலையாக விருக்கிறது. ஆகவே அவர்கள் இந்தியாவுக்கு வரமுன்பு எங்கிருந்தார்களென்பது அறியப்பட வேண்டியதாகும்.

பிறசாதியினருடைய பாஷைகளையும், சமயக் கோட்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் நன்கு ஆராய்ந்த மாக்ஸ் முல்லர் (Max Muller), ஜக்கோபி (Jacobi), உவில்சன் (Wilson) சேர். உவில்லியம் ஜோன்ஸ் (Sir. William Jones) போன்ற சரித்திர ஆராய்ச்சியாளர் மத்திய ஆசியா (Central Asia) விலிருந்தே ஆரியரும், சீனரும் (Chinese) பேசிய (Persians) ரும், பிறரும் பிரிந்து சென்றதாகக் கூறியிருக்கிறார்கள். இம் மத்தியாசியாவானது பல மலைத்தொடர்களும், பாலைவனங்களும், பீடபூமிகளும், கடல்களும், ஏரிகளும், ஆறுகளும் பொருந்தியுள்ளதும் பல சாஸ்திரங்கட்குப் பிறப்பிடமாய்க் கருதப்படுவதுமான ஓர் செழிப்பு வாய்ந்த இடமாகும்.

இவ்விடத்திலிருந்த பூர்வகுடிகள் ஆதியில் காட்டுப் பொருள் சேகரித்தல், மீன் பிடித்தல், வேட்டையாடல், மந்தை மேய்த்தல் முதலிய தொழில்களைச் செய்துகொண்டு இருந்தார்கள். ஆதலால் அவர்கள் சீவியம் நாடோடிச் சீவியமாயிருந்தது. காலஞ் செல்லச் செல்ல அவர்கள் சீர்திருந்திக் கமத்தொழில் செய்யவும் அறிந்தார்கள். அத்துடன் அவர்கட்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தைச் சில கலைகளை வளர்ப்பதிலும் செலவு செய்தனர். அவ்வாறு வளர்க்கத் தொடங்கிய கலைகளில் முதலாவது கலை விண்ணூலாகும். ஏனெனில் இரவில் இளைப்பாறியிருக்குங் காலங்களில் ஆகாயத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்கள் அவர்களின் கண்களைக் கவர்ந்திருக்காமல் இருக்க முடியாது.

இவர்கள் இரவில் நேரமறிதற்கு நட்சத்திரங்களையும் உதவியாகக் கொள்ளத் தொடங்கினர். பொழுது அஸ்தமித்ததும், குறித்த ஓர் நட்சத்

திரம் உதயமாவதையும், பின் நாட் செல்லச் செல்ல முந்தி உதயமாவதையும், பின்னர் இரவில் தோற்றுமலிருப்பதையும், ஓரளவு காலஞ் செல்ல மறுபடியும் பொழுது அஸ்தமித்தவுடன் குறித்த நட்சத்திரம் உதயமாவதையும் அறிந்தனர். அப்பொழுது அக்கால வெல்லையில் சூரியன் ஆகாய வெளியை ஒருமுறை சுற்றி வந்ததாக எண்ணி அக்கால வெல்லையை ஒரு வருடமென்றுங் கணக்கிட்டனர், இது வருடத் (Year) தொடக்கமாகும்.

இவ்வருட எல்லையிற் சந்திரன் பூமியைப் பன்னிரு முறை சுற்றி முடிப்பதையும் அவதானித்தனர். இதனுல் வருடத்தைப் பன்னிரு பிரிவுகளாக வகுத்து, ஒவ்வொரு பிரிவையும், மாதக் கணக்காகவும் கணக்கிட்டனர். இது மாதத் (Month) தொடக்கமாகும்.

பின்னர் வருடத்தைப் பன்னிரு மாதங்களாக பங்கிட்டுக் கொண்டதுபோல ஆகாய வெளியையும், பன்னிரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிலுமுள்ள நட்சத்திரக் கூட்டங்களின் அமைப்புக்குத் தக்கவாறு தாங்கள் அறிந்த பொருட்களின் பெயரை அவற்றிற்கு இட்டனர்.

எவ்வாறெனில் ஆடு போலமைந்த நட்சத்திரக் கூட்டத்திற்கு மேட (Aries) மென்றும், எருது போலமைந்த கூட்டத்திற்கு இடப (Taurus) மென்றும், இரட்டைப் பிள்ளைகள் போலமைந்த கூட்டத்திற்கு மிதுன (Gemini) மென்றும், புற்றில் வசிக்கும் நண்டுபோலமைந்த கூட்டத்திற்கு கர்க்கடக (Cancer) மென்றும், மிருகங்களைக் கொல்லும் சிங்கம் போலமைந்த கூட்டத்திற்கு சிங்க (Leo) மென்றும், ஆடு மாடுகளுக்கு உணவு கொடுக்கக் கையில் வைக்கோல் வைத்திருக்கும் கன்னிகை போன்ற பாவனையிலமைந்த கூட்டத்திற்குக் கன்னி(Virgo) யென்றும், பொருட்களின் அளவையறிதற்கு உபயோகிக்கப்படும் தராசு போலமைந்திருக்கும் கூட்டத்திற்குத் துலா (Libra) மென்றும், கொடுக்கில் விஷமுடைய தேள் போலமைந்த கூட்டத்திற்கு விருச்சிக (Scorpis) மென்றும், மிருகங்களை வேட்டையாடுவதற்கு உபயோகிக்கும் வில்லு போலமைந்த கூட்டத்திற்குத் தனுசு (Sagittarus) வென்றும், முதலை போலமைந்த கூட்டத்திற்கு மகர (Capricorn) மென்றும், நீர் வார்த்தற்கு இன்றியமையாத குடம் போலமைந்த கூட்டத்திற்கு கும்ப (Aquarius) மென்றும், மீன் போலமைந்த கூட்டத்திற்கு மீன (Pisces) மென்றும் பெயரிட்டனர். இதுவே பன்னிரு இராசிப் (Signs of the Zodiac) பிரிவுகளாகும்.

(தொடரும்)

கலை வளர கலைஞர்கள் வாழ கலை இன்பம் பெருக!

துந்துபி புத்தாண்டு துணைநின்று வாழ்த்துகிறோம்!

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்

ராஜா — யாழ்நகர்
வசந்தி — மட்டுநகர்
சாந்தி — வவுனியா

சரஸ்வதி — திருமலை
நாதன்ஸ் — மன்னார்

மக்கள் இன்பமே எமது நோக்கம்

# வாழ்க்கையும் சோதிடமும்

சோதிடம் ஒரு உயர்தரமான விஞ்ஞானம். வேதங்கள் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமை யானது சோதிடம். கிரகங்களின் நிலையை அளவிட்டு பூமியில் ஏற் படும் நிகழ்ச்சிகளை விளக்குவது தான் சோதிடம். உண்மையில் சோதிடம் என்பது நட்சத்திரங் களின் தூது (Stellar Message) என்பதாகும்.

''வான சாஸ்திரம் சிறப்புடையது. ஆனால் அது தன் முழுமதிப்பையும் வாழ்க்கைக்கு கொடுத்து உதவவேண்டும். அப்படியல்லாது அது வெறும் பூகோளத்தையும் வானவெளியையும் போல் நிலையாயிருத்தல் கூடாது'' என்று எமர்சன் கூறியுள்ளார்.

எனவே வானசாஸ்திரம் உலக வாழ்க்கையுடன் சம்பந்தப்படும் போதுதான் சோதிடம் ஆரம்பமாகிறது.

கரணம் தப்பினுல் மரணம் என்பார்கள். இக்கரணத்தை பல்லாயிரம் நட்சத்திரங்களும், நெறி தவருமல், பாதை தவருமல், பல்லாயிரம் வருஷங்களாகச் செய்துகொண்டிருக்கின்றன. இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் செய்யக் காத்திருக்கின்றன. அவைகளின் நெறியும் பாதைகளும் தவறுமா? இல்லை. மனிதன் தான் அவைகளின் நெறியையும் பாதைகளையும் விளைவுகளையும் விளங்கமுடியாமல் தவறுகிருன்.

சோதிடம் விதியை முன்கூட்டியே கூறிவிடுகிறது. இதனுல்தான் கர்மம் முன்னே வருகின்றது. கடவுள் பின்னே வருகின்ருன். கிரகங்களின் திருவிளையாடல்களே ஒருவனின் வாழ்க்கையில் மர்மமாக அமைந்து விடுகின்றது. சோதிடமோகிரகங்களின் திருவிளையாடல்களை புட்டுக் காட்டுகின்றது.

சோதிடம் காரியத்தையும் காரணத்தையும் விளக்கப்படுத்துவதனுல் வாழ்க்கையில் எதுவும் தற்செயலாக நடப்பதில்லை. எமக்கு முன் கூட்டியே உண்மை தெரியாதபடியால் ''தற்செயல்'' ''விபத்து'' என்கிறேம். வாழ்க்கையில் முன் கூட்டியே உண்மைதெரிந்து விட்டால் சஞ்சலம் ஏது? சரியாக வழிகாட்டினுல் வேதனையும் வேண்டுகோளும் எதற்கு? இதற்குத்தான் சோதிடம் உதவவேண்டும். நீந்தத்தெரியாத ஒருவன் ஒரு ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது. வள்ளமோ அல்லது ஓடமோ எதுவும் கிடையாது. பயத்துடன் ஆற்றில் இறங்கி நடந்து சென்றபோது நீர் கழுத்து மட்டத்திற்குமேலும் வந்தபடியால் கரைக்குத் திரும்பி வந்துவிட்டான். சஞ்சலமும் வேதனையும்

சா. நிர்மலா,
தம்பசிட்டி, — பருத்தித்துறை.

கொண்டவேளை ஒரு முதியவர் வந்தார். அந்த ஆற்றின் விபரங்களை நன்கு அறிந்திருந்தார் அவர். இவனின் நிலையை அறிந்த அவர் அதைக் கடக்கும் வழியையும் கூறினுர். அதன்படியே நடந்து செல்லும்போது ஒரு கற்பாறை அவன் கால்களுக்கு அகப்பட்டது. அதில் ஏறிநின்று ஒரு உன்னலுடன் பாய்ந்தபோது, ஆழமான பகுதி கடந்து வேருெரு பாறை கால்களுக்கு அகப்பட்டது. அதை அடைந்ததும் அங்கிருந்து நடந்துசென்று எதிர்க்கரையை

**ஆண்டுமலர் கட்டுரைப் போட்டியில்**
**இக்கட்டுரை 1-ம் பரிசு**
**பெறுகின்றது.**

அடைந்தான். அவனுக்கு உண்மை தெரிந்தபடியால் சஞ்சலமின்றி ஆற்றைக்கடக்க முடிந்தது. முதியவரும் சரியானபடி வழிகாட்டியதால் உண்மை புலனுகியது. இதேபோல் சோதிடமும் உலக வாழ்க்கைக்கு முக்கியமான ஒரு வழிகாட்டியாகும்.

சோதிடம் ஒரு கலையென்று பலர் கருதுவார்கள். இவர்களுக்கு வைத்தியமும் கலையாகிப் போய் விட்டது. பேச்சுத்தான் ஒரு கலை. சோதிடப் பலன்களை எடுத்துக் கூறும் போது பல அர்த்தங்களைக் குறிக்கும் சொற்களையும் வார்த்தை ஜாலங்களையும் கையாளுவதுதான் கலையாகும். உண்மையில் சோதிடம் ஒருகலையல்ல; வைத்தியத்தைப்போல் இதுவும் ஒரு விஞ்ஞானமே!

என்னதான் வைத்தியத்துறை நன்கு முன்னேறிய போதிலும் தவறுகளும் தப்புகளும் கலந்திருக்கின்றன. இதற்கு சோதிட விஞ்ஞானமும் விதிவிலக்கல்ல. நோய்களையெல்லாம் முன் கூட்டியே அறிந்திருந்தும் அவைகளையெல்லாம் மாற்றமுடிகிறதா? இங்கேதான் கர்மம் தலை தூக்குகிறது. வழக்கு ஒன்றுதான். இருபக்கத்து சட்டத்தரணிகளின் வாதங்கள் மாறுபட்டவையாயிருக்கின்றன. தீர்ப்பும் வேறுவிதமாக அமைகின்றது. வழக்கு அப்பீல் கண்டபோது கீழ் கோட்டில் வழங்கிய தீர்ப்புக்கு மாறாகத் தீர்ப்பு வழங்கப் படுகிறது. நோயின் அறிகுறிகள் ஒன்று தான். ஆனால் நோயைத் தீர்மானிப்பதில் வைத்தியங்களுக்குள் கருத்து வேற்றுமை. சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவனும் சரி, இல்லாதவனும் சரி, வாழ்க்கையில் அவர்கள் தப்பமுடியாமல் சிக்கிக்கொள்ளும் சம்பவங்கள் பல. அவைகளையெல்லாம் முன் கூட்டியே அறிந்திருந்தால் எப்படியிருக்கும்? சோதிடத்தில் தொட்ட இடமெல்லாம் நவமணிகள் தட்டுப்படுகின்றன. அவைகளை எடுத்துரைக்கும் சோதிடர்கள்தான் நாட்டில் குறைவு.

தத்துவங்கள் சில சமயங்களில் சுண்டங்காயாயிருப்பதுண்டு. ஏனெனில் வாழ்க்கை முறை அனுபவங்களுக்கு அவை ஒத்து வருவது மிகக் குறைவு. சோதிடமோ இல்வாழ்க்கையிலும் மிக ஒத்துவருவதுடன், பின்னிப் பிணைந்துவிட்டது. நாம் ஒன்று நினைக்க ஆண்டவன் வேறொன்று நினைக்கின்றான், விதியை மதியால் வெல்ல முடியுமென மமதையுடன் செயலாற்றும் போது ஆண்டவன் 'பாவம் மனிதன்' என்கிறான். அதை உலகிற்கும் உணரவைத்து விடுகிறான். அதன் விளக்கங்களை சோதிடம் மூலம்தான் முன் கூட்டியே அறிய முடிகிறது. 8-ம் வீட்டதிபதி 2-ல் நின்றால், பல மரணங்களுக்கு ஒரு மரணம் காரணமாக அமைந்து விடுகின்றது. ஆணவமும் அறியாமையும் சோதிட விளக்கத்தை ஏற்க மறுக்கிறது. விதியின் விளையாட்டிற்குப் பின் தான் விளக்கங்கள் புலனாகின்றன.

மரணம் என்பது நிச்சயமாகிறது. அதற்கு முன்பு பல பணிகள் நிறைவேற்றியாக வேண்டும். அது எப்போது நடக்கும் என்பது புரியாத புதிராக இருக்கிறது. சலனங்களும் இடையூறுகளும் தொடர்கின்றன. காலமும், பணமும், பிரயாசையும் செலவழிந்தன. வெற்றியின் அறிகுறி மர்மமாய் அமைந்து விட்டது. தொடங்கிய காரியம் எப்படி அமையும்? வாழ்க்கைப் பாதையோ மிகவும் நீளமானது. அதில் சந்திப்புகளும் மிக அதிகம். அவைகள் நன்மையானவையா அல்லது தீமையானவையா என்பதை முன்கூட்டியே அறிந்து விட்டால் உள்ளத்தில் ஒரு தெம்பு பிறக்கிறது. எப்பிரச்சினையையும் சந்திக்கத் தயாராகிறது மனம். தொழில் இல்லையே! என்ன செய்வது? ஏதாவது தொழில் கிடைக்குமா என ஏங்குகின்றது ஒரு மனம். பரீட்சை நெருங்குகின்றது. அதன் முடிவு எப்படியிருக்கும்? சகல வசதிகளும் இருந்தும் இல்வாழ்க்கை அமையவில்லையேயென விரக்தியடைகிறது ஒரு உள்ளம். சகல சிறப்புகளும் கொண்ட ''பாக்கிய''த்திற்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்குமா? நீதிமன்றத்திலே இரத்தம் நேருக்கு நேராக மோதிக் கொள்கிறது. உறவு இரத்தம் பகையாக மாறுவதே விதியின் விளையாட்டாகும்.

ஒருவருடைய குணதிசயங்களை, அவருடைய சாதகத்திலிருந்து அறியலாம். அவரின் குணதிசயங்கள் எமக்கு ஒத்து வரவில்லையென்றால் ஒதுங்கி விடுவதுதான் நல்லது.

ஒரு காடு அழிந்தால்தான் ஒரு வயல் உருவாகும் என்பது உண்மை. அது எப்போது? சந்திர மண்டலத்திற்குப் போய் வந்த மனிதனுக்கு தன்னைப் பிடித்திருக்கும் வாதநோய் எப்போது விலகும் என்ற எண்ணம் ஒன்றே அவன் நிம்மதியை— வாழ்க்கையைக் கொல்வதற்குப் போதும்.

இப்படியாக வாழ்க்கையின் எந்தத் திருப்பத்தையும், சம்பவங்களையும் ஆராயும்போதுதான் சோதிடத்தின் சிறப்புகள் புலனாகின்றன. இதனால் சோதிடமும் வாழ்க்கையும் இரண்டறக் கலந்து விடுகின்றன.


**ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷண யந்திரம்**

அனைவர்க்கும் பணவசதி ஏற்படுவதற்கு விசேட சக்திவாய்ந்த மேற்படி ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷண யந்திரம், அஷ்டலக்ஷ்மி ஐஸ்வர்ய யந்திரம், ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனாகர்ஷண ரக்ஷை ஆகியன தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

எஸ். சுப்பிரமணிய ஐயர்
சிவசக்தி ஜோதிஷ நிலையம்,
கருங்குளம் - 628615
இந்தியா.

# அறிவுச் சுரங்கம் இல. 13

வாசக நேயர்களை குறிப்பாக மாணவர்கள் பல்துறை நூல்களையும் வாசிக்கத்தூண்டிப்பொ அறிவை வளர்க்க வழிகுப்பதே இப்போட்டியின் நோக்கமாகும்.

**போட்டி நிபந்தனைகள்**

1. விடைகள் தபால் அட்டையிலேயே ஒட்டி அனுப்பவேண்டும்.
2. விடைகள் 1-5-1982க்குள் எமக்குக் கிடைக்க வேண்டும்.
3. சந்தா நேயராக இருப்பவர்கள் தமது சந்தா எண்ணைக் குறிப்பிடவேண்டும்.
4. இது பற்றித் தனிப்பட்ட கடிதப் போக்கு வரத்துக்கள் எதுவும் ஏற்கப்படமாட்டா.
5. முதலாவது பரிசாக ரூபா: 20/-ம் இரண்டாவது பரிசாக 6 மாதச் சோதிடமலரும், மூன்றாவது பரிசாக 3 மாதச் சோதிடமலரும் இனமாக அனுப்பிவைக்கப்படும். சந்தாதாரர்களாயின் பரிசுத்தொகை இருமடங்காகக் கிடைக்கும்.

அனுப்பவேண்டிய முகவரி:

அறிவுச்சுரங்கம் இல. **13.**

சோதிடமலர்

மட்டுவில் — சாவகச்சேரி.

1. சோ
2. யா
3. ச
4. கா
5. சு
6. வி
7. பா
8. மி
9. மா
10. பூ

பெயர் ..........................................

விலாசம் ..........................................

..........................................

1. வேதங்கள் ஆறில் காலங்கள், கோள்கள் பற்றிக் கூறும் அங்கம் எது?
2. இடையர் குலத்திற்கு இப்படியும் ஒருபெயர் உண்டு.
3. சோதிடப்படி ஒரு இராசியில் 2½ வருடம் சஞ்சரிக்கும் கிரகமெது?
4. தமிழ்நாட்டில் பொலிஸ் படையை இப்படி யழைக்கின்றனர்.
5. களத்திரகாரகன் எனப்படுபவர் யார்?
6. திருவோண நட்சத்திரத்திற்குரிய அதிதேவதை யார்?
7. கேதீஸ்வரத்தின் சிறப்புக்குக் காரணமான தீர்த்தத்தின் பெயர் என்ன?
8. தமிழ்மொழியில் வறுமையின் மறுபெயர் என்ன?
9. முருகப்பெருமான் பழனிக்குப் போவதற்குக் காரணமாயிருந்த கனி எது?
10. முப்பூரங்களில் இதுவுமொன்று.

**இல. 12 இன் விடைகள்:**

| | |
|---|---|
| 1. கம்பர் | 6. 1470 |
| 2. PISCES | 7. சுக்கிரன் |
| 3. மார்ச் 23 | 8. திருவோணம் |
| 4. வௌவால் | 9. மீனம் |
| 5. அபிராமி | 10. கும்பம் |

**பரிசில் பெறுப்வர்:**

க. தெய்வேந்திரன்
சோபாலபிட்டி
மட்டுவில்நாடு
பூநகரி

(இப்போட்டியில் ஒருவர் மட்டுமே சரியான விடையெழுதியிருந்தமையினால் ஒரு பரிசு மட்டும் கொடுக்கப்படுகிறது.)

கண்ணையும் கருத்தையும் கவரும் காலலத்திற்கேற்ற
மணிப்புரி, சங்கம், சாதனு, சிங்கப்பூர்
சாறி வகைகளுக்கும்
ஆடவர்க்கான சகல சேட்டிங், சூட்டிங்
பிடவை வகைகளுக்கும்

சிறந்த இடம்

# ஈஸ்வரராஜ்

ரெக்ஸ்ரைல்ஸ்

E.B. 11, மார்க்கட். போன் 227 சாவகச்சேரி.

---

வண்ணத் துணியுகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க

ஏற்றதோர் பிடவை நிலையம்

# குறைஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

5, நவீன சந்தை, போன்: 249 சாவகச்சேரி.

பாரதி நூற்றுண்டில்

பாலர் வகுப்புமுதல் பட்டதாரி வகுப்பு வரையிலான
பாடநூல்களுக்கும்,

"சோதிடமலர் விநியோகத்திற்கும்"

# பூபாலசிங்கம் புத்தகசாலை

4, பஸ் நிலையம், — யாழ்ப்பாணம்.

போன்: 7631

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

மேலும் இதுவரை சந்தாவைப் புதுப்பிக்காத அன்பர்கள் ஐந்தாவது மலருக்கான சந்தா ரூபா 39/60 அனுப்பிப் பதிவு செய்வித்துக் கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 39-60 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல்வழி) | | வருட சந்தா | ,, 70-00 |
| | இந்தியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 96-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 126 00 |
| | இங்கிலாந்து | (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |

ஆண்டுமலர் வேண்டுவோர் ரூ. 6-80 அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. No. Q. B. 59/300/183/82

உங்கள் முதலீட்டிற்கு

**27% வட்டி**

நாங்கள் வழங்குகின்றோம்.



அத்துடன் உங்களுக்கு

**ஆயுள் காப்புறுதி இனாம்!**

**வீட்டுப் பாவனைப் பொருட்கள்**

(பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)

(சேவை)

நாங்கள் உங்களுக்கு **42** வருடங்களாக சேவை செய்து வருகின்றோம் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

* நம்பிக்கை

* பாதுகாப்பு

* ஸ்திரதன்மை

# த பிறின்ஸ் கம்பனி லிமிட்.,

249, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

☎ 7680

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
ThirukkanithaNilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280